Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.

30°c 28°c




# கொடுத்த வாக்குறுதியை மஹிந்த மறக்கக்கூடாது

## காங்கிரஸ் தமிழ் நாட்டுத் தலைவர் ஞானதேசிகன் தெரிவிப்பு

சென்னை, ஜூன் 6

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியாவிடம் 13 'பிளஸ்' என்று உறுதியளித்திருக்கிறார். இதை அவர் மறந்திருக்க மாட்டாரெனக் கருதுகிறோம். 13 'பிளஸ்' என்று சொல்லப்பட்டது இப்போது 13 'மைனஸ்' என்ற நிலை ஆகிவிடக்கூடாது. தீர்வுக்கு 13ஆவது திருத்தமே அடிப்படையாக இருக்க முடியும். தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா இராஜதந்திர ரீதியான அழுத்தங்களைக் கொடுக்கும்''

- இவ்வாறு நேற்று 'உதயனி'டம் கருத்து வெளியிட்டார் இந்திய காங்கிரஸ் கட்சியின்தமிழக மாநிலத் தலைவரும், இந்திய நாடாளுமன்ற கீழ் சபை உறுப்பினருமான பி.எஸ்.ஞானதேசிகன்.



13ஆவது திருத்தத்திலுள்ள முக்கிய அதிகாரங்களை நீக்குவதற்கு இலங்கை அரசு தயாராகி வருவதாக செய்திகள் வெளிவந்திருப்பது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஞானதேசிகன், 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக்கொண்டே தமிழர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென்றும், அதுவேதான் இந்திய அரசின் நிலைப்பாடு எனவும் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் கூறியதாவது:

தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு 13 'பிளஸ்' என்று கூறி, 13ஆவது திருத்தத்துக்கும் மேலே செல்லப்போவதாக ஜனாதிபதி ராஜபக்ஷ, எமது அமைச்சர் கிருஷ்ணாவிடம் ஏற்கனவே உறுதியளித்திருப்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்தியாவிடம் அளிக்கப்பட்ட அந்த உறுதிமொழியை அவர் நினைவில் வைத்திருப்பார் என்று நாம் உறுதியாக இருக்கிறோம்.

தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா இராஜதந்திர ரீதியான அழுத்தங்களைக் கொடுக்கும். இலங்கைத் தமிழர்கள் அதுபற்றி கவலைப்படத் தேவையில்லை' என்றார் ஞானதேசிகன். (த-5)

## 13இற்கு எதிராக மன்னாரிலும் கையெழுத்து வேட்டை

கொழும்பு, ஜூன் 6

வடமாகாண சபைத் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தலைமையில் இடம்பெறும் கையெழுத்து வேட்டை வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் நேற்றுப் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தத்துக்கு எதிரான துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டு மக்களிடம் கையெழுத்துக்களும் பெறப்படுகின்றன.

இதன்போது அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் எனக் கூறப்படும் ஒருவரினால் அரச திணைக்களங்களின் பணியாளர்களிடம் கையெழுத்து பெறப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள சகல அரச திணைக்களங்களுக்கும் செல்லும் குறித்த நபர், தான் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மாவட்ட இணைப்பாளர் எனக் கூறிப் பணியாளர்களைப் பலவந்தப்படுத்தி கையெழுத்துப் பெற முயன்று வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.(ஜ-12)

இந்தியன்



பக். 06

மாநில அரசுகளின் ஆதரவு அவசியம்

உலகம்



பக். 07

ஈரான் மீது தடைகள் பொருளாதாரத்தை பலவீனமாக்க அமெ. முயற்சி

விளையாட்டு



பக். 23

அஷ்ரப்புல்லுக்கு இடைக்காலத் தடை

## கொக்குத்தொடுவாயில் குடியமர்ந்த சிங்களவர்களுக்கு கடும் எதிர்ப்பு

முல்லைத்தீவு, ஜூன் 6

கொக்குத்தொடுவாய் கோட்டைக்கேணிப் பகுதியில் அத்துமீறிக் குடியமர்ந்த 10 சிங்களக் குடும்பங்களையும் வெளியேறுமாறு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததைத்

தொடர்ச்சி: பக்கம் 21

## '13' ஐ பாதுகாப்பது இந்தியாவின் பொறுப்பு

### பா.ஜ.கட்சி எம்.பிக்களிடம் எடுத்துரைப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 06

13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பாதுகாத்து நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தியாவுக்கே உள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த இந்திய எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் யாழ். சிவில் சமுகப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

இரு நாள் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிசங்கர் பிரசாத் தலைமை

தொடர்ச்சி: பக்கம் 21

## மாகாணசபைகள் தொடர்பான சட்டவரைவு அமைச்சரவைக்கு

### இன்று அவசரமாகச் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜூன் 6

13ஆவது திருத்தச்சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு முன்னோடியாக மாகாண சபைகள் திருத்தச்சட்டவரைவு (விசேட ஏற்பாடுகள்) இன்று முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் கருதப்பட்டு அமைச்சரவையில் விவாதிக்கப்படவுள்ளது.

ஆளுங்கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. அதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

புதிய (விசேட ஏற்பாடுகள்) யோசனையின்படி, அனைத்து மாகாணசபைகளினதும் அனுமதியுடனேயே திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்ற சரத்து நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பெரும்பான்மையான மாகாணசபைகளினதும் அனுமதியுடன் திருத்தங்களைச் செய்யலாம் என்ற சரத்து சேர்க்கப்படவுள்ளது.

அதேபோல் இரண்டு மாகாண சபைகளை ஒன்றிணைக்க முடியும் என்ற சரத்து முழுமையாக நீக்கப்படவுள்ளது.

இந்த இரண்டு திருத்தங்களுக்கும் இன்று அமைச்சரவை அனுமதி வழங்கும் பட்சத்தில் அது உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பி அபிப்பிராயம் பெறப்பட்டு பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். (த-சி)

## செப்ரெம்பருக்குள் '13' இல் திருத்தம்

### அமைச்சர் விமல் கூறுகிறார்

கொழும்பு,ஜூன் 06

13 ஆவது திருத்தத்திலுள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களில் செப்ரெம்பர் மாதத்துக்குள் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார். உயர் நீதிமன்றம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்றே இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''13 ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களில் திருத்தங்களைச் செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் உயர்நீதிமன்றம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்று திருத்துவதற்கான ஏற்பாடுகளை ஜனாதிபதி மேற்கொண்டுள்ளார்'' - என்றார். (த)

## வாக்காளர் பதிவு சட்டவரைவு அரசமைப்புக்கு உட்பட்டதே

### உயர் நீதிமன்றம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 6

இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களை வாக்காளர் பட்டியல்களில் பதிவு செய்தற்கான விசேட ஏற்பாடுகள் சட்ட வரைவு அரசமைப்பின் விதிமுறைகளுக்கு உயர் நீதிமன்றம் நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு அறிவித்துள்ளது.

இந்தச் சட்டவரைவு அரசமைப்புக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா என்பது குறித்து பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதியரசர் சத்யா ஹெட்டிகே, நீதியரசர் ரோகினி மாரசிங்க ஆகியவர்களைக் கொண்ட ஆயம் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்ததை அடுத்து

தொடர்ச்சி: பக்கம் 21

## தெரிவுக்குழுவை கூட்டுமாறு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜூன் 6

அரசமைப்புத் திருத்தம் மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு

தொடர்ச்சி: பக்கம் 21

## இலங்கை தண்டிக்கப்படவேண்டும்

### பொதுநலவாய விழுமியங்களை மீறியது என்கிறது கனடா

மொன்றியல்,ஜூன் 06

பொதுநலவாயத்தின் விழுமியங்களை கடைப்பிடிக்கும் விடயத்தில் இலங்கை அரசு எதிர்மறையாகவே செயற்பட்டு வருகின்றதென்பதற்கான சாட்சியங்கள் காணப்படுவதால் அவ்வாறு செயற்படும் ஏனைய பொதுநலவாய நாடுகள் தண்டிக்கப்படுவது போலவே இலங்கையும் தண்டிக்கப்படவேண்டும் என்று கனடா தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய உச்சி மாநாட்டில் கனடா கலந்துகொள்வது பற்றி இன்னமும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று கனேடிய அரசின் பொதுநலவாயத் தூதுவர் ஹக் சீகல் தெரிவித்தார்.

எதுவானாலும் கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹர்ப்பர் உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்றே முடிவெடுத்திருக்கிறார் என்றும் சீகல் கூறினார்.(த-ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி வர்த்தகர்களின் முன்மாதிரிக்கு பாராட்டு

## நேற்று புகையிலைப் பொருள்கள் விற்பனை முற்றாக நிறுத்தம்

தென்மராட்சி. ஜூன் 6
உலக சுற்றாடல் தினத்தையொட்டி சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் புகையிலை உற்பத்திப் பொருள்கள் நேற்றுப் புதன்கிழமை விற்பனை செய்யப்படவில்லை. இந்தச் செயலுக்கு அந்தப் பகுதி மக்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.
வெற்றிலை வியாபார நிலையங்களில் கூட வெற்றிலைக் கூறுக்குப் புகையிலை வழங்கப்படவில்லை.
சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையின் வேண்டுகோளுக்கு இணங்க அனைத்து வர்த்தக நிலையங்



களிலும் புகையிலை மற்றும் புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யப்படவில்லை. வர்த்தக நிலையங்களில் இன்று (நேற்று) புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யப்படமாட்டாது என்ற அறிவித்தல் பலகைகள் காணப்பட்டன. (த-9)

# தமிழ் வர்த்தகரிடம் கொள்ளை; பிரதான சந்தேகநபர் கைதானார்

கொழும்பு,ஜூன் 06
தமிழ் வர்த்தகரிடம் 1 கோடி ரூபா கொள்ளையடித்ததாகக் கூறப்படும் பிரதான சந்தேக நபரைக் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்துள்ளதாகக் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தில் நேற்றுப் புதன் கிழமை தெரிவித்தனர்.
நீதிமன்றத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பிடியாணையின் பிரகாரமே குறித்த சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் எனவும், கொள்ளை இடம்பெற்ற தினமே குறித்த நபர் நாட்டைவிட்டுத் தப்பியோடிவிட்டதாகவும் அந்தப் பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.
மேற்படி வழக்கு கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.
குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட எட்டுச் சந்தேக நபர்களில் பொலிஸார் மூவர் உட்பட ஆறு பேர் நீதிமன்றத்தினால் அண்மையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களையும் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் மேற்படி வழக்கையும் அன்றைய தினத்துக்கே ஒத்திவைத்தார்.
வெள்ளவத்தையில் வெளிநாட்டு நாணயமாற்று நிலையத்தை



நடத்துகின்ற கணபதிப்பிள்ளை தேவநேஷ்வரன் கொழும்பு, கொம்பனி வீதியிலுள்ள சம்பத் வங்கியிலிருந்து 1 கோடி ரூபா வெளிநாட்டுப் பணத்தை பெப்ரவரி 12 ஆம் திகதி எடுத்துக் கொண்டு சென்றபோதே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது. இதேவேளை கொள்ளையடிக்கப்பட்ட ஒரு கோடி ரூபாவிலிருந்து 35 இலட்சம் ரூபா மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர். (த)

### போலிக் கடனட்டை வைத்திருந்த மூவர் விளக்கமறியலில்

கொழும்பு,ஜூன் 06
போலி கடனட்டைகள் 15 வைத்திருந்ததாகக் கூறப்படும் யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று சந்தேகநபர்களை இன்று வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
கொழும்பு, பிறிஸ்டல் வீதியில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட மேற்படி சந்தேகநபர்கள் பின்னர் இரகசியப் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டனர். சந்தேகநபர்கள் மேற்படி போலிக் கடனட்டைகளைப் பயன்படுத்தி மோசடி செய்த பணம் தொடர்பான விபரங்கள் ஆராயப்பட்டு வருவதாக இரகசியப் பொலிஸார், நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (த)

# மாகாணங்களின் ஒன்றிணைவை தடுப்பதற்கு அரசு சதித் திட்டம்

## அதற்காகவே புதிய சட்டம் என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஜூன் 6
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்து இருக்கும் மாகாணங்கள் தாம் விரும்பினாலும் ஒன்றிணைய முடியாதவாறு அரசு 13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்து அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.
கொழும்பு பான்ஸ் பிளேஸில் நேற்றுப் புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-




குறித்த சட்ட வரைவின்படி வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தாம் விரும்பினாலும் சேர முடியாத நிலை எதிர்காலத்தில் உருவாகும். மாகாண சபைகள் சட்ட வரைவொன்று கொண்டு வரப்பட வேண்டும் என்றால் சகல மாகாண சபைகளிலும் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். ஆனால் கொண்டுவரப்படவுள்ள சட்ட வரைவின்படி பெரும்பான்மையான மாகாணங்கள் ஒப்புதல் அளித்தால் குறித்த சட்டவரைவை நிறைவேற்ற முடியும்.
காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களோடு வடமாகாண சபைத் தேர்தல் நடத்தினாலும் தேர்தல் முடிவடைய மாகாண சபைகளின் பெரும்பான்மையை வைத்து அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அந்த அதிகாரங்களை இல்லாமல் செய்வதற்கே அரசு தீர்மானித்துள்ளது. இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்க்கிறது-என்றார். (த-ரி)

# உகண்டா ஜனாதிபதியைச் சந்திக்க கட்டுநாயக்காவுக்கு ஓடிய மஹிந்த

கொழும்பு,ஜூன் 6
இலங்கை வழியாகச் சென்ற உகண்டா ஜனாதிபதி யொவேரி முசெவேனியைச் சந்திக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கட்டுநாயக்கா விமான நிலையம் சென்றதும், அங்கு அவருக்கு மதிய விருந்து அளித்ததும் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் வியப்பைத் தோற்றுவித்துள்ளது.
கிழக்காசியாவுக்கான பயணத்தை முடித்துக் கொண்டு கம்பாலா திரும்பும் வழியில், உகண்டா ஜனாதிபதி பயணம் செய்த விமானம் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தரையிறங்கியது. சுமார் ஒரு மணிநேரம் உகண்டா ஜனாதிபதி முசெவேனி அங்கு தங்கியிருந்த போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அமைச்சர்கள், அதிகாரிகள் பரிவாரத்துடன் சென்று அவரை வரவேற்றுப் பேச்சுக்களை நடத்தியதுடன், மதிய விருந்தும் அளித்துக் கௌரவித்தார்.
வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ்,அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த, பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க, விமான நிலைய மற்றும் விமான சேவைகள் அதிகாரசபையின் தலைவர் பிரசன்ன விக்கிரம சூரிய ஆகியோர் உகண்டா ஜனாதிபதியுடனான சந்திப்பில் பங்கேற்றனர்.
முக்கியமான நாடுகளின் தலைவர்கள் அதிகாரபூர்வப் பயணத்தை மேற்கொண்டு வரும் போதே, நாட்டின் தலைவர் விமான நிலையத்துக்குச் சென்று வரவேற்பது வழக்கம்.
தனிப்பட்ட பயணத்தை மேற்கொள்ளும் போதோ, விமானப் பயணத்தின் நடுவில் இடைத் தங்கும் போதே, நாட்டின் அதிபர்கள் சென்று வெளிநாட்டுத் தலைவர்களைச் சந்திக்கும் வழக்கமில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட பயணமாக இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்குச் சென்ற போதெல்லாம், அந்த நாடுகளின் இளநிலை அமைச்சர்கள் கூட விமான நிலையத்துக்குச் சென்று வரவேற்கவில்லை.
ஆனால், இலங்கையைக் கடந்து செல்லும் போது விமான நிலையத்தில் ஒரு மணிநேரம் தங்கிய உகண்டா ஜனாதிபதியைத் தேடிச் சென்று, மஹிந்த ராஜபக்ஷ சந்தித்தது குறித்து கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன. ஆபிரிக்க கண்டத்தைச் சேர்ந்த உகண்டா, உலகின் ஒரு முக்கியமான நாடாக இல்லாத நிலையில், ஜனாதிபதி மஹிந்த அந்த நாட்டுக்குக் கொடுக்கும் முக்கியமே இந்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது.
மிக அண்மையில் தான், மஹிந்த ராஜபக்ஷ உகண்டாவுக்கு நான்கு நாள் பயணத்தை மேற்கொண்டிருந்தார். கடந்த மாதம் 17ஆம் திகதியே உகண்டாவில் இருந்து அவர் திரும்பிய நிலையில், 20 நாள்களுக்குள் உகண்டா ஜனாதிபதியுடன் பேச்சுக்களை நடத்த வேண்டிய அவசியமும் இருந்திருக்கவில்லை. இதனாலேயே ஜனாதிபதி மஹிந்த உகண்டாவுடன் காட்டும் நெருக்கம் குறித்துச் சந்தேகங்கள் எழுந்துள்ளன.
(படம் 11 ஆம் பக்கத்தில்) (த)

# கொழும்பு நகரில் புலிகளின் பெருந்தொகை ஆயுதங்கள்

## பரபரப்புத் தகவலால் பாதுகாப்புத் தரப்பு அதிர்ச்சி

கொழும்பு, ஜூன் 6
விடுதலைப் புலிகளால் கொண்டு வரப்பட்ட தலா 500 கிலோ எடையுள்ள இரண்டு பெரிய குண்டுகளும், பெருமளவு ஆயுதங்களும் இன்னமும் கொழும்பு நகரப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல் இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினரை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.
வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்தே இந்த ஆயுதங்கள் பற்றிய விபரம் தெரிய வந்துள்ளது.
இதையடுத்து பெரும் சேதங்களை ஏற்படுத்தக் கூடிய பாரிய குண்டுகளையும், ஆயுதங்களையும் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிஸார் இறங்கியுள்ளனர்.
போர் நடந்த காலத்தில், கொழும்புக்கு கடத்தி வரப்பட்ட சுமார் ஒரு தொன் எடையுள்ள குண்டுகள் மற்றும் ஆயுதங்கள் பற்றிய விபரங்கள் தமக்குத் தெரியும் என்று அதனைக் கடத்தி வந்தவரான, விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பாலசுப்ரமணியம் ராஜேந்திரகுமார் வெலிக்கடைச் சிறை அதிகாரியிடம் எழுத்து மூலம் தெரிவித்திருந்தார்.
இதையடுத்து, அவர் நேற்று முன் தினம் கொழும்பு மேலதிக நீதிவான் முன் நிறுத்தப்பட்டார். குண்டுகளைக் கண்டுபிடிப்பதற்கு வசதியாக அவரை மூன்று நாள்கள் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தீவிரவாதப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி பிரசன்ன டி அல்விஸ் நீதிமன்றத்திடம் அனுமதி கோரினார்.
இதற்கமைய குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டுள்ள இடத்தைக் கண்டறிய மூன்று நாள்கள் தீவிரவாதப் புலனாய்வுப் பிரிவினரிடம் ராஜேந்திரகுமாரை ஒப்படைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
இதையடுத்து கொழும்பை அண்டிய பகுதியில் மறைத்து வைக்கப்பட்டுள்ள இந்தப் பாரிய ஆயுதக்குவியலைக் கண்டு பிடிக்கப் பொலிஸார் தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளனர்.
இந்த ஆயுதங்களில் தலா 500 கிலோ எடை கொண்ட இரண்டு குண்டுகள், ஏழு ரி-56 துப்பாக்கிகள், ஒன்பது தன்னியக்க கைத்துப்பாக்கிகள், மூன்று இலகு இயந்திரத் துப்பாக்கிகள், ரி-56 துப்பாக்கிகளுக்கான 3500 ரவைகள், 10 மில்லியன் ரூபா பெறுமதியான சொக்கலேற் பொதி, 8 மில்லியன் ரூபா பணம் என்பனவே மறைத்து வைக்கப்பட்டுள்ளன.
இந்த ஆயுதக்கடத்தலில் ராஜேந்திரகுமார் தொடர்புபட்டுள்ளதாலும், அவர் புலிகளின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினராக செயற்பட்டுள்ளதாலும், அவருக்கு இந்த ஆயுதக்குவியல் எங்குள்ளது என்று தெளிவாகத் தெரியும் என்று தீவிரவாதப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
ராஜேந்திரகுமார் மீது அத்தனகல மற்றும் கம்பகா நீதிமன்றங்களில் நான்கு வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவரைச் சிறை அதிகாரிகளின் பாதுகாப்புடன் தீவிரவாத புலனாய்வுப் பிரிவினர் [illegible] நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த)

### போலிக் கடவுச் சீட்டுடன் பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு,ஜூன் 6
இலங்கைக்குப் புறப்படவிருந்த விமானத்தில் போலிக் கடவுச் சீட்டுடன் ஏறமுயன்ற இலங்கையைச் சேர்ந்த முன்னாள் பொலிஸ் அதிகாரி சென்னையில் தடுக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
51 வயதான ஜமால் என்பவரே இவ்வாறு தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார். இவர், நான்கு வருடங்களுக்கு முன்னர் இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.
தமிழ் பேசும் இந்த முன்னாள் பொலிஸ் அதிகாரி தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்வியைத் தொடர்ந்து இலங்கைத் தமிழர்களோடு சேர்ந்து இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.
கடவுச்சீட்டு இல்லாத காரணத்தினால் இவரால் இங்கைக்குத் திரும்ப முடியவில்லை. இலங்கையிலுள்ள ஜமாலின் மனைவி அனுப்பிய போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்குத் திரும்ப முயன்றபோதே இவர் விமான நிலைய அதிகாரிகாரிகளால் தடுக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.
இவரை நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்துவதற்குப் பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (த)

# மகளை வன்புணர்வு செய்த தந்தைக்கு 60 வருட சிறை

கொழும்பு, ஜூன் 6
மகளைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் தந்தையொருவருக்கு 60 வருடச் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்த சம்பவமொன்று கேகாலை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.
60 வருட சிறைத் தண்டனையும் 30 ஆயிரம் ரூபாவை தண்டப் பணமாகவும் செலுத்த உத்தரவிட்ட கேகாலை மேல் நீதிமன்றம், குறித்த தண்டப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் 15 வருட காலச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.
தனது மகளை வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும்



சந்தேகநபர் ஒருவரை கேகாலை மேல் நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப்படுத்தியதை அடுத்து அவர் மீதான குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டது.
வழக்கை விசாரித்த கேகாலை மேல் நீதிமன்ற நீதிபதி மேனகா விஜேசுந்தர மேற்படி சந்தேக நபருக்கு 60 வருட காலச் சிறைத் தண்டனையும் 30 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்துத் தீர்ப்பளித்தார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் பாதித்த 60 சிறாருக்கு உதவி



யாழ்ப்பாணம், ஜூன் 6
வடமாகாணத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறார்களில் 60 பேருக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் வைப்பிலிடப்பட்டு வங்கிக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு யாழ்.போதனா வைத்தியசாலை புற்று நோய் சிகிச்சைப் பிரிவினரின் ஏற்பாட்டில் வைத்தியசாலையில் நேற்று நடைபெற்றது.

செரண்டிப் சிறுவர் இல்ல நிறுவுநர் திருமதி ரிஸ்லா செல்வரட்ணம் மற்றும் இந்த நிறுவனத்தின் தலைவர் எ.கந்தசாமி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு வங்கிக் கணக்கை ஆரம்பித்து வைத்தனர்.

யாழ்.போதனா வைத்திய சாலை புற்று நோய் சிகிச்சைப் பிரிவுக்கு கிளினிக்குச் செல்லும் புற்றுநோயாளர்களில் 18 வயதுக்குட்பட்டவர்களில் 60 பேரின் பெயரில் பணம் வைப்பிலிடப்பட்டு வங்கிக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கின் 5 மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர். கடந்த வருடமும் இவ்வாறு குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு இந்த அமைப்பால் புதிதாக வங்கிக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வங்கிக் கணக்கு ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையில் ஆரம்பிக்கப்பட்டது. வங்கி அதிகாரிகள் வைத்தியசாலைக்குச் சென்று நேற்றைய நிகழ்வில் வங்கிப் புத்தகங்களை வழங்கினர். தவிர சுற்றுச்சூழல் தினத்தையொட்டி மரக்கன்றும் பரிசுப் பொருள்களும் வங்கிக் கணக்கை ஆரம்பித்த சிறார்களுக்கு வங்கியால் வழங்கப்பட்டன.

யாழ்.போதனா வைத்திய சாலை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் கிருசாந்தி இராஜசூரியர், மருத்துவர்களான கே.கணேசானந்தன், த.சுசிதரன் உட்பட மற்றும் பல மருத்துவர்கள், தாதியர்கள், வங்கியின் வடமாகாண பிரதிப் பிராந்திய முகாமையாளர் கை.இந்திரவாசன், வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் ம.தயாகரன், சிறார்களின் பெற்றோர் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (வ-4)

## வேம்பொடுகேணி அம்பாள் ஆலயத்தில் 13 வருடங்களின் பின்னர் வழிபாடுகள்

பளை, ஜூன் 6
13 வருடங்களின் பின்னர் பளை வேம்பொடுகேணி நவுணவெளி அம்பாளைத் தரிசிக்கும் வாய்ப்பு அந்தப் பகுதி மக்களுக்கு கிடைத்துள்ளது.

இந்தப் பகுதியில் மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டதையடுத்து ஆலய பரிபாலன சபையினர் ஆலயத்துக்கு செல்லும் வீதியையும் ஆலய சுற்றாடலையும் துப்புரவு செய்துள்ளனர்.

ஆலயத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய வழிபாடுகள் தொடர்பான கலந்துரையாடலை நாளை மறுதினம் சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு ஆலய முன்றலில் நடத்த பரி பாலன சபையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

> “ஆலயத்தில் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்பட வேண்டிய வழிபாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நாளைமறுதினம் சனிக்கிழமை 10 மணிக்கு ஆலய முன்றலில் இடம் பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஆலயத்தின் வழிபாட்டுடன் தொடர்புடைய அனைத்துப் பிரிவினரையும் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (த-9)

## இரு பகுதியினர் மோதல் மூன்று பெண்கள் காயம்

### கொடிகாமம் பகுதியில்

தென்மராட்சி, ஜூன் 6
கொடிகாமம் பெரிய நாவலடிப் பகுதியில் இரு பகுதியினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் மூன்று பெண்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

தாக்குதலுக்கு இலக்கான அதே இடத்தைச் சேர்ந்த தம்பிராசா சூரியகலா (வயது-47), பஞ்சலிங்கம் தனரஞ்சினி (வயது-42), இவரது மகளான பஞ்சலிங்கம்பிரதீபா(வயது-22) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த-9)

## மன்னார் ஆயர் கைதிகளுடன் சந்திப்பு

நீர்கொழும்பு, ஜூன் 6
மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நேற்றுமுன்தினம்காலைநீர்கொழும்புசிறைச் சாலைக்குச் சென்று அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வையிட்டுள்ளனர்.

இவர்கள் அங்கு 14 தமிழ் அரசியல் கைதிகளைப் பார்வை யிட்டதுடன்அவர்களுடையகுறை நிறைகளையும் கேட்டறிந்தனர்.

தமது வழக்குத் தொடர்பான விடயங்களைப் பார்வையிட மற்றும் வழக்குகளை முன்னெடுக்க சட்டத்தரணிகளைத் தொடர்புபடுத்தி விடுமாறு அவர்கள் ஆயரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உதயனுக்குத் தெரிவிக்கையில்,

நீர்கொழும்பு சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை யாரும் சென்று பார்ப்பதில்லை என்று அவர்கள் தெரிவித்திருந்தனர். நானும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையும் சென்று பார்வையிட்டோம். வழக்கைத் தொடர முடியாத நிலையில் அங்குள்ள கைதிகள் பலர் உள்ளனர். அவர்களது குடும்பத்தினரும் துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர். அவர்களின் வழக்குகளை மேற்கொண்டு தொடரவும் குடும்பத்தினருக்கு உதவிகளை வழங்கவும் எம்மால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார். (த-ரி)

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நோயாளர் நலன் கருதி தொ.பே.எண்

தென்மராட்சி, ஜூன் 6
சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் நலன்கருதி தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரனின் வழிகாட்டலில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ் வரனின் முயற்சியின் பயனாக புதிய தொலைபேசி இணைப்பு இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தூர இடங்களிலிருந்து வரும் நோயாளர்கள் வைத்தியசாலையில் நடைபெறும் கிளினிக்குகள் தொடர்பாகவும், வைத்தியசாலையில் சந்திக்கவுள்ள வைத்திய அதிகாரி பற்றிய விவரங்களை தொலை பேசி மூலம் கேட்டறிந்து வரக் கூடிய வகையில் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

021 227 0661, 021 227 0662 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு 162 ஆம் இலக்க இணைப்பில் உள்ள வரவேற்பாளரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துமாறும் வைத்தியசாலை அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

## மாவனல்ல பிரதேசசபை தலைவருக்கு மரண தண்டனை விதித்தது நீதிமன்றம்



கொழும்பு, ஜூன் 6
மாவனல்ல பிரதேச சபையின் தலைவர் கே.பி.பியதிஸ்ஸவுக்கு மரண தண்டனை விதித்து கேகாலை மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

வாகனச் சாரதியான கே.ஜி. பிரியரத்னவை துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு 2003 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் திகதி படுகொலை செய்த குற்றச்சாட்டில் அவரை நீதிமன்றம் குற்றவாளியாக இனங்கண்டது. அதனை அடுத்து கேகாலை மேல்நீதிமன்ற நீதிபதி மேனகா விஜயசுந்தர அவருக்கு புதன்கிழமை மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார். (ச-ரி)

## ‘பவ்ரல்’ அமைப்பின் நடமாடும் சேவை ஆவரங்காலில் நாளை மறுதினம்

அச்சுவேலி, ஜூன் 6
‘பவ்ரல்’ அமைப்பின் ஏற்பாட்டில் வலி.கிழக்கில் தேசிய அடையாள அட்டைபெறுவதற்காக இரு தினங்கள் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் 1,200 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் ஏற்பதற்கு தயார் நிலையில் இருப்பதால் மூன்றாவது நாளாக நாளை மறுதினம் சனிக்கிழமையும் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது என அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திலும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்திலும் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவை நடைபெற்றது. இதில் கோப்பாயில் நடைபெற்ற நடமாடும் சேவையில் 400 பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆவரங்காலில் 800 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

எனினும் விண்ணப்பதாரிகள் பலர் காத்திருந்த நிலையில் இன்னொரு தினத்தில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் நாளை மறுதினம் சனிக்கிழமை குறித்த நடமாடும் சேவை ஆவரங் [illegible] சக்தி மணிமண் டபத்தில் நடைபெறவுள்ளது என வலி.கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார்.



இந்த சேவையின் போது பதிவாளர் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டு பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் திருமணச் சான்றிதழ்களை இலவசமாக வழங்க விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-11)

## பிரதம உள்ளக கணக்காய்வாளர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 6
வடக்கு மாகாண பிரதம உள்ளகக் கணக்காய்வாளராக என். இராசநாயகம் கடந்த மூன்றாம் திகதி தொடக்கம் வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய வடக்கு மாகாண பிரதம செயலாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் வடக்கு மாகாண பிரதம உள்ளகக் கணக்காய்வாளராகக் கடமையாற்றி வந்த வி.குகதாசன் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்தே இவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இவர் இதற்கு முன்னர் வடக்கு மாகாண காணி, விவசாய கால்நடை அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் பிரதம கணக்காளராகக் கடமை புரிந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (த-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் மொழி நிலையம்



கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக விளக்க மளிக்கும் விசேட கூட்டம் ஒன்று மன்னார் மாவட்ட சர்வோதய அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை மன்னார் சர்வோதய அமைப்பில் இடம்பெற்றது.
இதன் போது மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மொழிப் பிரச்சினை தொடர்பாகவும், மன்னார் நகரில் மொழி நிலையம் ஒன்றை நகர சபையின் ஊடாக நிறுவுவது தொடர்பாகவும் முடிவெடுக்கப்பட்டது.
இதற்கான ஏற்பாடுகளை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக் குழு மேற் கொண்டுள்ளதாகவும் இதன் மூலம் மன்னார் மாவட்ட மக்கள் தமது மொழிப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும் எனவும் மன்னார் மாவட்ட சர்வோதய அமைப்பின் இணைப்பாளர் எஸ். யுகேந்திரன் தெரிவித்தார்.
மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து சட்டத்தரணி ஹேமமாலி கருத்துரை தெரிவித்தார்.
குறித்த நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள், நகர சபை, பிரதேச சபைகளின் பிரதி நிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-12)

# திருக்குறள் ஆய்வுரை நூல் வெளியீட்டு விழா

வடமராட்சி, ஜூன் 6
தமிழ் ஆசான் ஆ.வடிவேலு எழுதிய திருக்குறள் ஆய்வுரை நூல்வெளியீட்டுவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பருத் தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில், அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டத் தலைவர் சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராயக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் கலந்துகொள்வார். நூலின் ஆய்வுரையை யாழ். பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்துவார்.
சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தப்பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (ஒ-8)

## புலன்களை அடக்குவதில் புறச்சூழலுக்குப் பங்குண்டா?

புலனடக்கத்துக்குப் புறச்சூழல் தாக்கமளிக்காது. துர்க்காராம் விடயத்தில் அவரது ஆன்மிக அனுபவங்களுக்குச் சூழ்நிலை உகந்ததாக இருக்கவில்லை. ஏனெனில் அவரது மனைவி அவருக்கு ஒத்துழைப்பைக் கொடுக்கவில்லை. ஆனால் அவரது சகிப்புத் தன்மையும், பரந்த மனப்பான்மையும் அவருக்குச் சகல கஷ்டங்களையும் தாண்டிக் கொள்ள உதவின. இந்த விடயத்தில் ஒரு சிறிதளவேனும் நன்மை பயக்காத சூழலிலும் பார்க்க ஒவ்வொருவரது உத்வேகத்தின் தரம், தெய்வீகப் பாதையில் செல்வதற்கான காரணம், சித்தத்தின் நேர்மைத்தனம் ஆகியன காரணியாக உள்ளன என்பது வெளிப்படை..




சாயி சிந்தனை

# அரசமைப்பில் மாற்றம் செய்யாது வடக்குத் தேர்தலை நடத்துங்கள்

## வாசுதேவ வேண்டுகோள்

கொழும்பு,ஜூன் 6
அரசமைப்பில் மாற்றம் செய்யாது வடக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வேண்டுகோள் விடுத்துள்ளார்.
நவசமசமாஜக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பட்டுள்ளார்.
வட மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக பிரயோகிக்கப்படும் அழுத்தங்களை சமாளிக்க முழு அளவில் முயற்சி எடுக்கப்பட வேண்டும்.
13 ஆம் திருத்தச் சட்டத்தின் சில சரத்துக்களை மாற்றியமைக்க சிலர் முயற்சிக்கின்றனர்.
நாடு என்ற ரீதியில் ஐக்கியமாக செயற்பட அரசமைப்பு வழிவகை செய்துள்ளது.
மாகாணசபைகளின் ஊடாக தெற்கு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் வடக்கு மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.-என்றார். (ச)



தெற்கு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் வடக்கு மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

# உண்மைவிதை வெங்காயம் தற்போது நல்ல நிலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்.குடாநாட்டில் விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் உண்மை விதை வெங்காய உற்பத்திப் பயிர்கள் தற்போது நல்ல நிலையில் காணப்படுவதாக விவசாய திணைக் களத்தின் பாடவிதான உத்தியோகத்தர் ஆர்.செளந்தரராஜன் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த உண்மை விதையைப் பயன்படுத்தி வேதாள வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு தேவையான பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
தற்போது இந்த உண்மை விதைகளைப் பயிரிட்டு அவை ஓரளவு வளர்ந்ததும் பயிர் நாற்றுகளைப் பிடுங்கி மீண்டும் நடுகை செய்யப்படும்.
இவ்வாறு பயிரிடப்பட்ட நாற்றுக்கள் நல்ல நிலையில் உள்ளன. இந்த வெங்காயச் செய்கையில் ஈடுபடுவதற்காக இந்தியாவில் இருந்து 195 கிலோ உண்மை விதைகள் தருவிக்கப்பட்டன.
இந்த உண்மை விதைகள் யாழ். மாவட்ட விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் ஊடாக விவசாயி களுக்கு பகிர்ந்து விநியோகிக் கப்பட்டன. இந்த உண்மை விதைகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கும் விவசாயத் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது- என்றார். (த-17)

# ஆசிரிய சேவை யாப்புக்கு ஆணைக்குழு அனுமதி

## சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்கிறார் பந்துல

கொழும்பு,ஜூன் 6
கல்வி அமைச்சால் புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரிய சேவைகள் யாப்புக்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளது.
ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்புகள், பதவி உயர்வுகள் மற்றும் சேவைகள் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வுகள் கிடைக்கும் விதமாக இந்தப் புதிய ஆசிரிய சேவைகள் யாப்பு அமைந்துள்ளது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
19 ஆண்டுகளாக தீர்த்து வைக்கப்படாதுள்ள ஆசிரியர்களின் சேவைச் சிக்கல்கள் சம்பந்தமாகக் கவனம் செலுத்தப்பட்டே இந்த யாப்பு தயாரிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார். (ச-22)

# தீர்வையின்றி ஏற்றுமதி

## சீனாவிடம் அனுமதி கேட்கிறது இலங்கை



கொழும்பு,ஜூன் 6
இலங்கை உற்பத்திகளை தீர்வையின்றி சீன சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கு, சீனாவிடம் அனுமதியைப் பெறும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேயிலை, இரத்தினக்கற்கள், ஆபரணங்கள், வாசனைப் பொருள்கள் போன்ற உற்பத்திகளுக்கே தீர்வையின்றி சீன சந்தையைத் திறந்து விடுமாறு இலங்கை கோரியுள்ளது.
சுதந்திர வர்த்தக உடன்பாட்டுக்கு அமைய வர்த்தக சமனின்மையைக் குறைக்க சீனா இணங்கியுள்ளது.
இந்த நடைமுறைகளை விரைவுபடுத்த கூட்டுக் குழுவொன்று உருவாக்கப்படும்.
1952 ஆண்டின் இறப்பர் - அரிசி உடன்பாட்டில் இருந்து சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக உறவு வரலாற்று ரீதியானது.
இரண்டு நாடுகளுக்கும் இடையில் பன்முனை ஒத்துழைப்பை விரிவாக்கிக் கொள்வதற்கு பலமான அடித்தளம் போடப்பட்டுள்ளது.
மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக வர்த்தகப் பாடசாலை ஒன்றை நிறுவவும் சீனா இணங்கியுள்ளது. சீன வர்த்தக குழு இலங்கைக்கு விரைவில் வரவுள்ளது.
அதற்காக ஏற்பாடுகளை இலங்கைத் தூதரகமும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் செய்து கொடுக்கவுள்ளன.- என்றார். (ச)

# சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்த விசேட குழு

## யாழ். மாநகர சபை உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்து வதற்கு உடனடிக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கோரிக்கை விடுத்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போது யாழ்.மாநகர எல்லைக்குள் சமூக விரோதச் செயல்கள் தினமும் அதிகரித்துச் செல்கின்றன.
இந்தச் சமூக விரோத செயல்களைக் கட்டப்படுத்துவதற்கான முழு அதிகாரம் மாநகர சபைக்கு உள்ளது.
ஆனால் மாநகர சபை இந்தச் செயல்களை கட்டுப்படுத்துவதற்காகச் சட்டபூர்வமான குழு ஒன்றை அமைக்கவேண்டும்.
இந்தக் குழுவினர் பொலிஸாரின் உதவியுடன் மாநகர எல்லைக்குள் இடம்பெறும் சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். மாநகர உறுப்பினரின் இந்தக் கோரிக்கை தொடர்பில் இந்த மாதத்துக்கான கூட்டத் தொடரில் ஆராயப்படும் என்று மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார். (த-17)

# சந்நிதியில் ஆன்மிகச் சொற்பொழிவு

தொண்டமானாறு, ஜூன் 6
தொண்டமானாறு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பண்ணிசையும், பக்திப் பாடல்களும் இடம்பெறும்.
இளைப்பாறிய ஆசிரியர் வல்லிபுரம் பரமேஸ்வரன் பக்க வாத்தியங்கள் சகிதம் இவற்றை இசைத்துப் பாடுவார். (வ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி அகலிப்புப் பணிகளுக்குள் சிக்கிய தபால் பெட்டிகளை அகற்றி அவற்றைப் புதிதாக மீளமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கே.கே.எஸ்.வீதியில் புதிய தபால் பெட்டிகளை அமைக்கும் பணியில் தபால் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். (த-17)

# பிரதான வீதிகள் உயரத்தில் குறுக்கு வீதிகள் பள்ளத்தில்

## விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

யாழ்ப்பாணம்,ஜூன் 6
பருத்தித்துறை பிரதான வீதி அகலிக்கப்பட்டதன் பின்னர் அந்த வீதியுடன் இணையும் சிறிய வீதிகளின் ஊடாகப் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பிரதான வீதியில் இருந்து குறுக்கே செல்லும் வீதிகள் மிகவும் தாழ்வாகப் புனரமைக்கப்பட்டுள்ளதால் பிரதான வீதிக்கு ஏறும் போதும், பிரதான வீதியில் இருந்து குறுக்கு வீதிகளுக்கு இறங்கும் போதும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதான வீதிகள் மிக உயரமாகக் 'காப்பெற்' இடப்பட்டுப் புனரமைக்கப்பட்டுள்ளமையே இதற்குக் காரணம்.

சில இடங்களில் பிரதான வீதியில் இருந்து குறுக்கு வீதிகளுக்கு இறக்க முற்படும் போது விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக சைக்கிளில் பயணிக்கும் வயோதிபர்கள் இந்த ஏற்ற இறக்கங்களில் நிலைகுலைந்து விபத்துக்குள்ளாகும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

எனவே இந்த ஏற்ற இறக்கங்களை உரிய முறையில் புனரமைத்து விபத்துக்களை தவிர்ப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-17)



சில இடங்களில் பிரதான வீதியில் இருந்து குறுக்கு வீதிகளுக்கு வாகனங்களை இறக்க முற்படும்போது விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன.

# கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்குக

## உதவி ஆணையாளர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ். குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான விடுமுறை நாள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளை உடனடியாக வழங்க வேண்டும் என்று யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் பணித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டுறவுப் பணியாளர்கள் விடுமுறை நாள்களில் பணியாற்றினால் அதற்கான கொடுப்பனவு வழங்கப்படவேண்டும். அதேவேளை வேலை நேரத்தை விட மேலதிகமாகப் பணியாற்றினால் அதற்குரிய மேலதிகக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட வேண்டும். அத்துடன் சங்கத்தின் அத்தியாவசிய பிரிவுகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு இவற்றுடன் தேநீருக்கான கொடுப்பனவும் வழங்கப்பட வேண்டும்.

இந்த நடைமுறையை கடந்த மே மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் விதத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும்- என்றார். (த-17)


# 80 ஹெக்ரேயரில் உ.கிழங்கு செய்கை

## விவசாயத் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன் 6
யாழ்.குடாநாட்டில் அடுத்த போகத்தில் 80 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு செய்கையை மேற்கொள்ள விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த போகத்தில் விவசாயிகள் அதிகமான நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபடுவதற்குத் தற்போது தயாராகி வருகின்றனர்.

உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட இருக்கும் விவசாயிகளுக்கான விதை உருளைக் கிழங்கைப் பெற்றுக் கொடுப்பதற்கு விவசாய திணைக்களம் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளது.



உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் வசதிகருதி ஏற்கனவே உருளைக்கிழங்கு செய்கையாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களும் உருவாக்கப்பட்டு அவற்றின் செயற்பாடுகளை ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த சங்கங்கள் ஊடாகவே செய்கையாளர்களுக்கு இந்தமுறைவிதை உருளைக்கிழங்கை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த போகத்தின்போது குடாநாட்டில் 55 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் விவசாயிகள் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டனர். காலம் கடந்து பெய்த மழையால் பருவம் போன உருளைக்கிழங்கு செய்கையில் சிறிதளவு பாதிப்பே ஏற்பட்டது. (வ-17)

# சிறுநீரக நோயாளருக்கு மாதாந்தக் கொடுப்பனவு

**மாகாண சமூக சேவைகள் அமைச்சின் ஏற்பாட்டில்**

யாழ்ப்பாணம், ஜூன் 6
வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரின் முயற்சியால் மாகாண சமூக சேவைகள் அமைச்சினால் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு மாதாந்தம் கொடுப்பனவு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் பணிபுரியும் சிறுநீரக வைத்திய நிபுணர், பொது வைத்திய நிபுணர், சிறுபிள்ளை வைத்திய நிபுணர், ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள நோயாளர்கள் சமூக சேவைகள் திணைக்களத்தால் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட படிவத்தை தத்தமது பிரிவு கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலகங்களில் கையளித்து மாதாந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# மீசாலை விக்னேஸ்வராவில் நேற்று மரங்கள் நடுகை



தென்மராட்சி, ஜூன் 6
உலகசுற்றாடல் தினத்தையொட்டி சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையின் ஏற்பாட்டில் மரம் நடுகை நிகழ்வு நேற்று மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய வளாகத்தில் இடம்பெற்றது.

சுற்றாடல் தினம் தொடர்பாக விசேட விரிவுரைகளும் திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு கருத்துரையும் செய்முறை விளக்கமும் மேற்கொள்ளப்பட்டன.

வித்தியாலய அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில் சாவகச்சேரி நகர சபை துணைத் தலைவர் கு.சதாசிவமூர்த்தி கலந்துகொண்டு பாடசாலை வளாகத்தில் மரக் கன்றுகளை நாட்டி வைத்தார். (த-9)

# சாவகச்சேரியில் பொது இடங்கள் சுற்றாடல் தினத்தில் துப்புரவு

தென்மராட்சி ஜூன் 6
உலக சுற்றாடல் தினத்தையொட்டி நேற்று சாவகச்சேரி நகரசபை வளாகம், மீசாலை, நுணாவில் பொது நிலைய வளாகம் ஆகியவை நகர சபை தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், பொது மக்கள் மற்றும் வாசகர்கள் ஆகியோரினால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன. நகரசபை தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற சிரமதானத்தில் நகரசபை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நகர மண்டபத்தின் சுற்றாடல் துப்புரவு செய் யப்பட்டது. (த-9)



# கைதடி முதியோர் இல்லத்தில் சுற்றாடல் தினச் சிரமதானம்

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் நேற்று புதன் கிழமைசிரமதானம்இடம்பெற்றது. இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது இல்லத்தின் வளாகப் பகுதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. அத்துடன் வளாகத்தில் பயன் தரும் மரங்களும் நடுகை செய்யப்பட்டன.

சிரமதானப் பணிகள் இன்று வியாழக்கிழமையும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று இல்ல அத்தியட்சகர் தெரிவித்தார். (த-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாநில அரசுகளின் ஆதரவு அவசியம்

## நக்சல்களின் ஆதிக்கத்தை ஒழிக்க பாதுகாப்பு மாநாட்டில் மன்மோகன்

டில்லி, ஜூன்.6

நக்சலைட்டுகளின் ஆதிக்கத்தை ஒழிக்க மாநில அரசுகளின் ஒத்துழைப்பும் அவசியம் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு பாதுகாப்பு குறித்த முதல்வர்கள் மாநாடு டில்லியில் நேற்று நடை பெற்றது. இந்த மாநாட்டை பிரதமர் மன்மோகன் சிங் தலைமை தாங்கி ஆரம்பித்து வைத்து பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங் பேசு கையில் மேலும் தெரிவித்த தாவது:-

சதீஸ்கர் மாநிலத்தில் நக்சலைட்டுகள் நடத்திய கொடூர தாக்குதல் சம்பவத் துக்குப் பின்னர் நாம் இங்கு கூடியுள்ளோம். இது போன்ற வன்முறைக்கு நமது ஜன நாயகத்தில் இடமில்லை. இதனைத் தடுக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

நக்சலைட்டுகளின் சவால் நமது முழுக்கவனத்தையும் பெற்றுள்ளது. இதனைத் தடுக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களை ஒடுக்க மத்திய அரசு உடனடியாக இரண்டு அம்சத் திட்டங்களை செயற் படுத்த உள்ளது. நக்சல் பாதிப்பு உள்ள 34 பகுதிகளில் அரசு பாதுகாப்பை அதிகரித்துள்ளது. இதற்கு மாநில அரசுகள் முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று நம்புகிறேன். 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ஜம்மு காஷ்மீர்



பகுதிகளில் தற்போது தீவிரவாத தாக்குதல்களும் ஊடுருவல்களும் குறைந்துள்ளன. வடகிழக்கு மாநிலங்களில் பாதுகாப்பு கவலை அளிப்பதாக உள்ளது. இந்தியா-சீனா மற்றும் இந்தியா-பூட்டான் எல்லை பகுதியில் பாதுகாப்பு நலன் கருதி வீதி அமைப்பது மிகவும் அவசியம். அதற்கான நடவடிக்கைகள் மேற் கொளளப்பட்டுள்ளன. உள்நாட்டு பாதுகாப்பை பலப்படுத்த மாநிலங்களில் காவல் துறை நவீனப்படுத்தப்பட வேண்டியது அவசியம். இது குறித்து உங்களுடைய ஆலோசனைகளையும் எதிர்பார்க்கிறேன்-என்றார்.

இதில் பல்வேறு மாநில முதலமைச்சர்கள் பங்கேற்றனர்.

## 'சிலோன்' திரைப்படத்தில் நடிகர் அரவிந்த் சாமி



இலங்கையின் போர் சூழ்நிலையை பின்னணியாக வைத்து எடுக்கப்பட்டுள்ள 'சிலோன்' என்ற திரைப்படத்தில், பிரபல நடிகர் அரவிந்த் சாமி நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இயக்குநர் சந்தோஸ் சிவத்தினால் இந்தத் திரைப்படம் இயக்கப்படுகிறது. இதில் அரவிந்த் சாமி முக்கிய பாத்திரம் ஏற்று நடிக்க உள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

போர் இடம்பெற்று கொண்டிருக்கும் பகுதியில் சிக்கிக் கொள்ளும் 8 சிறுவர்கள் குறித்த கதையாக இந்த திரைப்படம் அமைகிறது. (வ)

## தீவிரவாதிகள் 4 பேர் கைது

காஷ்மீர் மாநிலம் அனந்த்நாக் மாவட்டத்தில் பொலிஸ் சோதனைச் சாவடி மீது கையெறி குண்டு வீசப்பட்ட சம்பவம் தொடர்பாக ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கத்தைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டனர். கடந்த 2 ஆம் திகதி அனந்த் நாக் ஷேர்பாக் பகுதியில் பொலிஸ் சோதனைச் சாவடியில் தீவிரவாதிகள் கையெறி குண்டை வீசி விட்டு தப்பியோடினர். இதில் 4 பொலிஸார் காயமடைந்தனர். இது தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற் கொண்டதில் ஷீர்போரா கிராமத்தைச் சேர்ந்த இர்ஷாத் அஹமத் தர் என்பவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரித்ததில் முக்தார் அஹமத் தர் என்பவர் கையெறி குண்டை வீசியது தெரியவந்தது. அவர் அளித்த தகவலின் பேரில் மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டனர். தப்பி ஓடிய 2 பேரை பொலிஸார் தேடி வருகின்றனர். (வ)



## ஜூன் 10 இல் அனைத்துக் கட்சி கூட்டம்

டில்லி, ஜூன்.6

மாவோயிஸ்ட்கள் தாக்குதல் தொடர்பில் விவாதிப்பதற்காக எதிர்வரும் 10ஆம் திகதி அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

அண்மையில் சதீஸ்கர் மாநிலத்தில் மாவோயிஸ்ட்டுகள் நடத்திய தாக்குதலில், அந்த மாநிலத்தை சேர்ந்த முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் உயிரிழந்தனர்.

இந்தநிலையில் மாவோ யிஸ்ட்டுகள் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக, எதிர்வரும் 10 ஆம் திகதி அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. (வ)

# கச்சதீவை மீட்க வேண்டும்

## மீனவர் நலன் காப்பதற்காக 'ஜெ' வலியுறுத்து

டில்லி, ஜூன்.6

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக மீனவர்களை பாதுகாக்க, கச்சதீவை மீட் பது ஒன்றே வழி என்றும் ஜெயலலிதா வலியுறுத்தியிருந்தார்.

தேசிய பயங்கரவாத தடுப்பு சட்டம் மற்றும் மாவோயிஸ்ட்டுகள் பிரச்சினைகள் குறித்து நேற்று புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் மாநில முதல்வர்கள் மாநாடு ஆரம்பமாகியது.


அதில் தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா சார்பாக பங்கேற்ற அமைச்சர் முனுசாமி தமிழக முதல மைச்சர் ஜெயலலிதாவின் உரையை வாசித்தார். அதில்



மாநில பொலிஸ் துறையை நவீனமயமாக்க மத்திய அரசு அளித்து வந்த நிதியை 2012-13ஆம் ஆண்டில் குறைத்துள்ளது.

இது மாநில அரசுகளின் நிதிச் சுமையை அதிகரிக்கச் செய்யும். எனவே, ஏற்கனவே இருந்த நிதிப் பங்களிப்பை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். தீவிரவாதிகளை ஒடுக்க மத்திய மாநில அரசுகள் இணைந்து செயற்பட வேண்டும் என்று ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்-என்றுள்ளது. (வ)

# ஜனாதிபதி மாளிகையில் புதிய வணிக வளாகம்



டில்லி, ஜூன்.6

ஜனாதிபதி மாளிகையில் புதிய வணிக வளாகத்தை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

ஜனாதிபதி மாளிகை ஊழியர்களும், குடும்பத்தினரும் தங்கள் தேவைகளுக்கான சகல பொருள் களும் கிடைக்கும் வகையில் ஜனாதிபதி மாளிகை வளா கத்துக்குள் வணிக வளாகம் அமைக்க வேண்டும் என்று நீண்ட காலமாகக் கோரி வந்தனர். அதன்படி, புதிய வணிக வளாகத்தை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

# தமிழ் நாடு மாணவர் காங்கிரஸ் கலைப்பு

## ராகுல் காந்தி அதிரடி

சென்னை, ஜூன்.6

தமிழ்நாடு மாணவர் காங்கிரஸை கலைத்துள்ள அந்தக் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி, தலைவர் பதவியில் இருந்து கலையரசனை அதிரடியாக நீக்கியுள்ளார்.

அண்மையில் மாணவர் காங்கிரஸ் தலைவர் தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் கலையரசன் வெற்றி பெற்று தலைவரானார்.



இதனிடையே, மாணவர் காங்கிரஸ் தலைவர் கலையரசன் மாணவரே இல்லை என்று மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கே.வீ.தங்கபாலு ஆகியோர் மேலிடத்தில் முறைப்பாடு செய்தனர். இந்த முறைப் பாட்டின் பேரில் மேலிடம் இது குறித்து விசாரணை நடத்தியது. அப்போது, மாணவர் காங்கிரஸ் தலைவர் கலையரசன் மாணவரே இல்லை என்பது தெரிய வந்தது.

இதுகுறித்த விவரம் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்திக்கு அறிக்கையாக சமர்ப் பிக்கப்பட்டது. இந்த நிலையில், மாணவர் காங்கிரஸை அதிரடியாகக் கலைத்த ராகுல் காந்தி, அதன் தலைவர் பதவியில் இருந்து கலையரசனையும் நீக்கியுள்ளார்.

# சீனாவின் அத்துமீறலை தடுக்க எல்லையில் புதிய படைப்பிரிவு

இந்திய எல்லைப் பகுதியில் சீன இராணுவம் தொடர்ச்சியாக அத்துமீறலில் ஈடுபட்டு வருவதால் இந்த எல்லைப் பகுதி பாதுகாப்புக்காக புதிதாக ஒரு படையை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

40ஆயிரம் வீரர்களைக்கொண்ட, அதி நவீன ஆயுதங்கள், மலையேற்றத்தில் மிகச் சிறந்த நிபுணத்துவம் கொண்ட mountain strike corps என்ற பெயரில் இந்தப் படை உருவாக்கப்பட வுள்ளது.

நவீன ஹெலிகொப் டர்கள், விமானங்கள், போர்க் கருவிகள், இரவு-பகலாக எல்லையைப் பாதுகாக்க உதவும் ரேடார்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் இந்தப் படையினருக்கு வழங்கப்படும்.

இதற்காக இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் மட்டும் ரூ. 62 ஆயிரம் கோடியை மத்திய [illegible] [illegible]. இந்தப் படையை உரு வாக்குவதற்கான அனுமதியை பாதுகாப்புத் துறைக்கான அமைச்சர்கள் குழு விரைவில் வழங்கவுள்ளது.

இந்த அனுமதி கிடைத்தவுடன் நிதியமைச் சகத்தின் அனுமதி பெறப்படும்.

இந்தப் படையில் இரண்டு காலாட் படை பிரிகேடுகளும் இரு கவச வாகனப் படை பிரிவுகளும் அடங்கும்.

சீன எல்லையை இராணுவத்தின் இந்திய-திபெத் பார்டர் பொலிஸ் படை (ITBP) தான் இப்போது கண்காணித்து வருகிறது.

ஆனால், எல்லை ஊடுருவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந் நிலையிலேயே புதிய படைப் பிரிவை உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் படைப் பிரிவின் தலைமையகம் [illegible] வங்கத்தின் [illegible] பகுதியில் அமையவுள்ளது. (வ)

# காங்கிரஸ் எதிர்ப்பு

## தகவல் அறியும் உரிமைச் சட்ட வரம்புக்குள் அரசியல் கட்சிகள்

டில்லி, ஜூன்.6

தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் அரசியல் கட்சிகளையும் சேர்ப்பதற்கு காங்கிரஸ் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

**ஆணையத்தின் உத்தரவு**


தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அரசியல் கட்சிகளும் உட்பட்டவை என மத்திய தகவல் ஆணை யம் திங்கட்கிழமை உத்தரவு ஒன்றை பிறப்பித்தது. அரசியல் கட்சிகளின் வெளிப்படை யான தன்மையை உறுதிப் படுத்தும் இச்சட்டத்துக்கு காங்கிரஸ்கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

**ஆணையம் கருத்து**

காங்கிரஸ், பா.ஜ., உட்பட தேசியக்கட்சிகள் மத்திய அரசின் நிதி உதவியை மறைமுகமாகப் பெற்று வருவதாகவும், அரசு அமைப்புகளுக்கு உள்ள சிறப்புகள் அனைத்தும் அரசியல் கட்சிகளுக்கும் உள்ளது என மத்திய தகவல் ஆணையம் தனது உத்தரவில் தெரிவித்திருந்தது.

**காங்கிரஸ் கருத்து**

மத்திய தகவல் ஆணையத்தின் கருத்துக்கு காங் கிரஸ் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் ஜனார்தனன் திரிவேதி பத்திரிகையாளர்களிடம்



கூறுகையில், அரசியல் கட்சிகளை தகவல் அறியும் உரிமைசட்டத்தின் கீழ் கொண்டு வருவது ஜனநாயக அமைப்புகளுக்கு தீங்கை விளைவிக்கும் என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐரோப்பாவில் கடந்த 70 ஆண்டுகளில் இல்லாதவாறு கடும் மழை பெய்து வருகின்றது. ஜேர்மனி, ஒஸ்ரியா, சுவிற்ஸர்லாந்து போன்ற நாடுகளில் முக்கிய நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ள அழிவுகளால் இதுவரை 8 பேர் உயிரிழந்துள்ளனர். 9 பேர் காணாமற்போயுள்ளனர். ஒஸ்ரியாவில் பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையால் படகுகள் மூலம் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ற)

## பேச்சுரிமைக்கான போராட்டம் ஊடக அமைப்புக்கு சர்வதேச விருது

லண்டன், ஜூன் 6
பேச்சுரிமையை வலியுறுத்தியமைக்காக 'ரிப்போர்ட்டர்ஸ் வித் அவுட் போர்டர்ஸ்' என்ற அமைப்புக்கு சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது.
போலந்து நாட்டில் நடைபெற்ற விழாவிலேயே எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்புக்கு சர்வதேச பத்திரிகையாளர்கள் கூட்டமைப்பு இந்த விருதை வழங்கியது. விருதைப் பெற்ற அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கிறிஸ்டோப்.
''உலகம் முழுவதும் தற்போது சிறையிலுள்ள 180 பத்திரிகையாளர்களுக்கு குறித்த விருதைச் சமர்ப்பிப்பதுடன், கடந்த காலங்களில் உயிரிழந்த நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்களுக்கும் விருதைக் காணிக்கையாக்குகின்றோம் என்று தெரிவித்தார். (ற)

## சிரிய உள்நாட்டுப் போரில் இரசாயன ஆயுதங்கள்

### ஐ.நா. கண்காணிப்புக் குழு தகவல்

லண்டன், ஜூன் 6
சிரிய உள்நாட்டுப் போரில் விஷத் தன்மை கொண்ட இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று சிரிய உள்நாட்டுப் போரைக் கண்காணித்து வரும் ஐ.நா. குழு தெரிவித்துள்ளது.
சிரியாவின் போர் நிலைமைகளைக் கடந்த 5 மாதங்களாகக் கண்காணித்து வரும் ஐ.நாவின் விசேட குழு, நேற்றுத் தமது அவதானிப்புகள் குறித்த அறிக்கையை ஐ.நா.சபையிடம் சமர்ப்பித்தது.
அந்த அறிக்கையிலேயே சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமை குறித்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
அந்த அறிக்கையில் இதுகுறித்து மேலும் கூறப்பட்டுள்ளதாவது:
''சிரிய உள்நாட்டுப் போரில் அரச படைகளால் மிதமான அளவிலான இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளன. எனினும் கிடைத்த ஆதாரங்களைக் கொண்டு எத்தகைய இரசாயன வாயுக்கள் பயன்படுத்தப்பட்டன?, இவை எவ்வாறு பிரயோகிக்கப்பட்டன? என்பது குறித்து அறியமுடியவில்லை.
சிரிய இராணுவத்தால் நடத்தப்பட்ட 4 தாக்குதல்களில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது கண்டறியப்பட்டுள்ளது.
எனினும் இரசாயன ஆயுதங்கள் கிளர்ச்சியாளர்கள் கைகளில் சிக்குமாயின் அது பெருமளவு அழிவுகளை ஏற்படுத்தக்கூடும்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ற)




## திருமணம் ஆகாமல் குழந்தை பெற்றால் தண்டனை

பீஜிங், ஜூன் 6
திருமணமாகாது குழந்தை பெற்றால் அந்த தம்பதியினருக்கு அபராதம் விதிக்கும் புதிய சட்டம் குறித்து சீனா கவனம் செலுத்தியுள்ளது.
சீனாவில் உள்ள சீஜியாங் என்ற இடத்தில் பொது கழிவறை குழாயில், பிறந்த குழந்தை ஒன்று சிக்கியிருந்த நிலையில் மீட்கப்பட்டது. திருமணம் ஆகாத பெண் ஒருவர் இந்தக் குழந்தையை பெற்றெடுத்து கழிவறை குழாய்க்குள் வீசியிருக்கலாம் என்று விசாரணைகளில் தெரியவந்ததை அடுத்தே, திருமணம் ஆகாமல் குழந்தை பெற்றுக் கொள்வதைத் தடுக்க சீன அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.
சீனாவில் ஒரு குழந்தைக்கு மேல் பெற்றால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வரும் நிலையில், தற்போது அங்கு திருமணம் ஆகாமலே குழந்தை பெற்றுக் கொள்வது அதிகரித்துள்ளது.
தற்போது சீனாவின் வாஹுான் பிராந்தியத்தில் திருமணம் ஆகாமல் குழந்தை பெற்றால் அவர்களுக்கு அபராதம் விதிப்பதற்கு முடிவு செய்யப்பட்டு, அதற்கான சட்டத்தை உருவாக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளது மாகாண அரசு. (ற)

## ஈரான் மீது தடைகள்

### பொருளாதாரத்தை பலவீனமாக்க அமெ. முயற்சி

நியூயோர்க், ஜூன் 6
ஈரான் மீதான பொருளாதாரத் தடை தொடர்பான உத்தரவு ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா. இந்தத் தடை ஒரு வாரத்தில் ஈரான் மீது விதிக்கப்படும் மூன்றாவது பொருளாதாரத் தடையாகும்.
அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள ஈரான், அதன்பொருட்டு ஏராளமான சலுகைகளைப் பெற்றுள்ளது. எனினும் தற்போது குறித்த ஒப்பந்தத்தை மீறி அணு ஆயுதத் தயாரிப்புகளில் ஈடுபட்டு வருகின்றது என்று அமெரிக்கா போன்ற நாடுகள் குற்றஞ்சாட்டுகின்றன.
ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சிகளைக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஐ.நா. சபை மற்றும் அமெரிக்கா அந்த நாட்டுக்கு எதிராகக் கடும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.
இந்தநிலையில், தற்போது



ஈரான் மீது ஒரே வாரத்தில் அமெரிக்கா மூன்று தடைகளை விதித்துள்ளது.
எதிர்வரும் முதலாம் திகதி நடைமுறைக்கு வர உள்ள குறித்த தடைகளுக்கான உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கையெழுத்திட்டுள்ளார்.
இதுகுறித்துக் கூறிய வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜே கோர்னி,
''புதிய தடைகள் ஈரானின் பணமான ரியாலைக் குறிவைத்து விதிக்கப்பட்டுள்ளன. ரியால் பரிவர்த்தனை மேற்கொள்ளும் வெளிநாட்டு நிதி அமைப்புகள் மீது இத்தடைகள் விதிக்கப்படுகின்றன'' என்று தெரிவித்தார்.
ஈரானின் பணப் பெறுமதி ஏற்கனவே மிகவும் குறைந்துள்ள நிலையில், புதிய தடைகள் மூலம் ஈரான் பெரும் நிதி நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் என்று கூறப்படுகிறது. ஈரானுக்கு எதிராக அமெரிக்கா தடைகள் விதிப்பது இது ஒன்பதாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.(ற)

## திருமணச் செலவு 10 மில். அபராதம் 2.5 மில்லியன்

நியூயோர்க், ஜூன் 6
10 மில்லியன் டொலர் செலவில் நடத்தப்பட்ட தனது திருமணத்துக்காக 2.5 மில்லியன் பொலர் அபராதம் செலுத்தினார் 'பேஸ் புக்' இணை நிறுவுநர் சீன் பார்க்கர்.
தற்போது சமூகவலைத்தளங்களில் பிரபலமாகத் திகழும் 'பேஸ்புக்'கின் இணை நிறுவுநர் சீன் பார்க்கர். 2012ஆம் நிதியாண்டின்படி அவரது சொத்து மதிப்பு 2.1 பில்லியன் டொலர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.
அவர் கடந்த முதலாம் திகதி பாடல் எழுதுபவரும், பாடகியுமான அலெக்சாண்ட்ரா லேனாஸ் என்பவரை சான் பிரான்சிஸ்கோவில் திருமணம் செய்தார்.
தனது திருமணத்திற்கென 10 மில்லியன் டொலர் செலவில் ஆடம்பர மாளிகை, நீர்ப்பரப்பு போன்ற செயற்கை அமைப்புகளை உருவாக்கியிருந்தார்.
ஆனால் அவற்றுக்கு நகர நிர்வாகத்திடம் அவர் முறையான அனுமதி பெறவில்லை. கலிபோர்னியாவின் பாதுகாக்கப்பட்ட கடலோரப் பகுதியில் இவர் தன் திருமண நிகழ்ச்சிகளுக்காக இந்த பிரம்மாண்டமான அமைப்புகளை நிறுவியதால் கடலோர பாதுகாப்புக் குழு அவர் மீது வழக்குப் பதிவு செய்தது. அதன் பின்னர் பாதுகாப்பு குழுவினரிடம் சமரசம் செய்து கொண்ட பார்க்கர், தன்னுடைய தவறுக்காக 2.5 மில்லியன் பொலர் செலுத்தி பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டார். (ற)

## ஆடைத் தொழிலாளருக்கு பிரிட்டன் நிதியுதவி

லண்டன், ஜூன் 6
பங்களாதேஷின் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு 18 மில்லியன் பவுண்ஸ் நிதி உதவியை வழங்குவதாக பிரிட்டன் அறிவித்துள்ளது.
தலைநகர் டாக்காவில் ராணா பிளாசா என்ற ஆடைத் தொழிற்சாலை கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் ஆயிரத்து நூறுக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததைத் தொடர்ந்தே பிரிட்டன் நிதி உதவி வழங்கத் தீர்மானித்துள்ளது.
இந்தச் சம்பவம் அனுபவமான ஒரு விடயம். பங்களாதேஷில் பாதுகாப்புத் தரங்கள் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது என்று பிரிட்டன் கூறியுள்ளது.
பங்களாதேஷில் இடம் பெற்ற இந்த அனர்த்தம் உலகில் மிகவும் மோசமான கைத்தொழில் விபத்தாக பதிவாகியுள்ளதுடன், சர்வதேச ரீதியில் விமர்சனங்களை வெளிப்படுத்தியிருந்தது.
இந்த விபத்தில் 1,130 பேர் உயிரிழந்ததுடன், சுமார் 2,500 பேர் காயமடைந்திருந்தமை தெரிந்ததே. (ற)



## 300 தளங்களுக்கு ஜோர்டானில் தடை விதிப்பு

அம்மான், ஜூன் 6
அனுமதி பெறப்படாத மற்றும் பதிவுசெய்யப்படாத 300 க்கும் அதிகமான செய்தி இணையத்தளங்களை ஜோர்தான் அரசு தடைசெய்துள்ளது.
உணர்வுப்பூர்வமான செய்தி அறிக்கையிடலை தடைசெய்யும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
இவ்வாறான 304 உள்நாட்டு செய்தி இணையத்தளங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன என்று ஜோர்தானின் ஊடக மற்றும் வெளியீட்டுத் திணைக்களம் கூறியுள்ளது.
எனினும், 102 இணையத்தளங்கள் தொடர்ந்தும் செயற்படுகின்றன என்றும் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.(ற)

## நிலநடுக்கம்

ஹவாய்,, ஜூன் 6
ஹவாய் தீவுக்கு அருகே பசுபிக் பெருங்கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவு கோலில் 5.6 ஆகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தால், சுனாமி ஏற்படும் வாய்ப்புகள் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்தோ, பொருள்சேதம் குறித்தோ தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர் இ.சிவகுமார் அவர்களின்
பாசமிகு தாயார்

### இராசம்மா இராசையா

அவர்களின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C/9607) (6.11)

நலன்புரி சங்கம்
வலயக்கல்வி
அலுவலகம்,யாழ்ப்பாணம்.

வலயக்கல்விப்பணிப்பாளரும்,
நலன்புரி சங்க
அலுவலர்களும்

## மரண அறிவித்தல்

### கந்தையா திருஞானசம்பந்தர் (அம்பிகாபதி)

*(ஓய்வுபெற்ற வைத்தியசாலை பரிசாரகர்)*



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், அப்பிலாணை லேன், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருஞானசம்பந்தர் 02.06.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கற்பகம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பூரணத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் ரோகினி (கனடா), சோதிலிங்கம் ஆகி யோரின் அன்புச் சகோதரரும், லலிதாதேவி, சாரதாதேவி, நிர்மலாதேவி (இத்தாலி), குலதேவா (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் கனகரத்தினம், பத்மநாதன் (இத்தாலி), சாந்தினி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனும், தாரணி - கபிலன், முகுந்தன், ஐங்கரன், சிந்துஜா, சரவணன், பால்ராஜ் (இத்தாலி), சுதர்சன் (இத்தாலி), நிறஞ்சனா (இத்தாலி), கோகுலவதனன் (இத்தாலி), சுஜிதர் - கிரிஷாந்தன் (கனடா), நிஷாந்தன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு பேரனும், ஹன்சிகா, யதுஷன் (கனடா), சஞ்ஜித் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அப்பிலாணை லேன்,
கோப்பாய் மத்தி,கோப்பாய். (2.6)(37969)

தகவல்:
குடும்பத்தினர்.


உதயன் விளம்பர தொடர்புகளுக்கு: 021 5671111
advt@uthayan.com





## மரண அறிவித்தல்

### செல்லத்தம்பி தருமலிங்கம்



மண்கும்பான் 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி தருமலிங்கம் 01.06.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-மாரிமுத்து தம்பதியரின் அருமை மருமகனும், காலஞ் சென்ற சரஸ்வதியின் ஆருயிர்க் கணவரும், ஜெய லட்சுமி, வரதலெட்சுமி (லண்டன்), இராஜேஸ்வரி (இளைப்பாறிய உப தபாலதிபர்), தனேஸ்வரி (ஆசிரியர், சென் ஜேம்ஸ் மகளிர் மகாவித்தியாலயம்), ஞானேஸ்வரி (லண்டன்), சதீஸ்வரி (வவுனியா), விக்கினேஸ்வரி (லண்டன்), நகுலேஸ்வரி (லண்டன்), ஜெகதீஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரசூரியர் (சுவிஸ்), காலஞ்சென்ற இராஜகோபால், அன்ரன் யேசுதாசன் (ராணி நகை மாடம், வவுனியா), லோறன்ஸ் ஜேந்திரா (ஜெயப்பிரதா நகை மாடம், யாழ்ப்பாணம்), நவரெத்தினராசா (லண்டன்), சற்குணபாலசிங்கம் (அருள்குமரன் நகைமாடம், வவுனியா), ரூபகாந்தன் (லண்டன்), கலீந்திரர்ாசா (லண்டன்), சர்வேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனும், காலஞ் சென்ற இரத்தினம் மற்றும் பவளம் (லண்டன்), K.S. சரவணமுத்து, காலஞ்சென்ற மாணிக்கவாசகர் (தேசிங்குராசா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இந்திரா காந்தி-சிவலிங்கம் (சுவிஸ்), வதனா-ஞானசபேசன் (ஜேர்மனி), வாசுகி-ராஜன் (லண்டன்), நிமலன்-கவிதா (லண்டன்), பிரதீபன், சுரேஸ்-யசோதா (சுவிஸ்), வசந்தன் (கனடா), விஜிதா-லவன் (லண்டன்), காந்தன்-ஆர்த்தி (ஜேர்மனி), ரூபன்-துஷா (லண்டன்), சுதா (கனடா), லக்ஷா-ஜெகன் (கனடா), றஜீவ் (பிரான்ஸ்), ஹஜீவ் (பிரான்ஸ்), பிரதாப்-சுபைடா (கனடா), கிரிஷாந் (NDB Bank சுன்னாகம்), சஜீத் (உயர்தர மாணவன்), நிஷாந்த்-நிஷாந்தினி (லண்டன்), நித்தியா-தாஸ் (ஜேர்மனி), தனுசாந்த் (லண்டன்), நிஷானி-ஆதவன் (கனடா), கிசோக் (மனேச்மன்ற் மாணவன்), பிரசாந்த் (பொறியியல் பீடம்), துஷாந்த் (லண்டன்), துஷானா (லண்டன்), அனித்தன், கீத்தனா, நதீனா, சுஜான், சயீனா, சஸ்விந் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் நாளை (07.06.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மண்கும்பான் சாட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
மண்கும்பான் மேற்கு,
வேலணை. (38021)(10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### Dr. திருமதி சகுந்தலாதேவி சற்குணசீலன்

(Doctor -UK, நடேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவி)

இளவாலையை பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. சகுந்தலாதேவி சற்குணசீலன் (31.05.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சற்குணசீலன்
T.P: 00441784240626 (சி/9611)(10.6.3)

தகவல்:
த.குகனேசராசா(மைத்துனர்)
இளவாலை. 021 720 1220



### மார்க்கண்டு மாணிக்கம்

மட்டுவில் மத்தி, விளைவேலியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் வடக்கு, சந்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு மாணிக்கம் (03.06.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - நன்னி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கதிரன் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் , காலஞ்சென்ற பரமசாமியின் அன்புச் சகோதரனும், நிர்மலதாஸ் (சுவிஸ்), நிர்மலேஸ்வரன் (பிரான்ஸ்), நிர்மலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயராணி (சுவிஸ்), அருள்செல்வி (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், நிதுர்சன், நிதுர்சிகா, ஆகாஷ், றியாஸ், றிதுன், றிசிக்கா ஆகியோரின் பேரனும், பொன்னம்மா, சின்னத்துரை, பொன்னுத்துரை, சின்னையா, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மீசாலை வடக்கு, வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மட்டுவில் வடக்கு, சந்திரபுரம். (2.6.3)(38020)

தகவல்: குடும்பத்தினர்.



### திருமதி கந்தையா பூரணம்

அளவெட்டி, மாவத்தையைப் பிறப்பிடமாகவும், கூட்டுறவாளர் வீதி, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா பூரணம் நேற்று (05.06. 2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பொன்னு தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி விசுவர் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், நாகராசா, காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் செல்வராசா, தருமராசா, தங்கராசா, லலிதாதேவி, பத்மநாதன் (டென்மார்க்), பானுமதி ஆகியோரின் அன்புத் தாயும், ஞானசௌந்தரி, காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசையா, இராஜேஸ் வரி மற்றும் கமலாதேவி, கமலாதேவி, காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் ஜெகநாயகி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான தங்கம், சின்னம்மா, கந்தையா, வைத்திலிங்கம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

கூட்டுறவாளர் வீதி,அளவெட்டி. (2.6.3)(38026)

குடும்பத்தினர்.

### திருமதி திரேசம்மா ஜோசவ்



23, கொண்டடி வீதி, குருநகரைப் பிறப்பிடமாகவும் தற்போது ஆஸ்திரேலியாவில் வசித்து வந்தவருமான திருமதி திரேசம்மா ஜோசவ் (செல்லக்குமாரத்தி) அவர்கள் (03.06.2013) திங்கட்கிழமை காலை ஆஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நகைக்கடை உரிமையாளர் கபிரியேல் ஜோசவ் இன் அன்பு மனைவியும், காலஞ்சென்ற லூர்த்துமலர் (இன்பம்) மற்றும் ராஜேஸ்வரி (சின்னக்கிளி - ஓய்வுபெற்ற ஆசிரியை), கபிரியேல் ஜோசவ் அன்ரன் (குருகுலசிங்கம் - U.K), காலஞ்சென்ற யோ. ஜெயராணி (பவா) மற்றும் யோ.பத்மராஜா (துரைமணி - U.K ), காலஞ்சென்ற மேசிடெய்சி ( ஆசிரியை), கொன் சலேற்றா ஜீவா (கனடா) ஆகியோரின் பாசமிகு அன்னையும், அருளானந்தம் யேசுதாசன் (சிட்னி),காலஞ்சென்ற சிவராஜா (ஆசிரியர்) மற்றும் ராதா அன்ரன் ( U.K), உமா பத்மராஜா ( U.K), அந்தோனிப்பிள்ளை - கிறிஸ்தோப்பர் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - ஒஸ்மானியாக் கல்லூரி), வின்சன் சிங்கராயர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், அன்ரனெற் (சுரேஸ்), போல் (ரமேஸ்), கென்றிக்கன் (சதீஸ்), சுவீற்றி, குளோடியா, டினேஷ், நிதர்சினி (நிதா), நிரோஷினி (நிறோ), லக்ஷ்மன், பீஷ்மன், மனீஷா, வனிஷா, கிறிஸ்ரினா,பாரியாதா (பிரபாலினி), விவேக் வினுஷாந், ஜோனத்தன், ஜெனிவர், யோசுவா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஸ்ரீவன், டேமியன், பானு, கவிதா, ரெஷாளினி, டேவிட், ஆன், நத்தானியல், கெனா, டானியல், சந்தோஷ், யஸ்ரின், ஜே ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நாளை (07.06.2013) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன. இதனை முன்னிட்டு மவுண்கார்மேல் வீதியில் அமைந்துள்ள கார்மேல் மாதா ஆலயத்தில் நாளை (07.06.2013) வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு ஆன்ம சாந்திக்காக இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: அ.கிறிஸ்தோப்பர்
(மருமகன்)

6/2, [illegible] வீதி,யாழ்ப்பாணம். (2.6.3)(38032)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எக்ஸ்றே' இயந்திரம் பழுது

## காசநோய் வைத்தியசாலையில் சிரமத்தில் நோயாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 6
யாழ்.மாவட்ட காசநோய் வைத்தியசாலையில் கடந்த 10 மாத காலமாக 'எக்ஸ்ரே' கதிர் இயந்திரம் பழுதடைந்திருப்பதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வைத்தியசாலையில் பாவனையில் இருந்த எக்ஸ்ரே கதிர் இயக்க இயந்திரம் பழுதடைந்துள்ளது. எனினும் 10 மாதங்கள் கடந்தும் குறித்த இயந்திரம் சீர் செய்யப்படவில்லை.
இதனால் காசநோயால் பாதிப்படைந்த நோயாளர்களை எக்ஸ்ரே எடுப்பதற்கு பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.
இதன் காரணமாக காசநோயாளர்களுக்கு உடனடிச் சிகிச்சை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதால் நோயாளர்கள் பெரும் அவதியை எதிர்கொள்கின்றனர்.
காசநோயால் இனங்காணப்பட்ட நோயாளர்களுக்கு உடனடி சிகிச்சை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் நோயின் தாக்கம் அதிகரிப்பதற்கு வாய்ப்பாக உள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.
இந்த நிலையில் 'எக்ஸ்ரே' கதிர் இயந்திரத்தின் தேவை அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படுவதால் தடைப்பட்டிருக்கும் இயந்திரத்தை சீர்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-14)


## சுற்றவாளி எனக் கூறியவர் பிணையில் செல்ல அனுமதி

தென்மராட்சி, ஜூன்.6.
கசிப்பு வைத்திருந்த நபர் நீதிமன்றில் சுற்றவாளி எனக் கூறியதால் பிணையில் செல்லுமாறு உத்தரவிடப்பட்டது.
சாவகச்சேரி மதுவரி நிலைய அதிகாரியால் நபருக்கு எதிராக கசிப்பு உற்பத்தி செய்தமை, உற்பத்திக்கான உபகரணங்கள் வைத்திருந்தமை, கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருந்தமை, கசிப்பு வைத்திருந்தமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்களுடன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.
இந்த வழக்குக் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குற்றஞ் சுமத்தப்பட்டவர் சுற்றவாளி என தெரிவித்ததையடுத்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான குற்றப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் அடுத்த தவணைக்கு சட்சிகளுடன் வருகை தருமாறு மதுவரித் திணைக்கள அதிகாரிக்கு உத்தரவிட்டார். (வ-9)

# யாழில் 110 பேர் காச நோயால் பாதிப்பு

### கடந்த 5 மாத காலத்துக்குள்

யாழ்ப்பாணம்,ஜூன் 6
யாழ்.மாவட்டத்தில் கடந்த 5 மாத காலப் பகுதிக்குள் 110 பேர் காச நோயால் பாதிப்படைந்துள்ளனர் என்று யாழ்.மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சளியில் கிருமித்தொற்று ஏற்பட்டு நுரையீரலில் காசநோய்த்தாக்கம் ஏற்படுதல், சளியில் கிருமித் தொற்று ஏற்படாமல் நுரை



யீரலில் காசநோய்த்தாக்கம் ஏற்படல், நுரையீரல் அல்லாத ஏனைய உறுப்புக்களில் காசநோய்த்தாக்கம் ஏற்படல் என 3 பிரிவுகளாக காசநோய் இனங்காணப்படுகிறது.
இதற்கமைவாக கடந்த ஜனவரி மாதம் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்ட 13 பேரும், சளியில் கிருமித் தொற்று ஏற்படாத 5 பேரும், ஏனைய உறுப்புக்களில் காசநோய்த் தாக்கம் ஏற்பட்ட 2 பேரும் என 20 பேர் காசநோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.
கடந்த பெப்ரவரி மாதம் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்ட 5 பேரும், சளியில் கிருமித் தொற்று ஏற்படாத 8 பேரும், ஏனைய உறுப்புக்களில் காசநோய்த்தாக்கம் ஏற்பட்ட 4 பேரும் என 17 பேர் காசநோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.
கடந்த மார்ச் மாதம் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்ட 10 பேரும், தொற்று ஏற்படாத 6 பேரும், ஏனைய உறுப்புக்களில் காசநோய்த்தாக்கம் ஏற்பட்ட 9 பேரும் என 25 பேர் காசநோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த ஏப்ரல் மாதம் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்ட 9 பேரும், சளியில் தொற்று ஏற்படாத 7 பேரும், ஏனைய உறுப்புக்களில் காசநோய்த்தாக்கம் ஏற்பட்ட 8 பேரும் என 24 பேர் காசநோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.
கடந்த மே மாதம் சளியில் கிருமித் தொற்று ஏற்பட்ட 6 பேரும், சளியில் கிருமித் தொற்று ஏற்படாத 10 பேரும், ஏனைய உறுப்புக்களில் காசநோய்த்தாக்கம் ஏற்பட்ட 8 பேரும் என 24 பேர் காசநோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். இதன்படி கடந்த 5 மாத காலப் பகுதிக்குள் 110 பேர் காசநோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.
கடந்த வருடம் காசநோயால் பாதிக்கப்பட்டு 285 பேர் குணமடைந்துள்ளனர். இதனை விட 13 பேர் காசநோயால் இறப்பைச் சந்தித்தும் உள்ளனர்-என்றார். (வ-14)

## பாடசாலைக்கு அருகில் 'மரணப்பொறி'



யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் சின்னஞ் சிறுசுகள் மற்றும் பெரியவர்கள் நடமாடும் இடத்தில் 'மரணப் பொறி' காணப்படுவது குறித்து எவரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. தனியாருக்குச் சொந்தமான காணியின் மதில் ஈடாட்டம் கண்டுள்ளது. அந்த பழங்காலத்து மதிலில் பல இடங்களில் வெடிப்புகள் காணப்படுகின்றன. பாதுகாப்புக்காக இடையிடையே கட்டைகள் இறுக்கப்பட்டுள்ளன. மதில் சரிந்தால் இந்தக் கட்டைகள் தாக்குப் பிடிக்குமா? எந்த நிமிடத்திலும் பேராபத்து நிகழும் அபாயகரமான நிலைமை. விபரீதங்கள் நடப்பதற்கு முன்னர் ஏதாவது செய்தாக வேண்டும். தற்காலிகமாக அந்தப் பகுதியில் 'பரல்'கள் வைத்து அந்தப் பகுதியை மட்டும் மூடி, பாதுகாப்பு தேடுவதே நல்லது. இதனை உடனடியாக பாடசாலை சமூகமோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ செய்ய வேண்டும். அவசரமாக அதனைச் செய்யவேண்டும் செய்வார்களா...?

## யாழ். மத்திய கல்லூரியில் கடற் சாரணியர் இயக்கம்



யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் மற்றும் கடற் சாரணர் பிரிவுத் தலைவர் எஸ்.சுபேதர் கடற் சாரணர் பாசறை பயிற்சி அறையை நாடா வெட்டித் திறந்து வைக்கின்றனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கடற் சாரணியர் இயக்கம் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் முதலாவது சாரணர் குழு எனும் கௌரவத்தைப் பெற்ற யாழ். மத்திய கல்லூரியின் சாரணர் குழு 2016 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாட வுள்ள நிலையில் கடற் சாரணியர் படை உருவாக்கப்பட்டுள்ளது.
கடற் சாரணியர்களின் பயிற்சிகளுக்கு தேவையான சாரணர் கூடாரம், முதலுதவிப் பெட்டி மற்றும் ஏனைய உபகரணங்கள் மத்திய கல்லூரியின் முன்னாள் சாரணர்களால் கடற் சாரணர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கடற் சாரணர்களுக்கு கடல் சார்ந்த பயிற்சிகள் குறிப்பாக நீச்சல், படகோட்டம், கடலில் திசை அறிதல், முதலுதவி உட்பட பல பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட கடற்சாரணர் இயக்கத்தின் வகுப்பறையை கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில் வேந்தன் திறந்து வைக்க கடற் சாரணர்களின் பெயர் பலகையை உதவிமாவட்ட ஆணையாளர் எஸ். தில்லைநாதன் திரை நீக்கம் செய்தார். (வ-14)

## முதலிடத்தில் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வலி.கிழக்கு கிளை

அச்சுவேலி, ஜூன் 6
அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் வலிகாமம் கிழக்கு பிரதேச கிளை மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய ரீதியில் நடைபெறவுள்ள மதிப்பீடுகளில் கலந்துகொள்ளத் தகுதி பெற்றுள்ளது. யாழ். மாவட்ட ரீதியில் 135 புள்ளிகளை அது பெற்றுக் கொண்டது.
அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.
யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக கிளை மத்தியில் மேற்கொள்ளப்பட்ட மதிப் பீடுகளின் அடிப்படையில் வலி. கிழக்குக் கிளை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.
அங்கத்தவர் எண்ணிக்கை, மரண சகாய நிதித் திட்டத்தில் இணைந்தோர் தொகை, சேமிப்புத் திட்டம், அமைப்பின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் ஆவணங்களைப் பேணல், அங்கத்தவர்களுக்கான சந்திப்பு, வசதி, நிர்வாகத்தின் செயற்பாடு தொடர்பாக யாழ்.மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளில் குறித்த கிளை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. (வ-11)

### மாலை 6 மணியுடன் வகுப்புகள் நிறுத்தம்

# தனியார் கல்வி நிறுவனங்கள் உடன் முடிவை நடைமுறைப்படுத்த வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 6
தனியரர் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புக்கள் அனைத்தும் மாலை 6 மணியுடன் நிறுத்தப்பட வேண்டும் என எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு யாழ். மாநகர சபை கோரிக்கை விடுத்துள்ளது.
மாணவர் ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த மாதம் யாழ்.மாநகர சபையில் இடம்பெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டன.
தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துவோர் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர் தவிர்ந்த ஏனைய வகுப்புக்களில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது.
பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாணவர்களுக்கு முற்பகல் 10 மணியிலிருந்து வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.
சனிக்கிழமைகளில் வழமை போன்று வகுப்புக்கள் நடத்தப்படும். அனைத்து வகுப்புகளும் தினமும் மாலை 6 மணியுடன் மூடப்பட வேண்டும் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.
அத்துடன் தனியார், பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தும் உரிமையாளர்கள் மாணவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான மலசலகூடம், சுத்தம் செய்யப்பட்ட குடிதண்ணீர் போதுமான காற்றோட்ட வசதிகள், ஒளியூட்டல் வசதி, தரமான இருக்கை வசதிகள், பாதுகாப்பான வாகன தரிப்பிட வசதிகள், சுத்தம் சுகாதாரமான கட்டட வசதிகள் என்பன பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து இவற்றை நடைமுறைப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.
எனவே இந்த நடைமுறை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையற்ற தலையீடுகளில் ஈடுபடுகிறார் கிழக்கு ஆளுநர்

## மாகாணசபை உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

திருகோணமலை, ஜூன் 6
கிழக்கு மாகாண ஆளுநர் ரியல் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம தேவையற்ற தலையீடுகளில் ஈடுபடுகிறார் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.
கிழக்கு மாகாண ஆளுநரின் தேவையற்ற சில நடவடிக்கைகளைக் கண்டித்து அமைச்சரவை கூட்டம் கட்சி பேதமின்றி புறக்கணிக்கப்பட்டது. ''இது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தெரியப்படுத்தவுள்ளோம்'' என்று அவர்கள் கூறினர்.
ஆளுநர் அமைச்சரவை அதிகாரங்களிலும் தீர்மானங்கள் நிறைவேற்றுவதிலும் தலையிடுகின்றார் என்று மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.
இந்தச் செயற்பாடுகளை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் கண்டு கொள்ளாதிருப்பது கவலை அளிக்கிறது என்று அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர். (ச-ரி)

**ஆளுநர் அமைச்சரவை அதிகாரங்களிலும் தீர்மானங்கள் நிறைவேற்றுவதிலும் தலையிடுகின்றார்.**

# பூங்கா அமைப்பதை தடுக்க சிலர் முயற்சி

### கல்முனை முதல்வர் குற்றச்சாட்டு



**சாய்ந்தமருது கடற்கரைப் பகுதியில் 15 மில்லியன் ரூபா செலவில் கிழக்கின் முன் மாதிரி கடற்கரை பூங்கா கட்டப்பட்டு வருகிறது.**

கல்முனை, ஜூன் 6
''கிழக்கின் முன்மாதிரி கடற்கரைப் பூங்கா அமைப்பதை சிலர் தடுக்க முற்படுகின்றனர். இது அவர்களின் பகற் கனவாகவே அமையும்'' என்று கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப் கூறியுள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
சாய்ந்தமருது கடற்கரைப் பகுதியில் 15 மில்லியன் ரூபா செலவில் கிழக்கின் முன்மாதிரி கடற்கரைப் பூங்காவைக் கட்டி வருகின்றோம். அதன் முதற்கட்டமாக 60 லட்சம் ரூபா செலவிலான பணிகள் நிறைவடைந்துவிட்டன. இரண்டாம் கட்டமாக 90 லட்சம் ரூபா செலவிலான பணிகள் ஆரம்பமாகியுள்ளன.
சிலர் இந்த அபிவிருத்தி முயற்சியைத் தடுக்க முனைகின்றனர். அதனால் நான் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் உதவி கோரியுள்ளேன். இந்தத் தடைகளை நீக்கி வேலைத் திட்டம் துரித கதியில் இடம்பெற நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளேன்.- என்றார். (ச-ரி)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனை இலங்கைக்கான பிரான்ஸ் தூதர் கிறிஸ்ரின் றொபிசொன் அம்மையார் அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

# வாகன விபத்தில் பெண் சாவு; மூவர் படுகாயம்

அம்பாறை, ஜூன் 6
அம்பாறையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.
அம்பாறை, சாய்ந்தமருதைச் சேர்ந்த குடும்பம் ஒன்று கொழும்பில் இருந்து கல்முனை நோக்கி காரில் பயணித்துக் கொண்டிருந்த போதே குறித்த கார் கொனாகொல்ல நெடுஞ்சாலையில் பள்ளம் ஒன்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. (ச)

# அமெ. உடன்பாட்டு சர்ச்சை பேச்சு நடத்தினார் மஜீத்

திருகோணமலை, ஜூன் 6
திருகோணமலையில் அமெரிக்க தகவல் நிலையத்தை அமைப்பது தொடர்பாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம், திருகோணமலை நகரசபையுடன் செய்து கொண்ட உடன்பாடு குறித்து கிழக்கு மாகாண முதல்வர் அப்துல் நஜீப் ஏ மஜீத் இரண்டு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.



திருகோணமலை நகர முதல்வர் மற்றும், அமெரிக்கத் தூதர் மிச்சேல் ஜே சிசின் ஆகியோருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்தார்.
திருகோணமலை மாவட்டத்துக்கு கல்வி வசதிகளை அளிக்கும் நோக்கிலேயே இந்தத் தகவல் நிலையத்தை அமைக்கும் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது என்று அமெரிக்கத் தூதர் சுட்டிக்காட்டினார்.
திருகோணமலை நகரசபையுடன் அமெரிக்கத் தூதரகம், செய்து கொண்ட உடன்பாடு குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்படாதது குறித்து எழுந்த சர்ச்சையால், இந்த உடன்பாட்டை திருகோணமலை நகர சபை இடைநிறுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கோயில் திருடர்களை பிடிக்க பொலிஸ் குழுக்கள் களத்தில்

மட்டக்களப்பு, ஜூன் 6
மட்டக்களப்பில் கோயில்களை உடைத்து பொருள்களை திருடிய சந்தேகநபர்களை கைது செய்வதற்காக இரண்டு விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.
எனினும் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பிரதேசத்திலுள்ள குருக்கள் மடம் செல்லகதிர்காமம் ஆலயம், மாங்காடு மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் ஆகியன சனிக்கிழமை இரவு உடைக்கப்பட்டு தங்க ஆபரணங்களும் தகடுகளும் திருடப்பட்டிருந்தன.
இதன்போது ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த விக்கிரகங்களைச் சந்தேகநபர்கள் சேதப்படுத்தியிருந்தனர்.
இந்த இரண்டு சம்பவங்கள் தொடர்பிலும் களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.
இதேவேளை, குருக்கள் மடம் ஐயனார் கோயிலின் உண்டியலும் இனந்தெரியாதவர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.
அம்பாறை, பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயத்தின் கலசம் ஒன்றை இனந்தெரியாத சிலர் சனிக்கிழமை இரவு கழற்றிச் சென்றுள்ளனர் என்று ஆலய நிர்வாக சபையின் தலைவர் தெரிவித்தார். (ச)

# இந்தியா சென்றனர் மாகாண சபை உறுப்பினர்கள்

திருகோணமலை, ஜூன் 6
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளைக் கொண்ட குழு திங்கட்கிழமை இந்தியாவுக்கு சென்றுள்ளது என்று கிழக்கு மாகாண சபை பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்தார்.
இந்தியாவில் நடைபெறுகின்ற உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் சட்ட விடயம் தொடர்பிலான செயலமர்வில், கலந்து கொள்வதற்காகவே இந்தக் குழு இந்தியாவுக்குச் சென்றுள்ளது.
குழுவில், கிழக்கு மாகாண சபை தவிசாளர் திருமதி ஆரியவதி கலப்பதி, கிழக்கு மாகாண சபை பிரதித் தவிசாளர் எம்.எஸ்.சுபைர், மாகாண சபை பிரதம செயலர், திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். (ச)

# மீளக்குடியேறியோருக்கு வீடுகள் சம்பூர், சீதனவெளியில்

திருகோணமலை,ஜூன் 6
சம்பூர், சீதனவெளியில் மீள்குடியேற்றப்பட்ட 28 குடும்பங்களுக்கு வீடுகள் கையளிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
பட்டித்திடல், கிளிவெட்டி, கட்டைபறிச்சான் ஆகிய அகதி முகாம்களில் இருந்த மக்களே இவ்வாறு குடியேற்றப்பட்டனர்.
கடந்த 2006ஆம் ஆண்டு போரால் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்த மக்களில் முதற்கட்டமாக 56 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரண்டாம் கட்டமாக 28 குடும்பங்களுக்கான வீடுகள் கையளிக்கப்பட்டன.
இந்த நிகழ்வில் கிழக்கு பாதுகாப்பு முப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா, திருகோணமலை மாவட்ட செயலர் ரி.ரி. ரஞ்சித் டி சில்வா , மேலதிக அரச அதிபர் எஸ். அருள்ராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.
''திருகோணமலை மாவட்டத்தில் இன்னமும் 812 குடும்பங்கள் மாத்திரம் குடியமர்த்தப்படவேண்டும். அதற்கு அரசு தயாராக உள்ளது. மக்கள் விரும்பினால் அவர்களையும் குடியேற்ற உள்ளோம்'' என்று அரச அதிபர் ரஞ்சித் டி சில்வா தெரிவித்தார். (ச-40)




# காளி கோயில் திருவிழாவில் 200 பொலிஸார் பாதுகாப்பில்

மட்டக்களப்பு,ஜூன் 6
மட்டக்களப்பு, புன்னச்சோலை காளி கோயில் வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு கோயில் வளாகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் 200 பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
மட்டக்களப்பு பிராந்திய மூத்த பொலிஸ் மா அதிபர் அஜந்த சமரக்கோனின் உத்தரவின் பேரில் அந்தப் பிரதேசத்தில் விசேட பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டு 200 பொலிஸாரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
ஆலயத்தின் வருடாந்த உற்சவத்துக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்புக் கருதியும், சுற்றுச் சூழலில் ஏற்படுகின்ற கொள்ளைகள் மற்றும் குற்றச் செயல்களைத் தடுக்கும் பொருட்டும் பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்காளர் பட்டியல் திருத்தப் பத்திரங்கள் சேகரிப்பு ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 6
2013ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலின் திருத்தப் பத்திரங்களை சேகரிக்கும் இந்த ஆண்டுக்கான நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 15ஆம் திகதி வரை தமது பகுதிகளிலுள்ள கிராம சேவை உத்தியோகத்தர்களிடம் அந்தப் பத்திரங்களை கையளிக்க முடியும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்னாயக்க தெரிவித்தார். அதன் பின்னர் 2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்பட்டியலின் முதற்கட்ட அறிக்கை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தப்படும் என்று அவர் கூறினார். (ச)



சுற்றுலாப் பயணம் மேற்கொண்ட உகண்டா ஜனாதிபதி யுவேரிகுட்டா முசவேனி தனது நாட்டுக்குத் திரும்பும் வழியில் சுமார் ஒரு மணித்தியாலம் வரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தரித்து நின்றபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரில் சென்று அவரை வரவேற்றார். (ச)

## பல்கலைக்கழகங்களுக்கு மேலும் 6,445 மாணவர்கள்

கொழும்பு, ஜூன் 6
இந்த ஆண்டு பல்கலைக் கழகங்களுக்கு விண்ணப்பித்து இணைந்துகொள்ளாத மாணவர்களுக்குப் பதிலாக மேலும் 6,455 மாணவர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
மூன்று கட்டங்களின் கீழ் இந்தக் குழுவினர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் கேஷனிக்கா ஹிரிம்புரேகம தெரிவித்தார்.
அவர்களை இணைத்துக்கொண்ட பின்னர் 2011 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை பல்கலைக் கழகங்களில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் நிறைவடையும் என்று அவர் தெரிவித்தார்.
2012 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைப் பல்கலைக்கழகங்களில் இணைத்துக்கொள்வதற்கான கையேடு எதிர்வரும் இரண்டு வாரங்களில் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.



இந்த ஆண்டு இறுதிக்குள் குறித்த மாணவர்களை பல்கலைக்கழகங்களில் இணைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# ஜனாதிபதியின் மே தின அறிவிப்பு முழுப் பொய்

### மின்கட்டண மானியம் தொடர்பில் ஐ.தே.கட்சி கருத்து

கொழும்பு; ஜூன் 6
மின் கட்டண அதிகரிப்புக்கு மானியம் வழங்கப்படும் என்று கடந்த மே தினத்தன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த விசேட அறிவிப்பு முழுப்பொய் என்று தெரிவித்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.
''ஜனாதிபதியின் அறிவிப்பின்படி இதுவரையில் எவருக்கும் மானியம் வழங்கப்படவில்லை'' என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம்சாட்டினார்.
ஐ.தே.கவின் கொழும்பிலுள்ள தொழிற்சங்க அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் கூறியதாவது:



அரசின் மின் கட்டண அதிகரிப்பைக் கண்டித்து எதிர்வரும் 13ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கண்டியில் மாபெரும் போராட்டம் நடத்தவுள்ளோம்.
ஜனாதிபதியின் மே தின விசேட அறிவிப்பு முழுப்பொய். பலப்பிட்டியவிலுள்ள மின் பாவனையாளர் ஒருவரின் மாதாந்த மின் கட்டணப் பட்டியலினூடாக இதனை நான் நிரூபிக்கிறேன்.
கடந்த ஏப்ரல் மாதம் 161 மின் அலகுகளைப் பாவித்த குறித்த பாவனையாளருக்கு 3 ஆயிரத்து 210 ரூபா 72 சதம் அந்த மாதத்துக்கான மின் கட்டணமாக அறவிடப்பட்ட அதே வேளை, கடந்த மே மாதம் 157 மின் அலகுகளைப் பாவித்தவருக்கு 4 ஆயிரத்து 263 ரூபா மின் கட்டணம் அறவிடப்படுகிறது.
கடந்த ஏப்ரல் மாதத்தைவிட மே மாதம் 4 அலகுகள் குறைவாக மின் பாவனை மேற்கொண்ட நுகர்வோருக்கு ஆயிரத்து 53 ரூபா மின் கட்டணம் அதிகமாக அறவிடப்பட்டுள்ளது. அப்படியாயின், 90 அலகுகள் முதல் 130 அலகுகள் வரையில் மின் பாவனை செய்யும் நுகர்வோருக்கு ஜனாதிபதி வழங்குவதாகக் கூறிய மானியம் எங்கே?
மின் கட்டண அதிகரிப்புக் கேற்ப நுகர்வோருக்கு மானியம் வழங்க அரசு இதுவரையில் முன் வரவில்லை - என்றார். (ச)

## வெலிக்கடைச் சிறை பாதுக்கைக்கு மாற்றம்

### புனர்வாழ்வு அமைச்சு தகவல்



கொழும்பு, ஜூன் 6
வெலிக்கடை சிறைச்சாலையை கொழும்புக்கு வெளியே பாதுக்கை என்ற இடத்துக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.
பாதுக்கையிலுள்ள வட்டரெக்க என்னும் இடத்தில் புதிய சிறைச்சாலை வளாகம் அமைக்கப்பட்டு வருவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
தற்போது வெலிக்கடை சிறைச்சாலை அமைந்துள்ள 48 ஏக்கர் வளாகத்தின் சந்தைப் பெறுமதி 15 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.
வெலிக்கடை சிறைச்சாலை அந்த இடத்திலிருந்து மாற்றப்பட்டதும் குறித்த இடம் விற்பனை செய்யப்படும். அந்த வருமானத்தில், நாடு முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகளை மறுசீரமைக்க முடியும் என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.
வெலிக்கடை சிறைச்சாலை பிரிட்டன் ஆட்சியாளர்களால் 1841 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. (ச)

## தேசிய கல்விக் கொள்கை இந்த ஆண்டில் மீளாய்வு

கொழும்பு, ஜூன் 6
இலங்கையின் தேசியக் கல்விக் கொள்கை இந்த வருடம் மீளாய்வு செய்யப்படவுள்ளது.
நடைமுறையிலுள்ள கல்விக் கொள்கையை மேலும் முன்னேற்றும் வகையில் பல புதிய மாற்றங்கள் அதில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று தேசிய கல்வி ஆணைக் குழுவின் தலைவர் லக்ஷ்மன் ஜயதிலக்க கூறினார்.
இது தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த வருடம் பொதுக் கல்வி, தொழில்சார் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி, பாடசாலை நிர்வாகம், ஆசிரிய நியமனங்கள், கல்வித் திட்டமிடல், தேசிய மற்றும் மாகாண மட்டத்திலான பாடசாலை முகாமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து தேசியக் கல்விக் கொள்கை மீளாய்வு செய்யப்படவுள்ளது - என்றார். (ச)


**பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து தேசியக் கல்விக் கொள்கை மீளாய்வு செய்யப்படவுள்ளது.**

## சட்டபீட மாணவி டெங்கால் சாவு

கொழும்பு, ஜூன் 6
டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட மாணவி உயிரிழந்துள்ளார்.
சிகிச்சை பயனின்றி நேற்று புதன்கிழமை காலை குறித்த மாணவி உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.
டெங்கு நோய் காரணமாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த மாணவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது

### கனியவள அமைச்சு தகவல்



கொழும்பு, ஜூன் 6
நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று கனியவள அமைச்சு தெரிவித்துள்ளது.
எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்று சில தரப்பினர் பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்துச் செல்கின்றனர் என்று கனியவள அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
தற்காலிகமாக மூடப்பட்டிருந்த சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும் அங்கு தரமான எரிபொருள் உற்பத்தி செய்யப்படுவதில்லை என்று எரிபொருள் கூட்டுத்தாபன தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.
அதனால் அவசரமாக எரிபொருள் கொள்வனவு செய்ய எரிபொருள் கூட்டுத்தாபனம் முயற்சிக்கிறது என்று எரிபொருள் கூட்டுத்தாபன தேசிய சேவை சங்கக் கிளையின் ஏற்பாட்டாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.
சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் கடந்த 16 ஆம் திகதி தற்காலிகமாக மூடப்பட்டு மீண்டும் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பாட்டும் நானே, பாவமும் நானே என்று தொடரும் போக்கில்....

அரசாங்க அதிகாரிகள் மக்களுக்குச் சேவை செய்பவர்களாக இருக்க வேண்டும்; அரசுக்குச் சேவை செய்பவர்களாக இருக்கக் கூடாது. ஆனால் இன்றைய அரச அதிகாரிகள் மக்களை நல்வழிப்படுத்துவதை விடுத்து, அரசாங்கத்துக்குச் சேவகம் செய்பவர்களாகவே இருக்கின்றனர்.

வடமாகாணத்தின் பிரதம செயலாளராக, அதி உயர் அரச அதிகாரியாகப் பணிபுரிந்த எஸ்.ரங்கராஜன் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார்; சாடி உள்ளார்.

யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற வாக்காளர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே, வடமாகாண முன்னாள் செயலாளர், இப்போதைய நிலையை, அர்த்தபுஷ்டியுடன் முன்வைத்தார்.

வாக்காளர் பெயர்ப் பட்டியல்களைப் பதிவு செய்யும் பணிகளில் தென் பகுதிகளில் சகலரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். அங்கு பணிபுரியும் அரச அதி காரிகள் உணர்வுபூர்வமாக தமக்குரிய கடமைகளை நிறைவேற்றுகின்றனர்-

அவர்களுடன் ஒப்பிடும்போது எமது பிரதேசங்களில் இது விடயத்தையும், இதுபோன்ற இன்னும் மிகப் பல அலுவல்களையும் அரச அதிகாரிகள், கடமைக்காகவே செய்கிறார்கள்-என்று சுட்டிக்காட்டினார்.

முன்னாள் பிரதம செயலாளரின் இக் கருத்துக்களை, இப்போதைய அரச அதிகாரிகள், சீரணிக்க வேண்டும், மக்கள் பணியை பழுதிலாத் திறனுடன் முழுக்க முழுக்க ஆற்றுவதற்கு முன்வரவேண்டும். ஆனால் அது சாத்தியமா, அதற்கான மனப்பக்குவம் பத்துச் சத வீதத்தினரிடமாவது உண்டா என்பதனைக் கருத்துக் கணிப்பு வைத்தே அறிய முடியும்....!

மன்னர் யுகம், சர்வாதிகாரிகள் யுகம் என்பன நொறுக்கி வீழ்த்தப்பட்ட பின்னரே மக்கள் ஆட்சி யுகம் மலர்ந்தது. மக்களால், மக்களுக்காக, மக்கள் ஆட்சி முறை உலகின் மிகப் பல நாடுகளுக்கும் பரவியது. ஆனால் மக்கள் ஆட்சி என்ற போர்வையில் சர்வாதிகார ஆட்சிகளும் தலையெடுக்கத் தான் செய்தன. இப்போதும் அது சில நாடுகளில் பல்வேறு மறுவடிவங்களில் செயற்படுகின்றன.

ஜனநாயக நாடுகளில், மக்களின் வரிப் பணத்தைக் கொண்டே அபிவிருத்தி மற்றும் மக்கள் நலத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அரசாங்கத் திணைக்களங்களும் வேறு அரச நிறுவனங்களும் மக்களின் பணத்தைக் கொண்டே இயங்குகின்றன.

அவ்வாறிருக்க, மக்களின் வரிப் பணத்தையே தமது ஊதியமாகப் பெறும் அரச சேவையாளர்கள் மக்களுக்குச் சேவை செய்யாமல், அரசுக்கு சேவகம் செய்வது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. அதனையே வடமாகாண சபையின் முன்னாள் செயலாளர் மனம் நொந்து சுட்டிக்காட்டியுள்ளார் எனலாம்.

மறுபுறத்தில், 2007 ஆம் ஆண்டில், நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட, பிரசைகள் சேவைப் பட்டயம், அரச அலுவலர்கள் மக்களுக்குச் சேவையாற்றுவதில் மேற்கொள்ள வேண்டிய அம்சங்களை மிகத் தெளிவாக தொட்டுக் காட்டுகிறது.

அரச சேவையாளர்கள் மக்களுக்குத் தாம் ஆற்றும் பணிகளில் வெளிப்படைத் தன்மை (Transparency), வகைகூறல் (Accountability), பொறுப்புடைமை (Responsiveness) ஆகியவற்றைத் தவறாமல் கையாள வேண்டும் என்று அது வலியுறுத்துகிறது.

அரச சேவையாளர்கள் ஒவ்வொருவரது பணியிலும் குறிக்கப்பட்ட பின்வரும் ஒழுக்கக் கோவைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றை அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நம்பகத்தன்மை, நீதி, பணிவு, புரிந்துணர்வு, நடுவுநிலைமை (பக்கம் சாராமை), வெளிப்படைத் தன்மை, வகைகூறல், விரைவான செயற்பாடு, வினைத்திறன் என்பன தட்டிக் கழிக்க முடியாத நெறிகளாக, அரச அலுவலர்களுக்கு வகுக்கப்பட்டுள்ளன.

ஆனால், வடமாகாணத்தின் முன்னாள் பிரதம செயலாளர் சுட்டிக்காட்டி உள்ளது போன்று அரச அலுவலர்களில் மிக மிகப் பெரும்பான்மையானோர் (அண்ணளவாக) ஐந்து சதவீதமானோர் தவிர்த்து ஏனையோர் மக்கள் நலன் நாடிச் செயற்படுவதைத் தவிர்த்து அரசுக்குச் சேவகம் செய்வதே இயல்பாகி விட்டது. அரச சேவையாளர்களுக்கு உரிய ஒழுக்க விதிகள் பலப் பல சந்தர்ப்பங்களிலும் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளன.

பாட்டும் நானே, பாவமும் நானே என்ற நிலையே வடக்கில் வானுயரத் தெரிகிறது. பாவம், எங்கள் மக்கள் என்று கழிவிரக்கம் கொள்வதைவிட வேறு வழி எதுவோ.....?

# முகாம் வாழ்வுக்கு முடிவு வருமா...?

அ.அச்சுதன்



2006 ஆம் ஆண்டு சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பிலுள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்ந்த நாங்கள் கிளிவெட்டி நலன்புரி முகாமுக்கு வந்து 5 வருடங்களாகின்றன என முகாமில் வாழும் சரோஜாதேவி (வயது-54) குறிப்பிட்டார். எமது பெண்பிள்ளைகளுக்கு திருமணம் செய்கின்ற போது, சம்பூரில் குடியேற்றிய பின் காணி, வீடு, வயல் தருகின்றோம் எனக்கூறி திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்றம் இன்றும் நடைபெறாததால் திருமணம் செய்த ஆண்பிள்ளைகள் கிளிவெட்டி அல்லது வேறு இடத்தில் வீடு, வயல் வாங்கித் தரும்படி கேட்கின்றார்கள். நாம் எப்படி வாங்கிக் கொடுப்பது? அன்றாடம் சாப்பிடுவதற்கே எமக்கு வழி தெரியாமல் இருக்கும்போது, எப்படி நாங்கள் வாங்கிக் கொடுப்பது? இதனால் இன்று திருமணம் செய்த பல குடும்பங்கள் பிரிந்து வாழும் நிலை உருவாகி வருகின்றது எனத் தெரிவித்த சரோஜாதேவி மேலும் குறிப்பிடுகையில்:-

போர் முடிந்து 4 வருடங்கள் கடந்த நிலையில் வன்னியில் மீள் குடியேற்றம் இடம்பெற்று வருகின்றது. சம்பூரில் மட்டும் ஏன் எங்களை குடியேற்ற அரசு தடை போடுகின்றது. இப்போதான் விடுதலைப் புலிகள் இல்லையே ? ஏன் அரசு குடியேற்றப் பயப்படுகின்றது எனத் தெரிவித்தார் கிளிவெட்டி நலன்புரி முகாமில் வசிக்கும் க.செல்வராஜா (வயது-55) முகாம் வாழ்க்கை பற்றிக் குறிப்பிடுகையில்:-

ஒரு நேரம் சாப்பிட்டால் ஒரு நேரம் சாப்பிடாமல் இருக்கின்றோம். சாப்பாட்டுக்குக் கூட வழி இல்லை. குடிப்பதற்கு தண்ணீர் மட்டும் தான் கிடைக்கின்றது. அரசினால் எவ்வித உதவிகளும் இல்லை. தேர்தல் காலத்தில் மட்டும் அரசியல்வாதிகள் வருவார்கள். எங்களுக்கு வாக்குப் போடுங்கள், உங்களை சம்பூரில் குடியேற்ற நடவடிக்கை எடுப்போம் என்பார்கள். ஆனால் இதுவரை ஒன்றும் நடந்தது இல்லை. அரசு எங்களை சீதனவெளி என்ற இடத்தில் குடியமர்த்த நடவடிக்கை எடுத்து வருகின்றது. சீதனவெளி மக்கள் வாழ்வதற்கான இடம் இல்லை. தண்ணீர் எடுப்பதாக இருந்தால் 60 அடி ஆழத்துக்கு கிணறு வெட்ட வேண்டும். அப்படி வெட்டி தண்ணீர் கண்டாலும் ஒருவாளித் தண்ணீர் எடுத்து ,குளித்து அடுத்தவாளி தண்ணீர் எடுப்பதற்கு இடையில் உடம்பிலுள்ள தண்ணீர் காய்ந்து விடும்.

அந்தப் பகுதி கற்கள் நிறைந்த பூமி, பயிர்ச்செய்கை செய்ய முடியாத நிலம், உவர் கலந்த மண்ணைக்கொண்ட பகுதி. அப்படியான இடத்தில் நாம் எப்படி குடியேற முடியும். எட்டு வருடங்களாக அகதி முகாம் வாழ்க்கை வாழ்ந்து வருகின்றோம். அகதி முகாமில் தான் எமது காலம் முடிந்தாலும் பரவாயில்லை. எமது சம்பூரைத் தவிர வேறு எந்தப் பகுதியிலும் குடியேறமாட்டோம் என உறுதியாகக் குறிப்பிட்டார்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான மயில்வாகனம் கிருஷ்ணமூர்த்தி சம்பூர்-5 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். 2006 ஆம் ஆண்டு சம்பூரில் ஏற்பட்ட போர் காரணமாக சம்பூரிலிருந்து இடம் பெயர்ந்து நான்கு வருடங்களாக மட்டக்களப்பில் அகதி வாழ்க்கை வாழ்ந்த இவர் அங்கிருந்து கட்டை பறிச்சான் நலன்புரி முகாமுக்கு வந்து நான்கு வருடங்கள் ஆகின்றது எனத் தெரிவிக்கும் கிருஷ்ணமூர்த்தி சம்பூர் பிரதேச மீனவர் சங்கத்தின் தலைவராகவும் இருக்கின்றார். சம்பூரில் மிகவும் வசதியாக வாழ்ந்த இவர் தனது குடும்பத்தைக் கொண்டு நடத்துவதற்கு இன்று மிகவும் கஷ்டப்படுவதைக் காண முடிகின்றது. உலர் உணவுப் பொருள் நிவாரணம் நிறுத்தப்பட்டு இரண்டு வருடங்களாகின்றன. அரசினால் எவ்வித நிவாரணப் பொருள்களும் வழங்கப்படுவதில்லை எனக் குறிப்பிடும் கிருஷ்ணமூர்த்தி, கட்டைப் பறிச்சான் முகாமுக்கு வந்ததன் பின் கடற்றொழில் செய்வதற்கு பல அமைச்சர்களுக்கு விண்ணப்பங்கள் கொடுத்தும் சம்பூர் கடலில் மீன்பிடிப்பதற்கு இன்னும் அனுமதி தருகின்றார்கள் இல்லை. இராணுவ அதிகாரி ஒருவர் முகாமிற்கு வந்த நாங்கள் குறிப்பிடும் பகுதியில் குடியேறினால் உங்களை சம்பூர் கடலில் மீன் பிடிப்பதற்கு அனுமதிப் போம் அல்லது முகாமை விட்டு வெளியேறுங்கள். உங்களை சம்பூர் கடலில் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கிறோம் எனக் குறிப்பிட்டதாகக் கூறும் கிருஷ்ணமூர்த்தி, தமது மீனவர் சங்கத்தில் 182 பேர் இருப்பதாகவும், தாங்கள் கடற்கரைச் சேனையின் ஒரு பகுதிக் கடலில் மட்டும் தான் மீன் பிடிப்பதாகவும் அந்தப் பகுதியில் பிடிக்கப்படும் மீன் சாப்பாட்டுக்கே போதாது எனவும் தெரிவித்தார்.

மூன்று பெண் பிள்ளைகளும் ஒரு மகனும் உள்ள இ.ரவீந்திரன் (வயது-46) சம்பூரில் 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர். இவருக்கு சம்பூரில் 12 ஏக்கர் குடியிருப்பு காணி இருப்பதுடன் வயல்நிலங்கள், பசு மாடுகளும் இருந்தன. இன்று கட்டைப்பறிச்சான் முகாமில் சாப்பாட்டு பொருள்கள் சமைத்து அவற்றை கிராமங்களில் ஊர் ஊராகச் சென்று விற்றுத்தான் பிள்ளைகளைப் படிப்பிப்பதாக ரவீந்திரன் தெரிவிக்கின்றார். பெண் பிள்ளைகள் இவ்வருடம் உயர்தரப் பரீட்சை எழுத இருப்பதாகவும் குறிப்பிடும் ரவீந்திரன் அரசு தரும் 20 பேர்ச் காணியில் எப்படி எனது பெண் பிள்ளைகளுக்குவீடுகட்டிசீதனம் கொடுக்க முடியும். நீரில்லாத, கற்பாறை நிறைந்த இடத்தைத் தெரிவு செய்து அதில் எங்களை குடியேற்ற அரசு எடுக்கும் முயற்சி நியாயமானதா? எமது சொந்த மண்ணில் குடியேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது மண்ணை தவிர வேறு இடத்தில்நாங்கள் குடியேற மாட்டோம். எமது சம்பூர் காணி பரம்பரைக் காணி, உறுதிக் காணி. தற்போது நவரெட்ணபுரம், கூனித்தீவு ஆகிய இடங்களில் குடியேற்றியது போல் எங்களையும் சம்பூரில் குடியேற்றுங்கள் என அவர் மன்றாடினார்.

அரசினால் எவ்வித உதவிகளும் இல்லை. தேர்தல் காலத்தில் மட்டும் அரசியல்வாதிகள் வருவார்கள். எங்களுக்கு வாக்குப் போடுங்கள் உங்களை சம்பூரில் குடியேற்ற நடவடிக்கை எடுப்போம் என்பார்கள். ஆனால் இதுவரை ஒன்றும் நடந்தது இல்லை.

சம்பூர் மக்களின் கருத்து இவ்வாறிருக்க, கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், சம்பூர் இடம்பெயர்ந்தோர் சங்கத்தின் தலைவருமான கு.நாகேஸ்வரன் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்:-

சம்பூரில் 219 குடும்பங்களில் காணிகள் மட்டும்தான் அனல்மின் நிலையம் அமைக்கப்படும் பகுதிக்குள் வருகின்றது. அதைத் தவிர மற்றைய பகுதிகளில் மக்களை மீள் குடியேற்ற முடியும். சம்பூரின் 5 ஆம் வட்டாரத்தின் ஒரு பகுதியும், 7 ஆம் வட்டாரத்தின் ஒரு பகுதியும் மட்டும் தான் அரசு குறிப்பிடும் அனல்மின் நிலையம் அமைக்கப்படும் பகுதிக்குள் வருகின்றது. கடற்கரைச் சேனைப் பகுதியில் இன்னும் 46 குடும்பங்கள் மீள்குடியேற்றப்படவில்லை. அந்தபகுதி உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே உள்ள பகுதியாகும். இது அரசின் அசமந்த போக்கு என்றே குறிப்பிட வேண்டியுள்ளது. சம்பூரில் 219 குடும்பங்களின் பிரச்சினைகளை பிறகு பார்க்கலாம். மற்றைய மக்களின் மீள்குடியேற்றம் பற்றி சம்பூரில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் குறிப்பிடும் நாகேஸ்வரன் அனல்மின் நிலையத்துக்கு சுவீகரிக்கப்பட்ட பகுதிக்குள் 14 குளங்கள், 273 ஏக்கர் வயல்காணி, 146 ஏக்கர் குடியிருப்பு காணி, 120 ஏக்கர் தோட்டக்காணி, மீன்பிடித்தளங்கள் 21, செங்கற்சூளைகள், 8, வைத்தியசாலை 1, கோயில் 1, பாலர் பாடசாலை 1 என்பன அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

சம்பூர் மக்களின் அனுமதியின்றி, அவர்களின் விருப்பமின்றி அவர்களுடைய காணியில் அனல் மின் நிலையம் அமைக்கப்படுவது பெரிய மனித உரிமை மீறலாகும் என மூதூர் பிரதேச சபையின் எதிரணித் தலைவர் இ.நாகேஸ்வரன் (மோகன்) சுட்டிக் காட்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமற்ற கூக்குரல்கள்





கந்தவனம் கோணேஸ்வரன்

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டமான மாகாணசபைகள் சட்டத்தைப் பூதாகரமானதாக மாற்றிச் சாதாரண சிங்கள மக்களிடையே ஒருவித அச்ச உணர்வைப் பரவ விடுவதில் அரசதரப்பு இனவாதிகள் சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள்.

விமல்வீரவன்ஸவும், சம்பிக்க ரணவக்கவும், எல்லாவெல மேதானந்த தேரரும், இன்னும் பலரும் இந்த கைங்கரியத்தை தத்தம் கோணங்களிலிருந்து செய்யத் தொடங்கியுள்ளார்கள். அதுவும் வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகின்ற இந்த நேரத்தில் தமது கருத்துகளையும் செயற்பாடுகளையும் தீவிரப்படுத்தத் தொடங்கியுள்ளார்கள்.

மாகாணசபைகள் சட்டம் இலங்கை அரசமைப்பின் ஓர் அங்கம். இலங்கை அரசமைப்பை வலுப்படுத்துவதற்காகவும் நாட்டில் அமைதியைக் கொண்டு வருவதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட சட்டம். இந்தச் சட்டம் இலங்கை அரசமைப்பின் எந்த விதிக்கும் முரண்பாடாக ஏற்படுத்தப்பட்டதல்ல. இலங்கை அரசமைப்பில் நிலவிவரும் குறைகள் நிவர்த்திக்கப்படுவதற்கும், தமிழர்களின் மன உளைச்சல்களுக்கும், சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டிருந்த வேண்டாத அச்ச உணர்வுக்கும் பரிகாரம் தேடுமுகமாகக் கொண்டு வரப்பட்டது.

ஆனால், மாகாணசபைகள் சட்டத்தை, அது கொண்டுவரப்பட்ட காலத்து அரசியல் நிலைமைகளுக்கேற்பப் பெருவாரியான தமிழர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டனர். இது வொரு கண்துடைப்பு : எப்போதாவது விரும்பிய நேரத்தில் கொழும்பு அரசால் மீறவோ அல்லது மீளப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலோ தான் அதன் விதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கை அரசு நல்லநோக்கம் கொண்ட நிறுவனமாக ஒருபோதும் நடந்துகொண்டதில்லை. எனவே, வாய்ப்புவரும்போது அது நிச்சயமாகத் தன் கைவரிசையைக் காட்டித் தமிழர்களை நடுத் தெருவில் நிறுத்தும் என்பது அவர்களது வாதமாக இருந்தது.

கிடைத்ததைப் பெற்றுக்கொண்டு அதிலிருந்து தமிழர்கள் அடுத்த கட்ட நகர்வுகளுக்குப் பலம் சேர்க்கலாம். தனி மனிதர்களாகவோ, அமைப்புகளாகவோ, கட்சிகளாகவோ குரல் கொடுப்பதைவிட தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட வடக்கு, கிழக்கு மக்களின் அரசாக நின்று குரல் கொடுப்பது அதிகூடிய பயனைத் தரும். எனவே, மாகாணசபைகள் சட்டத்தின் ஊடாக தமிழர்களின் அரசியலை நகர்த்திச் செல்வதுகூட ஒருவகை சாணக்கியமாகவே அமையும் என்ற கருத்தும் தமிழர்கள் மத்தியில் தோன்றாமல் இல்லை. மாகாணசபையைக் கைப்பற்றி அதனூடாகத் தமிழர்களின் எதிர்கால அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளலாம் என்ற கணிப்பு, தமிழர் பக்கத்து அரசியல் நிலைவரங்களாலும், இலங்கை அரசின் கபடத் தந்திரங்களாலும் ஓராண்டு காலத்திலேயே சிதைவுற்றுப்போனது. பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் கட்டியெழுப்பப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்தைக் கைவிட்டு அதன் முதலமைச்சர், உறுப்பினர்கள் என அனைவரும் உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் இந்தியாவுக்கும் வேறு நாடுகளுக்கும் தப்பியோட வேண்டியவர்களானார்கள்.

சட்டரீதியாகத் தமிழர்களுக்கு ஏதோ விமோசனம் தருவதற்காக உருவானவைபோல மாகாணசபைகளின் சட்டங்கள் தோற்றமளித்தபோதிலும் நடைமுறையில் அவற்றால் தமிழர்களுக்கு பயன்பெறமுடியாத நிலைமையே தோன்றியது. சிங்கள மக்களால் நிர்வகிக்கப்படும் மாகாண சபைகள் எவ்விதக் குந்தகங்களுமின்றி இன்றுவரை நடைபெற்று வர, தமிழர் பகுதிகளுக்கான மாகாண சபை நிர்வாகமோ சீர்குலைந்து போனது அல்லது திட்டமிட்டுச் சீர்குலைக்கப்பட்டது. சுருங்கச் சொல்வதானால், தமிழர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட மாகாணசபைகள் சட்டம் தமிழரைத் தவிர மற்றெல்லாத் தரப்பினராலும் அதிகாரங்களைப் பங்குபோட்டுக்கொள்ள வழியமைத்திருக்கிறது.

மாகாணசபை முறைமையை ஏற்கத் தயங்கிய தமிழர்கள் கூறிய காரணங்களும், சந்தேகங்களும் காலப் போக்கில் நிதர்சனமாகிக்கொண்டிருக்கின்றன. வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபை விமல் வீரவன்ஸவால் தாக்கல்செய்யப்பட்ட வழக்கொன்றின்மூலம் பிரிந்து போக வேண்டியதாயிற்று. 2007 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் வடக்கு மாகாணசபை, கிழக்கு மாகாண சபை என இரு வேறு சபைகள் ஆகின. பிரிக்கப்பட்டு உருவான முதலாவது கிழக்கு மாகாணசபையில் அரசின் கையாளான தமிழர் ஒருவர் முதலமைச்சராக இருந்து அரசின் விருப்பங்களை நிறைவேற்றிக்கொண்டிருந்தார். இப்போது காணப்படும் இரண்டாவது சபையில் அரச கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக இருந்து அரச நலன்களைப் பேணிக்கொண்டிருக்கிறார். எனவே, கிழக்கு மாகாணசபை ஒருபோதும் தமிழர்களின் சபையாக இருந்ததில்லை. இரண்டு தடவைகளும் அரச விருப்பத்துக்கேற்ப செயலாற்றக் கூடிய சபைகளாகவே இருந்திருக்கின்றது. மூன்றாவது தடவையாக அமையுமிடத்து, சிங்கள முதலமைச்சரையும் முஸ்லிம் அமைச்சர்களையும் கொண்ட அரச கட்சிச் சபையாக அது மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அரசின் தந்திரங்களைச் செயற்படுத்தக்கூடிய ஒரு சிறந்த தளமாகக் கிழக்கு மாகாணசபை செயற்படுகிறது. ஆனால், வடக்கு மாகாண சபை அவ்வாறு அமையப்போவதில்லை என்ற அச்ச உணர்வுதான் அரச அமைச்சர்களையும் ஜனாதிபதியின் தம்பி கோத்தபாயவையும் மாகாணசபை முறைமைகளையே சிதைத்துவிடலாமா என்று சிந்திக்கத் தூண்டியுள்ளது. வடக்கில் மாகாண சபை, தமிழர் கைக்குப் போ[illegible]டால் தமிழீழத்தைக் கட்டியெ[illegible] விடுவார்கள் என்றெல்லாம் பிதற்ற வைத்திருக்கிறது.

இந்த நாடகங்களைப் பார்க்கும் போது அன்று மாகாணசபை முறைமைகளை ஏற்றுக்கொள்ள மறுத்த தமிழர்களின் நிலைப்பாடு சரியானதென்றே கொள்ளவேண்டியிருக்கிறது. 2006இல் நீதிமன்றத் தீர்ப்பைப் பயன்படுத்தி ஒன்றிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணசபையை இரண்டாகப் பிரித்துத் தமிழர்களின் பலத்தை ஒடித்தார்கள். நீதிமன்றத் தீர்ப்பு, தமக்குச் சாதகமாக அமைந்திருந்ததால் அதை உடனடியாகவே நடைமுறைப்படுத்தினார்கள். இப்பொழுது பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை ஒழித்து மாகாணசபைகளையே அழித்துவிடத் தவிக்கிறார்கள். ஆகக்குறைந்தது காணி, பொலிஸ் அதிகாரங்களையேனும் வடக்குத் தேர்தலுக்கு முன்னர் சட்டப்படி பறித்துவிடவேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறார்கள்.

உண்மையில், மாகாணசபைகள் சட்டங்கள் சொல்வதை உணர்ந்து கொண்டால் இத்தகைய கோணலான எண்ணங்கள் தோன்றுவதற்கு வாய்ப்பிருக்காது. தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக அமையலாம் என உருவாக்கப்பட்டிருக்கின்றபோதிலும் நடைமுறையில் அது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு தரக்கூடிய தொன்றாக அமைந்திருக்கவில்லை. மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை இலங்கை அரசு தன்வயப்படுத்தவோ அல்லது தலையீடு செய்து தனக்கிசைவான செயற்பாடுகளை மேற்கொள்ளவோ ஏற்றதான வகையில்தான் அச்சட்டம் அமைத்திருக்கிறது. ஒன்பது மாகாணசபைகளில் மூன்று அல்லது நான்கு மாகாணசபைகளேனும் சிங்களவரல்லாதோர் ஆட்சிக்குட்படக் கூடிய ஒரு நிலைமை இந்நாட்டில் இருந்திருக்குமேயானால், போராட்டத்தின் மூலமாகவேனும் மாகாண சபையின் அதிகாரங்களை வலுப்படுத்தியிருக்கக்கூடிய வாய்ப்பிருந்திருக்கும்.

ஆனால், எட்டு மாகாணசபைகளும் சிங்கள அல்லது சிங்களசார்பு மாகாணசபைகளாக அமையும் சூழல் இருக்கும்போது ஒன்பதாவது மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்தைப் பெறுகின்ற தமிழர்கள் எந்த நியாயத்தைத் தட்டிக்கேட்டாலும் இனவாதம்பேசி அதை மழுங்கடிக்கக்கூடிய மோசமான நிலைமை தான் இலங்கையில் நிலவுகிறது.

இப்போது வடக்குக்குத் தேர்தல் [illegible] [illegible] களைச் சட்டரீதியாகவே இல்லாதனவாக்கிவிடவேண்டும். ஏன் மாகாண சபை முறையையே ஒழித்துவிட வேண்டும் என்ற கோஷங்கள் தீவிரமடையத் தொடங்கியுள்ளன. மாகாணசபைகள் ஒழிப்புக்கான தனிநபர் பிரேரணைகூட கடந்த புதனன்று நாடாளுமன்றத்தில் முறைப்படி தாக்கல்செய்யப்பட்டிருக்கிறது. அரசின் கூட்டுக்கட்சிகளில் ஒன்றான ஜாதிக ஹெல உறுமய சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியரத்ன தேரர் அதனைச் சமர்ப்பித்துள்ளார்.

இப்பிரேரணை நிறைவேறுமா, நிறைவேறாதா என்பதல்ல பிரச்சினை. இப்பிரேரணை நிறைவேறக்கூடாது என்ற எண்ணங்கொண்ட அரசசார்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை விட, பிரேரணை நிறைவேறவேண்டும் என்ற கருத்துக்கொண்ட அரசசார்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வாக்கு மிக்கவர்களாகக் காணப்படுகிறார்கள். தற்போதைய அரசியல் நெருக்கடிகளை அனுசரித்து, வாக்களிப்பின்போது அவர்கள் பிரேரணையை ஆதரிக்காமல் விட்டாற்கூட அவர்களின் மனம் என்னவோ பிரேரணையின் பக்கம்தான் நிற்கப்போகின்றது. இது காலப்போக்கில் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிப்பதற்கான ஆரம்பமாக அமையலாம் என்பதில் சந்தேகங்கொள்ளத் தேவையில்லை. ஆனால், இப்போதைக்கு இலங்கை அரசு பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபடமாட்டாது. அவ்வாறு செய்வது தற்கொலைக்கு ஒப்பான செயல் என்பது அரசுக்கு நன்றாகவே புரியும். பதின்மூன்றாவது திருத்தச் சட்ட ஒழிப்பு என்ற பேச்சு தொடங்கப்பட்டவுடனேயே இந்திய வெளியுறவு அமைச்சர், இலங்கை வெளியுறவு அமைச்சரிடம் கடுந்தொனியில் கண்டனங்களை வெளியிட்டுள்ளார். இக்கண்டனங்களையும் மீறி இலங்கை செயற்பட்டால் கச்சதீவில் இலங்கைக்கு உள்ள உரிமையை வலுக்கட்டாயமாக விலக்கிக்கொண்டு இந்தியா மீளவும் அதனைப் பெற்றுவிடக்கூடிய வாய்ப்பும் உண்டு. பிராந்திய வல்லரசான இந்தியாவுடனான ஒப்பந்தமூலம் கிடைத்த பெறுபேற்றை இலங்கையால் அலட்சியப்படுத்த முடியுமானால், அதே அலட்சியத்தை கச்சதீவு ஒப்பந்தத்தில் இந்தியா காட்டமாட்டாது என்பதற்கு உத்தரவாதமில்லை.

மாகாணசபைகள் ஒன்பதாகப் பெயரிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாகாணசபைக்குமான உறுப்பினர்களின் எண்ணிக்கை மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின்மூலம் தீர்மானம் செய்யப்படுகிறது. அருகருகே உள்ள மாகாணசபைப் பிரிவுகள் விரும்பினால், இரண்டோ அல்லது மூன்றோ இணைந்து ஆளுநர் ஒருவரையும், முதலமைச்சர் ஒருவரையும் நான்குக்கும் மேற்படாத ஏனைய அமைச்சர்களையும் கொண்ட ஒரே நிர்வாகப் பிரிவாக நாடாளுமன்றச் சட்டத்தின் அனுமதியுடன் இயங்கமுடியும்.

ஆளுநர் ஜனாதிபதியால் நியமனம் பெறுகின்றார். மாகாண சபையொன்றுக்குத் தெரிவான அதிக உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்ற ஒருவர் ஆளுநரால் முதலமைச்சராக நியமனம் செய்யப்படுகிறார். முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் நான்குக்கும் மேற்படாத ஏனைய அமைச்சர்கள் ஆளுநரால் நியமனம் பெறுவார்கள். முதலமைச்சரும், ஏனைய அமைச்சர்களும், மாகாணசபையின் உறுப்பினர்களும் ஆளுநரின் கடமைகளுக்கு அனுசரணையாகச் செயற்படுவதோடு ஆலோசனைகள் வழங்குதற்கும் உரித்துடையவராகின்றார்கள். மாகாண சபையின் அமர்வைக் கூட்டுதற்கும், ஒத்திவைப்பதற்கும், தேவைப்படும் நேரத்தில் கலைப்பதற்குமான அதிகாரங்கள் ஆளுநருக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஆளுநரை மாற்றும் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்குக் கிடையாது. ஆளுநர் பொருத்தமற்றவரென ஒரு மாகாணசபையின் உறுப்பினர்கள் கருதினால், அந்த மாகாண சபையின் மொத்த உறுப்பினர்களில் அரைவாசிக்குக் குறையாதோர் கையெழுத்திட்டுப் பிரேரணை ஒன்றை கொண்டுவந்து மாகாணசபையின் மொத்த உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதோரின் ஆதரவுடன் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அதனை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

காணி விடயங்களைப் பொறுத்த மட்டில் அரசால் நியமிக்கப்படும் தேசியக் காணி ஆணைக்குழுவில் மாகாணசபைகளின் சார்பிலான பிரதிநிதிகளும் உள்ளடக்கப்பட்டிருப்பர். இதுவே காணி விடயங்களைத் தீர்மானிக்கின்ற உயர்நிறுவனமாக அமையும். மாகாணசபைகளுக்கென ஒதுக்கப்பட்ட காணிகளை அப்பகுதி மாகாணசபை தம் தேவைகளுக்குப் பயன்படுத்துமிடத்து அரச நியதிகளுக்குட்பட்ட வகையிலேயே செயற்படவேண்டும். அரச பயன்பாட்டுக்குக் காணிகள் தேவைப்படின், அக்காணி தொடர்பாக மாகாணசபையுடன் கலந்தாலோசித்துக் காணிகளைப் பெற்றுக்கொள்ளும். பொலிஸ் அதிகாரம் தொடர்பாகப் பார்க்குமிடத்து, பொலிஸ்மா அதிபரே சகல பொலிஸாருக்கும் தலைமை வகிப்பார். மாகாணப் பொலிஸார் விடயத்தில் மாற்றுச் சேவைகளுக்கென பொலிஸ்மா அதிபரால் விடுவிக்கப்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளர், பொலிஸ் கண்காணிப்பாளர்கள், உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர்கள் ஆகியோர்களுடன் மாகாண எல்லைக்குள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொண்டதாக மாகாணப் பொலிஸ் படை அமையும்.

எனவே, அதிகாரங்களற்ற முதலமைச்சர் பதவியையும், ஆளுநரை மீறிச் செயற்படமுடியாத அதிகாரங்களையும், அரச விருப்பத்தை நிராகரிக்க முடியாத காணி அதிகாரத்தையும், பொலிஸ்மா அதிபருக்குக் கீழான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையிலான பொலிஸ் படையையும் கொண்டு வடபகுதித் தமிழர்கள் வடமாகாணசபையைக் கைப்பற்றுவதன் மூலம் நாட்டைப் பிரித்து விடுவார்கள் எனக் கூக்குரலிடுவதில் என்ன நியாயம் இருக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே...



திரைப்படங்களினைப் பார்த்து, அதிலே நடிகைகள் அணிகின்ற ஆடைகளினை தாம் அணிந்தால் அழகாகவும் மரியாதையாகவும் இருக்கும் என எண்ணி அணிகின்றனர் தற்காலத்துப் பெண்கள்.



விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியோடு பெண்களின் வாழ்க்கை முறையில் பல்வேறு வேறுபாடுகள், மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆரம்பத்தில் சேலை, முழுப்பாவாடை, சட்டை போன்ற அடக்கமான அழகிய ஆடைகளை அணிந்த பெண்கள் இன்று முழங்காலுக்கு மேல் நிற்கின்ற பாவாடைகளையும் உடலை நன்றாக இறுக்கும் வண்ணம் அமைந்த ஆடைகளையும் அணிந்து அவை தமக்கு மிகவும் அழகளிப்பதாகவும் எண்ணுகின்றார்கள்.

திரைப்படங்களினைப் பார்த்து, அதிலே நடிகைகள் அணிகின்ற ஆடைகளை தாம் அணிந்தால் அழகாகவும் மரியாதையாகவும் இருக்கும் என எண்ணி அணிகின்றார்கள் தற்காலத்துப் பெண்கள்.

கோயில்களுக்கு அடக்கமான, அழகிய ஆடைகளினை அணிந்து சென்ற காலம் போய் இன்று நவநாகரிக ஆடைகளினை அணிவது தான் இன்றைய பெண்கள் மத்தியில் நாகரிகம் ஆகின்றது.

இன்றைய சமூகத்தில் அதிகரித்துக் காணப்படுகின்ற ஒரு விடயம் கலாசார சீரழிவு ஆகும். இவை யாவற்றுக்கும் பெண்கள் அணியும் ஆடையும் அவர்களின் நடவடிக்கைகளுமே காரணமாகவுள்ளன.

பெண்கள் எந்நேரமும் தங்களின் அழகைப் பாதுகாப்பதற்கு பல்வேறு விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர். நிமிடத்துக்கு நிமிடம் முக ஒப்பனை போன்ற தேவையற்ற விடயங்களில் தமது அதிக நேரங்களைச் செலவு செய்கின்றார்கள். எனவே நவநாகரிகத்தை அதிகம் பெண்களே நாடிச் செல்கின்றனர்.

சி.கிருசிகா, கந்தர்மடம்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பி வையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :-..........................................................

..........................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விமர்சனம்


நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?**
**பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



# விரைவில் வாய்ப்புற்றுநோய் பரிசோதனை

உலக அளவில் கர்ப்பப்பை வாயில் புற்றுநோய் (Cervical Cancer) வரக்கூடிய பெண்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பாகத்தை குறைக்கவல்லதாகக் கருதப்படும் எளிதான- விலை மலிவான- சட்டென செய்யக்கூடிய பரிசோதனை முறை ஒன்று இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளது.


இந்தப் பரிசோதனைகளைச் செய்வதன் மூலம் ஆண்டுதோறும் ஏழை நாடுகளில் ஆயிரக்கணக்கான பெண்கள் அனாவசியமாக உயிரிழப்பதைத் தடுக்க முடியும் என்று நம்பப்படுகிறது.

கர்ப்பப் பை வாயில் இருந்து சிறிது திரவத்தை எடுத்து, அதனை நீர் கலந்த வினிகரில் அதாவது காடியில் விட்டு, இயல்புக்கு மாறான உயிரணுக்கள் அதில் இருக்கிறதா என்பதைக் கண்டறிவதாக இந்த முறை அமைந்துள்ளது.

மருத்துவ பரிசோதனைக் கூடங்களில் இருக்கின்ற கருவிகளின் உதவி இன்றியே இந்த பரிசோதனையை செய்ய முடியும்.

சற்று நேரத்தில் முடிவும் தெரிந்து விடும்.

இந்தியாவின் மும்பை நகர மருத்துவமனை ஒன்றில் உருவாக்கப்பட்டுள்ள இந்தப்பரிசோதனை முறையை அமெரிக்காவின் சிக்காகோ நகரில் நடந்துவரும் புற்றுநோய் மாநாடு ஆராய்ந்துவருகிறது.





## வலி

நீ உடலை உருக்கி
வேண்டினாய்
நான் மனதை வருத்தி
வேண்டினேன்...
எதை?
தெரியவில்லை எனக்கு
காரணம் நீ
வேண்டியது உனக்குக்
கிடைக்க
வேண்டுமென்றே நான்
இறைவனை வேண்டினேன்..

## பார்வை

என் உதிரத்தை
மையாக மாற்றி
என் கண் வெண்
படலத்தை
காகிதமாக மாற்றி
உனக்கோர்
கடிதம் எழுதினேன்...
முகவரி
தெரியவில்லை-உன்
முகம் ஞாபகம்
இல்லை
நீ பார்த்த பார்வை
மட்டும்
என் இதயத்தின்
நாளத்தில்
நாதமாய் ஒலிக்கிறது

லக்சுமி இராசலிங்கம்,
வல்வெட்டித்துறை.

## தூசி

கண்ணில் தூசி போல் ஏதோ உறுத்தியது
கண்களைத் துடைத்து நிமிர்ந்து
பார்த்தேன்
கண்ணில் விழுந்தது தூசி அல்ல-நீ
தூசியும் நீயும் ஒன்று தான்
கண்களை விட்டு விலகிச் செல்லும் போது
கண்ணீரை வரவழைத்து போகிறாய்

கனகரத்தினம் மதிப், கைதடி.

## காற்றே தூது செல்......



விண் தொட்டு...
மண் தொட்டு வரும்
விலையில்லாத் தென்றலே- நீ
வயலோடு விளைபாடி
வனமெங்கும் கதைபேசி
வனப்போடு வரும் போது- என்
இரு விழியில் கருமணியாய்
இருதயத்தில் வரும் துடிப்பாய்
ஊன் உடலில் உயிரணுவாய்- என்னுள்
வாசம் வீசும் என்
அவனைக் கண்டாயா...?
அத்திக்காய் அவனிருக்க
இத்திக்காய் நானிருக்க
தித்திக்கும் என் காதல்
தீராத வலியாச்சே
ஊர் ஊராய் ஊர்க்கோலம் போகும்
உல்லாசக் காற்றே
என் அவனைக் கண்டு- நீ ஒரு
தூது சொல்லி வாராயோ...?

ம.கஜேந்தினி, கோப்பாய் தெற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் பின்தங்கிய நிலையில் முல்லைத்தீவு மன்னாகண்டல்

முல்லைத்தீவு,ஜூன் 6

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மன்னாகண்டல் கிராமம் அபிவிருத்தியின்றி இன்னமும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளதாகத் தெரிய வருகின்றது.

மன்னாகண்டல் கிராமத்திலிருந்து 50வீதமான குடும்பங்கள் இன்னமும் மீளக்குடியமர்வதற்கு வராத காரணத்தால் ஏராளமான காணிகள் இன்னமும் காடாகவே காணப்படுகின்றன.

இதனால் மீள்குடியமர்ந்த மக்கள் காட்டு விலங்குகளாலும் விஷ ஜந்துக்களாலும் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். இங்கு மீள்குடியமர்ந்த மக்கள் யானை, சிறுத்தை ஆகிய காட்டு விலங்குகளின் பாதிப்புக்களால் தமது பயிர்களை மட்டுமல்லாது கால்நடைகளைக் கூட வளர்க்க முடியாத நிலையில் உள்ளனர். மக்கள் மீள்குடியமராத காணிகள் பெரும் காடுகளாக வளர்ந்துள்ளன.

இங்குள்ள பாடசாலை அழிந்த நிலையிலேயே காணப்படுகிறது. கூட்டுறவுச் சங்கக் கிளையும் போரின்போது சேதமடைந்த நிலையிலேயே தற்போதும் உள்ளது. மக்களின் பாவனையில் உள்ள பொதுக் கிணறு பராமரிப்பு இன்றிக் காடுகள், பற்றைகள் ஊடே காணப்படுகின்றது. இந்தக் கிணற்றையே மக்கள் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இங்குள்ள வீதிகள் மோசமான நிலையில் காணப்படுவதால் தாம் சிரமங்களை எதிர்கொள்வதாக இந்தக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சிலர் வேறு இடங்களில் வாழ்வதாகவும் முத்துஐயன்கட்டுக் குளத்தின் கீழான சிறுபோகச் செய்கையின் போது மட்டும் தமது பங்கை எடுத்து வேறு நபர்களுக்கு விற்றுவிட்டுச் செல்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதிகளால் பயணிக்கும் போது இருபுறமும் காடுகள் உள்ளதால் தாம் அச்சத்துடன் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்கு ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு செல்ல வேண்டுமானால் கால்நடையாகவோ அல்லது சைக்கிள் மூலமாகவோ செல்லவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

போருக்கு முன்பு ஒட்டுசுட்டானிலிருந்து முத்துஐயன்கட்டு ஊடாக மன்னாகண்டல் வழியாக புதுக்குடியிருப்புக்கான பஸ் சேவைகள் இடம்பெற்றன. தற்போது இடம்பெறுவதில்லை. இதனால் இங்குள்ள மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது இந்தக் கிராம மக்கள் கெருடமடுவில் இறங்கி கால்நடையாகச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். இவர்கள் செல்கின்ற பகுதியில் யானை, சிறுத்தை ஆகியவற்றால் அச்சநிலை காணப்படுகின்றது.

தற்போது ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு வீதியின் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. ஆகவே பஸ் சேவையை ஏற்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் தமது அவல நிலையைக் கருத்தில் கொண்டு கூட்டுறவுச் சங்கக் கிளை, மருத்துவமனை ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டுமெனவும் இந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

## சமுர்த்தி நியமனம் மகிழ்ச்சி தருகிறது

### கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு



அக்கராயன்,ஜூன் 6

போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து சமுர்த்தி உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியான விடயமாகும்.

இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்.


கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் 178 சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்;

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்றைய நாள் ஒரு பொன்னான நாளாகும். ஒரே தடவையில் 178 பேர் அரச சேவையில் இணைந்து கொள்வது என்பது மாவட்டத்தின் வளர்ச்சிக்குப் பேருதவியாக அமையும். வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 1000 பேர் சமுர்த்தி உத்தியோகத்தர்களாக இன்றைய நாளில் நியமனங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள் எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், சமுர்த்தி அதிகார சபையைச் சேர்ந்த அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டு சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கினர். (க-18)

## பஸ் தரிப்பிடமா இது; இல்லை...!



மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்துறை சந்தி யில் இருந்து புத்தளம், இலவங்குளம் செல்லும் பிரதான பாதையில் அமைக்கப்பட்ட பயணிகள் பஸ் தரிப்பிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாக முசலி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மறிச்சுக்கட்டி மற்றும் மரைக்கார் தீவு ஆகிய மீள்குடியேற்ற கிராம சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பயணிகள் தரிப்பிடம் பராமரிப்பு இல்லாமல் மிருகங்களின் உறைவிடமாகக் காணப்படும் நிலையில் உள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

முசலிப் பிரதேச சபை கடந்த 2011 ஆம் ஆண்டில் இருந்து இயங்கிக் கொண்டு வருகின்ற நிலையில் இன்னும் அதிகமான சந்திகளில் பஸ் தரிப்பிடம் இல்லாமல் பொது மக்கள் மழையிலும் வெய்யிலிலும் துன்பப்படுகின்றனர். எனவே குறித்த தரிப்பிடங்களின் நிலைமை குறித்து முசலிப் பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என முசலி மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-12)

## அனுபவமில்லாத விற்பனையாளர் பாதிக்கப்படும் விவசாயிகள்

அக்கராயன், ஜூன் 6

துணுக்காய், மல்லாவி ஆகிய இடங்களிலுள்ள சில களைநாசினிகளை விற்பனை செய்யும் அனுபவமில்லாதவர்கள் கடைகளில் விற்பனையாளர்களாக உள்ளதால் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மல்லாவி நகரில் களைநாசினியை வாங்கிய விவசாயி ஒருவர் விற்பனையாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் அதனை விசிறியுள்ளார்.

ஆனால் தவறான ஆலோசனையின் பிரகாரம் அதிகளவு நாசினி விசிறப்பட்டதால் ஒன்றே கால் ஏக்கர் நெற் பயிர் கருகி அழிந்த சம்பவம் துணுக்காய் அம்பலப்பெருமாள் குளத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கடையில் சரியான விவரங்களைத் தெரியாது விற்பனையில் ஈடுபடும் நபர்களை நம்பி மருந்துகளை விசிற வேண்டாம் எனவும் மருந்துகளை விசிறுவதற்கு முன்னர் கமநல சேவை நிலையத்தின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் மருந்துக் கடைகளில் விவரம் தெரிந்தவர்களை விற்பனையாளர்களாக நியமிக்குமாறும் கடை உரிமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (க-18)



## வருடக் கணக்கில் இழுத்தடிப்பு கனகபுரம் வீதி புனரமைப்புப் பணி

கிளிநொச்சி, ஜூன் 6

கிளிநொச்சியின் ஏ-9 வீதிக்கு அடுத்த நிலையில் உள்ள கனகபுரம் வீதியின் புனரமைப்புப் பணிகள் வருடக் கணக்கில் இழுத்தடிக்கப்பட்டு வருவதால் பயணிகளும், வீதியோரத்தில் உள்ள வர்த்தகர்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ-9 வீதிக்கு அடுத்த படியாக அதிகளவு மக்கள் தினமும் பயன்படுத்தும் வீதியாக கனகபுரம் வீதி காணப்படுகின்றது.

குறித்த வீதியின் புனரமைப்புப் பணிகள், கடந்த ஆண்டு முற்பகுதியில் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் குறித்த வீதியின் ஒரு கிலோமீற்றர் தூரம் வரையான பகுதி கூட முழுமையாகப் புனரமைக்கப்படவில்லை. ஒப்பந்தக்காரர்கள் மூன்று தடவைகள் மாற்றப்பட்டுள்ள போதிலும் புனரமைப்புப் பணிகள் சீராக இடம்பெறவில்லை.

குறித்த வீதி கனகபுரம், புதுமுறிப்பு, ஊற்றுப்புலம், கோணாவில், ஸ்கந்தபுரம், யூனியன் குளம், ஆனைவிழுந்தான், வன்னேரிக்குளம் என பல்வேறுபட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வீதியின் டிப்போச் சந்தி முதல் கனகபுரம் மகாவித்தியாலய சந்தி வரையான சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் நீளம் வரையான பகுதியில் வீதியின் இரு மருங்கிலும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ளன.

வீதியின் புனரமைப்புப் பணிகள் மந்த கதியில் இடம்பெறுவதனால் எழுகின்ற தூசிகளால் இந்த வர்த்தக நிலையங்களில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன.

எனவே உரிய அதிகாரிகள் இதில் தலையிட்டு இந்த வீதியைத் துரிதமாகப் புனரமைத்து வழங்குமாறு பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## மாந்தை கிழக்கில் கடத்தப்படும் பெறுமதியான மரங்கள்



முல்லைத்தீவு, ஜூன் 6

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பகுதியில் காணப்படும் பெறுமதி வாய்ந்த காட்டு மரங்கள் தினமும் கடத்தப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு, பாண்டியன்குளம், பனங்காமம், சிறாட்டிக்குளம், மூன்றுமுறிப்பு ஆகிய பகுதிகளில் இருந்தும், ஏனைய பகுதிகளில் இருந்தும் காட்டுமரங்களை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்ல முடியாதவாறு இறுக்கமான நடைமுறைகள் இருந்தபோதிலும் பெறுமதி வாய்ந்த பெருமளவான காட்டுமரங்கள் இரவு, பகல் வேளைகளில் கனரக வாகனங்கள் மூலமாக வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இந்தச் சட்டவிரோத மரக் கடத்தலில் குறிப்பிட்ட சில அரச உயர் அதிகாரிகளும் சில அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களும் இணைந்து ஈடுபடுவதாகவும் இந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தாம் இந்திய வீட்டுத் திட்டத்துக்குத் தேவையான காட்டு மரங்கள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் தமது வளவுகளில் நிற்கும் மரங்களைக் கூடத் தாங்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு இறுக்கமான நடைமுறைகள் உள்ளபோதிலும் எந்த அடிப்படையில் காட்டு மரங்கள் கடத்தப்படுகின்றன என இந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (க-6)

## புதிய கட்டடத்தில் இயங்கினாலும் அங்குள்ள குடும்பங்களால் பாதிப்பு

### அக்கராயன் ஆரம்ப வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தினர் விசனம்

அக்கராயன்,ஜூன் 6

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ள நிலையில் பாடசாலைக் காணியில் தங்கியுள்ள குடும்பங்களைப் பிற இடமொன்றில் குடிமயர்த்துமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் மீண்டும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது 174 மாணவர்களுடன் இயங்கும் இந்தப் பாடசாலை வளாகத்தில் ஐந்து குடும்பங்கள் தொடர்ந்து நிலை கொண்டிருப்பதால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கும், சுகாதாரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது.



மேலும் பாடசாலை காணியில் உள்ள குடும்பங்கள் கால்நடைகளை வளர்ப்பதனால் மாலை வேளைகளில் இந்தக் கால்நடைகள் வகுப்பறைகளில் தங்கி நிற்பதைக் காணமுடிகின்றது.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், கிளிநொச்சி அரச அதிபர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கரைச்சிப் பிரதேச செயலர் ஆகியோருக்கு மனுக்களைக் கையளித்த போதிலும் எந்தவித பயனும் கிட்டவில்லையெனவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** சகோதர வகையில் பிரச்சினைகள் ஏற்படும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.

**இடபர்:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**மிதுனர்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைபளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும்.

**கடகர்:** வெளிவட்டாரத்தில் மதிக் கப்படுவீர்கள். மனதிற்குப் பிடித்தவர் களை சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளை செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பகர்களின் வருகையுண்டு.

**சிங்கர்:** திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் ஓரளவு வேலைச்சுமை குறையும். .

**கன்னி:** புதியவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். எதிலும் கவனமுடன் செயற்படுங்கள்.

**நாளை**

வைகாசி-24 வியாழக்கிழமை 07.06.2013
திதி: சதுர்த்தி மு.இ. 07.47 வரை
நட்சத்திரம்: கார்த்திகை மா. 06.06 வரை
சுபநேரம்: 05.52- 07.22 வரை
இராகுகாலம்: 10.22 - 11.52 வரை

**துலார்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**விருச்சிகர்:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். விருந்தினர்கள், நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். முன்கோபம் குறையும்.

**தனுசு:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள்.

**மகரர்:** பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**கும்பர்:** ஆரவாரமின்றி சில வேலைகளை முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும். விருந்தினர்களின் வருகையுண்டு.

**மீனர்:** முன்கோபத்தை குறையுங்கள். இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். சொந்த - பந்தங்களால் அன்புத் தொல்லைகள் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள். திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் வெற்றி பெறுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 8 | 6 | | 1 | 3 | | 7 |
| | 9 | 1 | 4 | 3 | 8 | | | |
| 4 | | | | | | | 8 | |
| | | 5 | | | | | | 6 |
| 2 | | | 7 | | 4 | | | 9 |
| 3 | | | | | | 5 | | |
| | 1 | | | | | | | 3 |
| | | | 8 | 7 | 5 | 6 | 1 | |
| 6 | | 7 | 2 | | 3 | 8 | 9 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 9 | 4 | 1 | 7 | 3 | 5 | 2 | 8 |
| 2 | 3 | 5 | 4 | 9 | 8 | 6 | 1 | 7 |
| 8 | 7 | 1 | 5 | 6 | 2 | 3 | 9 | 4 |
| 1 | 6 | 8 | 3 | 5 | 4 | 9 | 7 | 2 |
| 3 | 5 | 9 | 2 | 8 | 7 | 4 | 6 | 1 |
| 7 | 4 | 2 | 9 | 1 | 6 | 8 | 5 | 3 |
| 5 | 8 | 6 | 7 | 4 | 1 | 2 | 3 | 9 |
| 9 | 1 | 3 | 8 | 2 | 5 | 7 | 4 | 6 |
| 4 | 2 | 7 | 6 | 3 | 9 | 1 | 8 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14.08.1972

மறைவு
06.06.2012

## சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம்

அன்பான என்மகனே மணியே
ஆரிடமும் சொல்லாது எங்குபோனாய்
இங்கிதமாய் நீபேசும் இனிய வார்த்தை
ஈடில்லா இறைபக்தி சமூகசேவை
உன்னிடத்து நான் கண்டு உவகைகொண்டேன்
ஊரார்கள் உனைப்போற்றும் சேதிகேட்டேன்
எல்லாமே மாயை என்று தெரிந்துகொண்டு
ஏகாந்த இறைவனுடன் கலந்து விட்டாயோ
ஐயா உன் திருவதனம் என்று காண்பேன்
ஒருபோதும் உனைமறவாது எந்தன் உள்ளம்
ஓயாத அலைபோல நினைவில் நிற்பாய்
என்றும் உன் நினைவுடன்

**புன்னாலைக்கட்டுவன் தெற்கு,**
**புன்னாலைக்கட்டுவன்.**

**அம்மா.**


# மரண அறிவித்தல்கள்

## கலாபூஷணம் லயன் ஏ.வி. ஆனந்தன்



குளமங்கால், மல்லாகத்தினைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல சிற்பக்கலைஞராகிய **லயன் அகஸ்ரின் வேலானந்தம் ஆனந்தன்** 03.06.2013 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குளமங்காலைச் சேர்ந்த காலஞ்சென்ற அகஸ்ரின்-கிறகோரியா தம்பதியரின் அன்பு மகனும், தேவதாசன், பெர்ணபெற், காலஞ்சென்றவர்களான ஞானசோதி, எமில் ஜேம்ஸ் ஆகியோரின் அன்புச சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் குளமங்காலில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (06.06.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இன்றும் நாளையும் காங்கேசன்துறை வீதியிலுள்ள அவரது துர்க்காபுரம் சிற்பாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்பு (08.06.2013) சனிக்கிழமை பி.ப ஒரு மணி அளவில் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள திருமறைக்கலாமன்றத்தில் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டு, மீண்டும் மாலை 4.00 மணிக்கு குளமங்கால் புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


***மல்லாகம்***
***077 608 2335***

(38015)(10,8,3)

***தகவல்:***
***குடும்பத்தினர்.***

## அந்தோனிப்பிள்ளை இம்மானுவேல்

(செல்வரட்ணம் மேசன்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல. 475, 5ஆம் யூனிற், பழைய கண்டி வீதி, இராமநாதபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை இம்மானுவேல் (செல்வரட்ணம் மேசன்) நேற்றுமுன்தினம் (04.06.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை- றோசம்மா தம்பதியரின் அன்பு மகனும், சூசைமுத்து - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நீற்றாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வராணி, சிலுவைராசா மற்றும் அழகரட்னம், ஜெயரட்னம், யோகராணி, தங்கராணி, தவராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுகுமார், நாகம்மா, நேசமலர், சூசைதாசன், விஸ்வலிங்கம் மற்றும் மேரியோகம், ஜோசப் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜேசுதாசன் (குலம்), காலஞ்சென்ற அன்ரன் ரூபராஜ் (முன்னாள் பொது முகாமையாளர் - கரைச்சி தெற்கு ப.நோ.கூ.ச.), சுஜா, காலஞ்சென்ற அலெக்ஸ், அற்புதராஜ் (கரைச்சி கிழக்கு- ப.நோ.கூ.ச.), அருள்ராஜ் (லெனா), சுபாஜினி (புனித ஆரோக்கிய நாதர் முன்பள்ளி - ஆசிரியர்), ஜெஸ்லி அன்ரனிராஜ் (ஹலோறஸ்ற் பணியாளர்), றொபின்சன் இதயராஜ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புனித சீலி, ஞானராசா, யோகமலர் (கரைச்சி தெற்கு - ப.நோ.கூ.ச.), சிரோமி (ஆசிரியர் - கிளி/அழகாபுரி வித்தியாலயம்), டான்சிரூபனா, லொறின்ரா (ஆசிரியை - கிளி/இராமநாதபுரம் ம.வி), நர்மதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.06.2013) வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித ஆரோக்கிய நாதர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் இராமநாதபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(35150)(45.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தத்தை நீக்கினால் அரசில் இருந்து வெளியேறுவோம்

## முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 6
13 ஆவது திருத்தச்சட்டத்தை பலவீனப்படுத்தும் எத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், இலங்கை அரசில் இருந்து எமது கட்சி வெளியேறும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எச்சரித்துள்ளது.

இது குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர் சபை ஞாயிற்றுக்கிழமை விவாதித்துள்ளது என்று காங்கிரஸின் தேசிய அமைப் பாளர் ரபீக் ரஜாப் தீன் தெரி வித்தார்.

அதிகாரப்பகிர்வைப் பலவீனப்படுத்தும் எத்தகைய முயற்சிகளுக்கும் இலங்கை அரசுக்கு ஆதரவு அளிப்பதில்லை என்று அதில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

**13 ஆவது திருத்தச்சட்டத்தை பலவீனப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்தால், அரசில் இருந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறும்.**

13 ஆவது திருத்தச்சட்டத்தை பலவீனப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்தால், அரசில் இருந்து சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸ் வெளியேறும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# கோயில்கள் தாக்கப்படுவது நாட்டுக்கு பெரும் அவமதிப்பு

## மக்கள் கட்சி பிரதித் தலைவர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 6
நாட்டில் இந்துக் கோயில் தாக்கப்படுவது நாட்டுக்கு ஏற்படும் அவமதிப்பாகும் என்று முஸ்லிம் மக்கள் கட்சியின் பிரதித் தலைவர் மௌலவி அஸ்வர் பாக்கவி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர்ச் சூழ்நிலை இல்லாமல் எவரும் எங்கும் செல்லலாம் என்ற சூழலில் மதத் தலங்களுக்குப் பாது காப்பில்லை என்பது நாட்டின் ஸ்திரத் தன்மையை கேள்விக்குட்படுத்துகின்றது. மக்கள் தத்தமது சமயங்களைப் பின்பற்றுவதோடு பிற மதங்களுக்கும் பாதிப்பில்லாமல் நடக்க வேண்டும். அப்போதுதான் நாட்டில் உண்மையான சமாதானம் நிலவும்.

நாட்டில் எந்தப் பள்ளிவாசல்களும் தாக்கப்படவில்லை என்று கூறிய அரசு இந்தத் தாக்குதல்களையும் மறைக்க முற்படலாம்.

பள்ளிகள் தாக்கப்படும் போது மௌனமாக இருந்த அரசசார்பு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனியாவது தமது கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும்.- என்றார். (ச-ரி)


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

கதிரவேலு
மயில்வாகனம்
(மகான்)

பிறப்பு
01.08.1941

இறப்பு
09.06.2010



மூன்றாண்டுகள் ஆனது ஐயா
புன்சிரிப்பு மண்ணில் புதைந்து.
மூன்றாண்டுகள்
என்ன, மூச்சுள்ள வரை
உங்கள் நினைவுகளுடன் நாம்.

சிவன்கோயிலடி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (38054)(45.6)
குடும்பத்தினர்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்:- 07★04★1942 மறைவு :-07★05★2013
ஊர்காவற்றுறை தம்பாட்டியைப் பிறப்பிடமாகவும்,
யா/ வண்ணார்பண்ணை பெரியதம்பிரான்
கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் ஆறுமுகம் தங்கவடிவேல்

வசந்தம் வீசும் வாழ்வுப் பாதையில்
சுகந்தம் வீசும் உறவுகள் சூழ்ந்து
கண்முன்னே நீங்கள் வாழ்ந்த காலம்
காலதேவனின் கணக்கினால் கனவாகிப் போனதுவே
அன்போடு அரவணைத்து அறிவுரைகள் பல கூறி
பண்புடனே பல வழிகாட்டிச் சென்ற
எங்கள் அன்புத் தெய்வமே!
ஆலமரத்தின் ஆணிவேர் சாய்ந்ததுவே
ஆலமரத்தின் கிளைகளாய் - வாழ
வழிகாட்டலின்றித் தவிக்கின்றோம்
பாசப் பறவைகளான எம்மை - கதறியழ
கைவிட்டு நீர் சென்றதெங்கோ
ஒரு மாதம் என்ன ஓராயிரம் மாதங்கள் செல்கினும் மறவோம்
உங்கள் அன்பு முகம்.

இன்று (06.06.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அழைக்கின்றோம்.

(38001)(2.6)
இல.20, பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.


# களஞ்சியத்துக்கு தீ வைப்பா? நிராகரிக்கிறது இலங்கை அரசு



கொழும்பு, ஜூன் 6
கொழும்புத் துறைமுகத்தில் உள்ள களஞ்சியத்தை அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு மாற்றவே, தீ விபத்து ஏற்படுத்தப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

அண்மையில் கொழும்புத் துறைமுக, கொள்கலன் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ விபத்தில், 600 மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகின.

இது விபத்து அல்ல. இந்தக் களஞ்சியத்தை அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு மாற்றுவதற்கான சதித்திட்டம் என்று அரசின் மீது குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள, துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் திட்ட அமைச்சர் றோகித அபேகுணவர்தன:-

கொழும்பு துறைமுக களஞ்சியத்தை அம்பாந்தோட்டைக்கு மாற்றுவதற்காக, திட்ட மிட்டே தீ வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு நகைப்புக்குரியது.

ஏனென்றால், அம்பாந்தோட்டை துறைமுக முதலாம் கட்டப் பணிகளே இதுவரை நிறைவடைந்துள்ளன. இன்னமும் அங்கு கொள்கலன்கள் ஏற்றி இறக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

கொழும்புத் துறைமுக களஞ்சியத்தை அம்பாந்தோட்டைக்கு மாற்றும் தேவை அரசுக்கு இல்லை. தீ விபத்துத் தொடர்பில் மறைக்க எமக்கு எதுவும் இல்லை.

இதுவரை மேற்கொண்ட விசாரணைகளின் படி, சரியான தகவல்களைக் குறிப்பிடாது அபாய [illegible] இறக்குமதி செய்துள்ளமையே இதுவே விபத்துக்குக் காரணம். -என்றார். (ச)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
30 ∘ 08 ∘ 1927

மறைவு
07 ∘ 05 ∘ 2013



### அமரர் நாகமுத்து கதிரவேலு

இமைகள் மூடித் திறப்பதற்குள்
நாள்களோ முப்பத்தொன்றாயின
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்

(38030)(10.6.3)
596/6, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்,
க.சுதாகரன்
(பேரன் சுஜி சலூன்)



## வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின்
மடியில்
27.10.1938

இறைவன்
அடியில்
17.05.2012

### அமரர் சிவலிங்கம் நடராசா

(இளைப்பாறிய தபால் அதிபர்)
திதி: திரயோதசி [06.06.2013

அன்பின் இலக்கணமாய்
பண்பின் பிறப்பிடமாய்
மக்கள் சேவையே மகேசன் சேவை
என்ற உயர்ந்த நோக்குடனே வாழ்ந்து
துணைவியையும் பிள்ளைகளையும்
வையத்துள் வாழ்வாங்கு வாழ வைத்த பெருந்தகையே
என்றும் எமக்கு துணையாயிருந்து
நல்வழி காட்டிட இறைவனை வேண்டுகின்றோம்.

(37972)(10.6)
"அழகு மாளிகை",
சங்கானை வடக்கு,
பண்டத்தரிப்பு.
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் அலுவலகப் பணியாளராகக் கடமையாற்றும் கணேசு நந்தகுமார் அவர்களின் அன்புத் தாய்

### கணேசு இராசம்மா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும்,
சகல நலன்புரிசங்க
அங்கத்தவர்களும். (38037)

நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்
தெல்லிப்பளை.

## கண்ணீர் அஞ்சலி



மல்லாகம், தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் ஆரம்பகால உறுப்பினரும் ஈழத்தின் புகழ் பூத்த சிற்பக் கலைஞரும் சமூக சேவகனுமாகிய

### லயன் ஏ.வி.ஆனந்தன்

03.06.2013 அன்று காலமானதையிட்டு அதிர்ச்சியும் கவலையுமடைகின்றோம். அன்னாரது ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், அங்கத்தவர்கள், லயன்ஸ் கழகம்,
மல்லாகம், தெல்லிப்பழை. (38024)(6.11)

## கண்ணீர் அஞ்சலி



கரைச்சி கிழக்கு ப.நோ.கூ சங்கத்தின் பணியாளர் இம்மானுவேல் அந்தராஜ் அவர்களின் அன்புத் தந்தை

### அந்தோனிப்பிள்ளை இம்மானுவேல்


(மேசன் செல்வரத்தினம்)

அவர்கள் 04.06.2013 காலமாகிய செய்தியறிந்து நாம் அதிர்ச்சியடைந்துள்ளதுடன் அன்னாரின் பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

கரைச்சி கிழக்கு, ப.நோ.கூ.ச.
வட்டக்கச்சி. (37452) (10,6,3)

பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்,

## இதய அஞ்சலி



கலாபூஷணம் தெல்லிப்பழை துர்க்காபுரம்
சிற்பக்கலைஞர் A.V.ஆனந்தன்

எமது தேவஸ்தானத்தின் தேவைக்குப் பேருதவி புரிந்தவர். கடலும் காற்றும் காவுகொண்ட சுனாமி அனர்த்தத்தை சிற்பமாக வடித்து சிந்திக்க வைத்தவர். ஆண்டுகள் தோறும் அமைதிப் பிரார்த்தனை நடாத்தி, அனைவரது மதிப்பையும் பெற்றவர். சிவத்தமிழ்ச் செல்வி நினைவு விருது பெற்று அறநிதியத்திற்கு ஒரு இலட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கியவர். அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம். (சி/9615)

நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## மரண அறிவித்தல்

### சந்தியாப்பிள்ளை ஜெகசோதிநாதன்



மன்னார் அடம்பனைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தியாப்பிள்ளை ஜெகசோதிநாதன் நேற்று (05.06.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - திரேசம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மருமகனும் இரத்தினசோதியின் அன்புக் கணவரும் ஜெயகௌரி, ஜெயானந்தரூபி, ஜெயகாந்த், ஜெயதர்சினி, ஜெயதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராணி, பாக்கியநாதன், சதானந்தராஜா, ஜெயராணி, ஜெயராஜா, புஸ்பராணி, இன்பராணி, விஜயானந்தராஜா, சுபானந்தராஜா, ஆகியோரின் அன்புச் சகோதரனும் முருகதாஸ், சகிந்திரன், நிசாந்தன் ஆகியோரின் அன்பு மாமனும் சயந்தனின் அன்புப் பேரனும் பத்மசோதி, அற்புதசோதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2013) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 105, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு. (38058)

தகவல்:
குடும்பத்தினர்.

# சங்கக் கிளை உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 06

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அரியாலைக் கிளையில் மா, சீனி மற்றும் பால்மா உட்பட பலவகையான அத்தியாவசியப் பொருள்கள் திருடர்களால் சூறையாடப்பட்டுள்ளன.

அரியாலை மாம்பழம் சந்திக்கு அண்மையிலுள்ள 20 ஆம் இலக்கக் கிளையிலேயே நேற்று முன்தினமிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளையின் வாயில் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மா மூடை, சீனி மூடைகள் பால்மா வகைகள் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்கள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-17)

## 20,000 ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜூன் 06

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் மீள்குடியேறி யு.என்.எச்.ஆர். நிறுவனத்தால் வழங்கப்பட்ட இருபது ஆயிரம் ரூபா கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இதுவரை கொடுப்பனவுகளைப் பெறாத குடும்பங்கள் புதுக்குயிருப்பு பிரதேச செயலகத்துக்கு இன்று காலை 9 மணிக்கு ஆவணங்களுடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஜ-115)

## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் முத்துலிங்கம்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் முத்துலிங்கம் நேற்றுமுன்தினம் (04.06.2013) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் ஸ்ரீமதி அம்மாவின் அன்புக் கணவரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (07.06.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய். (38040)

தகவல்: குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும்

பிறப்பு
06
03
1930

திதி: 08.06.2013

இறப்பு
20
05
2012



அமரர் திருமதி

### ஞானேஸ்வரி இரத்தினம்

20.05.2012 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் திருமதி ஞானேஸ்வரி இரத்தினத்தின் ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அன்னாரது வேலணை இல்லத்தில் இடம்பெற உள்ளது. எனவே உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்னாரது ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

8ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு, வேலணை. (35263)

குடும்பத்தினர்.

## எட்டாவது நினைவலைகள்



மலர்வு
19
07
1952

உதிர்வு
06
06
2005

### முத்து கதிரமலை

(செல்லக்கிளி)

(உரிமையாளர்,
கிருபா கிறசர்,
வல்லைச்சந்தி, அச்சுவேலி)

சிறந்த குடும்பத் தலைவனாக இருந்தவரே
எங்கள் நினைவின் உயிரே
முறையாய் வாழ்ந்து அனைவரையும்
முறைப்படுத்தியவரே
அன்பின் கடலே பண்பின் சிகரமே
பேதமற்ற ஜீவன் உன்னால் அனைவரையும்
அணைத்து வழி நடத்தி உயரவைத்த ஏணியே
பிரிவு உங்கள் உடலுக்கே
உங்கள் நினைவுகள் என்றும்
எங்களுடன் தான் அப்பா
எட்டு ஆண்டுகள் ஆனாலும் உங்களை
வாசலில் நின்று எதிர்பார்ப்போம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

வீரபத்திரர் கோவில் ட்டரங்கு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனம் விற்பனைக்கு

டொல்பின் சுப்பர் GL 3L எஞ்சின் நீட்டு மொடல் No-251. 3979 வவுனியா.

தொடர்பு:- 0776110010

(35996)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## க.பொ.த (உயர்தர) தொழில்நுட்பப் பாடங்களுக்கான புதிய பிரிவு
## ஆரம்பம் 15.07.2013

2013 -2016 கல்வியாண்டில் தொழில்நுட்பப் பிரிவுக்கு அனுமதி விண்ணப்பங்கள் கோரப்படுன்றன.

கல்வித் தகைமை: 2012 க.பொ.த (சா/த) முதலாம் தடவை சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

விண்ணப்ப முடிவு திகதி:19.06.2013

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி: அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

நேர்முகப் பரீட்சையின் மூலம் தகுதியான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(c/9612)
(6.11)

அதிபர்.

## அடகுப் பொருள்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், முல்லைத்தீவு, சாவகச்சேரி, கைதடி, வேலணை, சங்கானை, கிளிநொச்சி தெற்கு, அச்சுவேலி, யாழ்ப்பாணம் - ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறை, கொடிகாமம், மானிப்பாய், நெல்லியடி, திருநெல்வேலி ஆகிய கிளைகளில் 31.03.2012 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 08.06.2013 தொடக்கம் 13.06.2013 (சனி- வியாழன்) வரை காலை 9.00 மணிதொடக்கம் மாலை 7.00 மணிவரை இல.212,214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியா விட்டால்..........

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

(சி/9606) (6.45)

-ஹற்றன் நஷனல் வங்கி


## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

புங்குடுதீவு இறுபிட்டி பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் என ஆலய பரிபாலன சபையும் தேர்த் திருப்பணிச் சபையும்தெரிவித்துள்ளது. (வ-7)

## முன்பள்ளி ஆசிரியருக்கு விண்ணப்பிக்கலாம்

புலோலிமேற்குநாவலர் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தகுதியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், தமிழ் ஆகிய பாடங்கள் அடங்கலாக 3 பாடங்களில் திறமைச் சித்தியும் 3 பாடங்களில் சாதாரண சித்தியும் பெற்றவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை நிலையத்தின் தலைவர், செயலாளர் சனசமூக நிலையம், திருநாவலூர், புலோலி மேற்கு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (வ-422)


## வாடகைக்குத் தேவை

டிமோ பட்டா மாத வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: 0770782255

## வாகனம் விற்பனைக்கு

நிசான் சனி கார் No HJ1(TAFE TRACTOR NO RC) விற்பனைக்கு உண்டு.

T.P- 077 034 6454

(35061)(6.11)

## தேவை

சிறிய FULL BODY A/C வான் மாத வாடகைக்கு அல்லது கொள்வனவுக்கு தேவை.

தொடர்பு: 075 044 2099

(38028)(6.11)

## வீடு வாடகைக்கு

சுன்னாகம் பிரதேச சபைக்கு முன்புறம் இராமநாதன் மகளிர் கல்லூரிக்கு அருகில் 4 அறைகளுடன் கூடிய 10 பரப்பு விஸ்தீரணமுள்ள காணியில் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 078 632 6111
077 971 0760

(6.45)

## கடை வாடகைக்கு

A9 வீதி, 155 ஆம் கட்டை, கிளிநொச்சியில் உள்ள பல்பொருள் வாணிபக் கடை வாடகைக்கு விடப்படும். வீட்டுப் பொருள்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:077 891 4235

(37451)(6.11)

## பசுக்கள் விற்பனைக்குண்டு

* கூடிய அளவு பால் தரும் பசுக்கள்
* குறுகிய காலத்தில் கன்று ஈண இருக்கும் பசுக்கள்
* உயர் ரக ஜேசி இனப் பசுக்கள்

என்பன உடனடியாக விற்பனைக்குண்டு.

(பி.ப.2 மணிக்கு முன் பார்வையிடலாம்)

தொடர்புகளுக்கு:

பஞ்சலிங்கம்
அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம்
அரச வீதி, பண்டாரக்குளப் பிள்ளையார் கோயில்,
நல்லூர்.
077 530 2627

(38052) (10,6,9)

## தேவை

பிரபல கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்துக்கு Foton (சிறிய ரக வாகனம்) வாகனத்துக்கு சாரதி தேவை.

தொடர்பு:
55,57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## விற்பனைப் பிரதிநிதி தேவை

கொழும்பிலுள்ள வாகன பற்றரி, உதிரிப்பாக விற்பனை நிறுவனம் ஒன்றிற்கு ஆங்கிலம், சிங்களம் ஓரளவு தெரிந்த விற்பனைப் பிரதிநிதி தேவை.

தொடர்பு:
077 162 8206, 077 304 7813

(36/13)
(6.11)

## VACANCY

1) North Indian Cook-1
2) Asst Cook-1
3) Kitchen helper -1
4) Room Boys-2

தகுதியானவர்கள் எமது காரியாலயத்திற்கு மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை நேர்முக தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

MANAGER

SUBHAS HOTEL

49, VICTORIA ROAD,
JAFFNA.
T.P- 021 222 4923,
077 398 6075

(C/9608)(6.11)



## FOR HIRE - வாடகைக்கு விடப்படும்

JCB (BACHOE), DOZER (D4E &MINI), EXAVATOR WITH BRAKER (HEAVY & LIGHT), TRACTOR WITH TRAILER OR CARRIER, LORRY WITH FULL BODY, HALF BODY, WITH OUT BODY. CONTRACT FOR LAND CLEANING, LAND SCAPING, FENCING AND PLANTING.

(38036)

எம்மால் கனரக இயந்திரங்கள் மூலம் நிலம் சுத்தமாக்கல், வடிவமைத்தல், வேலியிடல், மரநடுகை என்பனவும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புக்கு: 0722263778, 0714167878

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

# இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை

## 2013 2ம் அரையாண்டிற்கான பயிற்சி நெறி

வளமான வாழ்வுக்கு ஓர் சந்தர்ப்பம்

யாழ் மாவட்டத்தில் தொழில் பயிற்சி வழங்கலில் முதன்மையானதும் அதிக எண்ணிக்கையான தேசிய தொழில் தகமை (NVQ) சான்றிதழ்களை வழங்கியதுமான இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் நடாத்தப்படும் பயிற்சிகளில் பயிலுநர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பம் கோரல்

ஆரம்பம் 01.07.2013

| பயிற்சிநெறி | தகமை | காலம் | பயிற்சி நிலையம் |
|---|---|---|---|
| காய்ச்சி இணைப்பவர் - Welder | தரம் 10 | 6 மாதம் | கைதடி |
| மின்னிணைப்பாளர் - Electrician | தரம் 10 | 6 மாதம் | காரைநகர், சண்டிலிப்பாய் |
| தச்சுவேலை - Carpenter | தரம் 10 | 6 மாதம் | கைதடி |
| மேசன் - Mason | தரம் 10 | 6 மாதம் | காரைநகர் |
| நீர்க்குழாய் பொருத்துனர் | தரம் 10 | 6 மாதம் | கைதடி |
| வெளி இணைப்பு இயந்திர திருத்துனர் | தரம் 10 | 6 மாதம் | வேலனை |
| அலுமினிய பொருத்துனர் | தரம் 10 | 6 மாதம் | கரவெட்டி |
| மோட்டர் சைக்கிள் திருத்துனர் | தரம் 10 | 6 மாதம் | காரைநகர் |
| முச்சக்கர வண்டி திருத்துனர் | தரம் 10 | 6 மாதம் | காரைநகர், கைதடி |
| பெண்கள், சிறுவர்களுக்கான தையலாளர் | தரம் 10 | 6 மாதம் | காரைநகர், பருத்தித்துறை |
| அழகுகலையும், சிகைஅலங்காரமும் - Beautician | G.C.E. (O/L) | 6 மாதம் | சண்டிலிப்பாய் |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் - ICT | G.C.E. (O/L) | 6 மாதம் | கைதடி, காரைநகர், சுன்னாகம் |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தேசிய சான்றிதழ் NCICT | G.C.E. (O/L) | 6 மாதம் | யாழ்ப்பாணம் |
| கணனி வன்பொருள் திருத்துனர் - Hardware Technician | G.C.E. (O/L) | 12 மாதம் | யாழ்ப்பாணம் |
| குளிரூட்டி, வளிசீராக்கி (AC) திருத்துனர் | தரம் 10 | 12 மாதம் | பருத்தித்துறை |
| தொழிற்சாலை மின்னிணைப்பாளர் - Electrician (3 phase) | G.C.E. (O/L) | 12 மாதம் | கைதடி |
| மோட்டார் வாகன திருத்துனர் | தரம் 10 | 12 மாதம் | கைதடி |

வாழ்க்கைக்கு தொழில் - தொழிலுக்கு ஆற்றல்




பயிற்சி காலம் : 6 மாதம், வெளிக்களப்பயிற்சி 6 மாதம் ( Training )
கட்டணம் : 500.00 (பதிவுக்கட்டணம்) + பாடநெறிக்கட்டணம்
விண்ணப்ப முடிவுதிகதி : 25.06.2013
விண்ணப்ப படிவங்கள் அனைத்து பயிற்சி நிலையங்களிலும், பிரதேச செயலக திறன் அபிவிருத்தி உத்தியோகத்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்

க.பொ.த (உயர் தரம்)
க.பொ.த (சாதாரன தரம்)
பாடசாலை இடைவிலகல்

சரியான தெரிவு

NVQ

தேசிய தொழில் தகமை

உங்களுக்கு சிறந்த எதிர்காலம்


**அரசதுறை வேலைகளுக்கு முதன்மைப்படுத்தப்படும் தேசிய தொழில் தகமை சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளவும் சுயதொழிலை ஆரம்பிப்பதற்கானதுமான பயிற்சிநெறிகள்.**

இணைப்பாளர்
மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம்
இல. 12/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம் 021 222 7949
தொலைபேசி: 071 031 8737
071 031 8865

பயிற்சி நிலையங்கள்
கண்டி வீதி, கைதடி | 021 2057047, 071 0318863
வலந்தலை சந்தி, காரைநகர் | 071 0318862
மின்சார நிலைய வீதி, சுன்னாகம் | 071 0318864
பிரான்பற்று, சண்டிலிப்பாய் | 021 2227373

ஊடக அனுசரனை:
WUSC SRI LANKA Education Changes the World
unicef
Canadian International Development Agency / Agence Canadienne de Développement International
NORWEGIAN MINISTRY OF FOREIGN AFFAIRS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

### 70 வயதுக்கு உட்பட்ட

# ஓய்வூதியம் பெறுவோருக்கு தொழில் முயற்சிக் கடன்

அச்சுவேலி, ஜூன் 6


ஓய்வூதியம் பெறுவோருக்கு வாழ்வாதாரமேம்பாட்டுதொழில் முயற்சிக் கடனாக ஐந்து லட்சம் ரூபா வழங்கப்பட வுள்ளது. 70 வயதுக்கு உட்பட்ட ஓய்வூதியர்கள் இலகு நடைமுறையில் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

விவசாய நடவடிக்கை, கோழி வளர்ப்பு, பால்மாடு வளர்ப்பு மற்றும் சிறுதொழில் முயற்சிக்காக கடனைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

ஓய்வூதியர்கள் "அரசசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின்" பிரதேச செயலர் பிரிவு கிளை நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு கடன் பெறுவதற்கான மேலதிக ஆலோசனை வழி காட்டல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கடன் பெறும் ஓய்வூதியர்கள் மாதாந்தம் கடனுக்குச் செலுத்த வேண்டிய தொகையை அவர்களின் சொந்த விருப்பத்துக்கு அமைய ஓய்வூதியத்தில் இருந்து செலுத்துவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. (ந-11)

## வதிவிடப் பயிற்சி நெறி



வட மாகாண சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்ட ஐந்து நாள்கள் வதிவிடப் பயிற்சி நெறியின் இறுதிநாள் நிகழ்வில் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் உரையாற்றுகிறார். அருகில் உளநல மருத்துவர் எஸ்.சிவயோகன், யுனிசெவ் நிறுவனப் பிரதிநிதி ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். (ஒ-9)

# சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளில் ஒழுங்கான பயிற்சிகள் இல்லை

### யாழ்.போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணத்திலுள்ள சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளால் இங்குள்ள மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனச் சாரதிகளுக்கு ஒழுங்கான பயிற்சிகள் கிடைக்க வில்லை. இங்கு விபத்துகள் அதிகரிப்பதற்கு இதுவும் ஒரு காரணம் என்று யாழ்.பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமிந்த சில்வா தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இங்குள்ள சாரதிப் பயிற்சிப் பாடசாலைகள் பயிற்சி பெறச் செல்பவர்களுக்கு ஒழுங்கான திருப்திகரமான பயிற்சியை வழங்கத் தவறுவதை அவதானிக்கவும், உணரவும் முடிகிறது. அதனால் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுபவர்கள் பூரண பயிற்சி இல்லாத நிலையில் வெளியேறுகின்றனர்.

இது தொடர்பில் யாழ்.மாவட்டச் செயலக போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. சாரதி அனுமதிப் பத்திரச் செய்முறை பரீட்சையின் போது கூடியளவு அவதானம் செலுத்துமாறு ஒரு மாதத்துக்கு முன்னரே அறிவித்துள்ளோம். பயிற்சிகள் திருப்தியின்மை காரணமாக வெளியேறும் சாரதிகள் தெளிவான அறிவைக் கொண்டிராமல் வீதிகளில் வாகனம் செலுத்துகின்றனர். விபத்துகள் அதிகரிக்க இதுவும் ஒரு காரணம். எனவே சாரதிப் பயிற்சிப் பாடசாலையினர் இது தொடர் பில் அவதானம் செலுத்த வேண்டும்.-என்றார். (த-4)

# அதிபர் நியமனத்தில் அரசியல் தலையீடு நம்பிக்கை இழக்கும் கல்விச் சமூகம்

### அதிபர் சேவை சங்கத் தலைவர் கருத்து

அச்சுவேலி, ஜூன் 6

அதிபர் சேவைக்கான நியமனங்கள் அரசியல் தலையீடு மற்றும் அதிகார துஷ்பிர யோகம் என்பனவற்றால் மேற்கொள்ளப்படும் நிலையானது கல்விச் சமூகத்தை நம்பிக்கை இழக்கச் செய்துள்ளது.

இலங்கை அதிபர் சேவை ஆரம்பிக்கப்பட்டு 28 வருடங்கள் நிறைவடைகின்ற போதிலும் நான்கு தடவைகள் மட்டுமே சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதுவும் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிர காரமே மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு தெரிவித்தார் இலங்கை தரம் பெற்ற அதிபர்கள் சேவை சங்கத்தின் தலைவர் ஏ.சீ.எம். ஜவகர்ஷா. இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்பட்ட அதிபர்சேவையில் உள்ளவர்களுக்கான கருத்தரங்கும் கலந்துரையாடலும் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் அதிபர் எஸ்.நேசராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு "இலங்கை அதிபர் சேவை நியமனமும். சம்பள முரண்பாடும்" என்ற தலைப்பில் ஜவகர்ஷா உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிபர் சேவைக்கான நியமனங்கள் ஆண்டு தோறும் அதிபர் சேவையின் ஆளணி வெற்றிடங்களுக்கு அமையப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு அதில் பெற்ற உயர்புள்ளி அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் என சேவைப் பிரமாணக் குறிப்பு வலியுறுத்துகின்றது. ஆனால் இலங்கையில் 28 வருடகால இடைவெளியில் நான்கு தடவை மட்டும் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதுவும் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரமே நடைமுறைப்படுத்தப்பட்டது. நீதியான முறையில் அதிபர் நியமனம் வழங்குவதற்கு நீதிமன்றத்தில் உதவியை நாடிய ஆசிரியர்களின் செயலானது பாராட்டத்தக்கது. இலங்கை அதிபர் சேவையில் நாடளாவிய ரீதியில் 16, 512 பேர் இருக்க வேண்டும். ஆனால் தற்போது 10, 500 பேர் மட்டுமே உள்ளனர்.

> அதிபர் சேவைக்கான நியமனங்கள் ஆண்டு தோறும் அதிபர் சேவையின் ஆளணி வெற்றிடங்களுக்கு அமையப் போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு அதில் பெற்ற உயர்புள்ளி அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்

அதிபர்களில் பலருக்கு பதவி உயர்வுகள், தடை தாண்டல் போன்ற விடயங்களில் தெளிவில்லாத நிலை காணப்படுகின்றது. இது அவர்களைக் குழப்பத்துக்கு உள்ளாக்குவதுடன் ஏனைய ஆசிரியர்களையும் குழப்பத்துக்கு உள்ளாக்கி விடுகின்றது.

கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு விதிவிலக்காக பதவி உயர்வு வழங்குவதை வன்னி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கள நிலையைக் கருத்தில் கொண்டு விசேட ஏற்பாடுகளின் கீழ் ஏற்றுக் கொள்ளலாம். ஏனைய பிரதேசங்களைப் பொறுத்த வரையில் ஏற்றுக்கொள்ள முடியாது. சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமையவே அதிபர் சேவை நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசேப் ஸ்ராலினும் இங்கு உரையாற்றினார். (க-11)




பாராட்டி வாழ்த்துகின்றோம்
உரும்பிராய் சர்வ வல்லவர் ஜெப ஆலயத்தின் சகோதரன்
**அன்ரனி அபியூட்**
அவர்கள் இன்று (06.06.2013) வியாழக்கிழமை போதகராக திருநிலைப்படுத்தப்படுவதையிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இவரது தேவ பணி வெற்றி சிறக்க மனமார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள்:- போதகர்கள், ஊழியர்கள், விசுவாசிகள், சர்வவல்லவர் குடும்பம்.



வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய
வருடாந்த மஹோற்சவ
11 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்
காலம்: 06. 06.2013 வியாழக்கிழமை
காலைப் பூசையினைத் தொடர்ந்து மதியப் பூசை இடம்பெறும் அதனைத் தொடர்ந்து அன்னதானம் இடம்பெறும்

நிகழ்ச்சி நிரல்
மேளக் கச்சேரி மாலை 8.00 மணிக்கு
தென் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட தவில் வித்துவான்
அர்த்துவா மங்கலம் கலியமூர்த்தி
பழனி மகன் பஞ்சமூர்த்தி (குணம்) குழுவினர் (கைதடி)
கோவிந்தசாமி மகன் மாக்லையா குழுவினர் (இணுவில்)
V.K.பஞ்சமூர்த்தி மகன் குமரன் குழுவினர் (கோண்டாவில்)
இரவு 9.00 மணியளவில் சிறப்பு நிகழ்வாக
தென் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட விஜய் ரீவி புகழ்

மாலைப் பூசை : 05.30 மணிக்கு
கரகாட்டக் காவடியுடன் சுவாமி வெளி வீதியுலா வருதல்
(நாகப்பு- வட்டுக்கோட்டை)

கௌதம், அகிலேஸ், யாழினி, சுகன்யா, அனு ஆகியோருடன் யாழ். மண்ணின் புகழ் பூத்த
சாரங்கா
இசைக்குழுவினரின் இன்னிசை [illegible] இடம்பெறும் என்பதனை அறியத்தருகிறோம்



11 ஆம் திருவிழா உபயகாரர்கள்


# திடீரென நிறுத்தம் உணவு வழங்கும் திட்டம்

### வடமாகாண தேசிய பாடசாலைகளுக்கு

நெல்லியடி, ஜூன் 6

உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பாடசாலை உணவு செயல்திட்டத்தினை தேசிய பாடசாலைகளுக்கு தொடர்ந்து வழங்க முடியாதென பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் பின்வரும் பாடசாலைகள் கைவசம் உள்ள உணவுப் பொருள்கள் முடிவடைந்ததும் இந்த செயல் திட்டத்தினை நிறுத்துமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ். இந்துக்கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். வேம்படி உயர்தரப் பாடசாலை, யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ம.வி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய ம.ம.வித்தியாலயம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மன்னார் புனிதசவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார் புனித சவேரியர் பெண்கள் கல்லூரி, மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளே உணவு செயல்திட்டம் நிறுத்தப்படவுள்ள பாடசாலைகளாகும். (ந-ரி)

## வரணியில் மெகா தொலைத்தொடர்பு வசதி

வரணி , ஜூன் 6

வரணிப் பிரதேசத்தில் ரெலிகொம் நிறுவனத்தினர் மெகா லைன் தொலைத் தொடர்புகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்- பிரதேசத்தின் சகல கிராமங்களுக்கும் இந்த இணைப்பு வழங்கப்பட்டு வரு கின்றது.

குடும்பஸ்தர்களின் தேவைக்கு வசதியாக இந்த இணைப்பு கட்டணங்கள் வேறுபட்ட விதத்தில் உள்ளதாக வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். தற்சமயம் வரணி வடக்கு, மாசேரி ,இடைக் குறிச்சி போன்ற கிராமங்களில் சகல பாதைகள், ஒழுங்கைகள் என பரவலாக கம்பங்கள் நடப்பட்டு மின் வயர்கள் இணைக்கப்பட்டு தொலைபேசி இணைப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ 122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளுக்கு உள்ள எல்லா அதிகாரங்களும் 'அவுட்'

## அதற்காகவே புதிய சட்டவரைவு என்கிறார் மனோ

கொழும்பு, ஜூன் 06

மாகாண சபைகளின் எந்தவொரு அதிகாரத்தையும் நாடாளுமன்றப் பெரும்பான்மை மூலம் மீளப் பெறுவதற்கான புதிய சட்டவரைவு அமைச்சரவையில் நாளை (இன்று) சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்தச் சட்ட வரைவு கொண்டு வரப்பட்ட பின்னர் வடமாகாண சபைத்தேர்தல் நடத்தப்பட்டு அதன் பின்னர் பொதுநலவாய மாநாட்டையும் நடத்திவிட்டு இறுதியில் நாடாளுமன்றத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு இருக்கின்ற காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறிக்க அரசு திட்டம் தீட்டியுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன். அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப் படுத்தும் இயக்கம் கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசு கொண்டு வரத் தீர்மானித்துள்ள புதிய சட்ட வரைவின் பிரகாரம் எதிர்காலத்தில் மாகாண சபைகளின் எந்த ஒரு அதிகாரத்தையும் மீளப் பெற்றுக்கொள்ளும் சட்ட வரைவுகள் இன்று இருப்பதைப் போல மாகாண சபைகளின் ஒப்புதலை பெற வேண்டிய அவசியம் கிடையாது என்ற நிலைமையும், சபை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்றால் போதும் என்ற நிலைமையும் உருவாகின்றன.

'திவிநெகும' சட்ட வரைவு கொண்டு வரப்பட்ட போது வடமாகாண சபையின் ஒப்புதலையுப் பெற வேண்டும் என்றும் அந்த ஒப்புதலை ஆளுநர் வழங்க முடியாது என்றும் நாம் நீதிமன்றம் சென்றோம். எமது கோரிக்கையின் நியாயத்தை ஏற்றுக் கொண்டு தீர்ப்பு வழங்கப்பட்டது.

அமைச்சரவைக்கு நாளை (இன்று) கொண்டுவரப்பட்டும் இந்த யோசனை பிறகு சட்ட வரைவாக நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்படும். அரசின் இந்த நயவஞ்சக போக்கை எதிர்த்து வாக்களிக்க வேண்டும்- என்றார். (த-5)

# நாடாளுமன்றத் தேர்தலையே தவிர்க்கச் சொன்னார் ஜனாதிபதி

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 06

கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலேயே, ஜனாதிபதி என்னைப் போட்டியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். ரில்கோ விடுதியில் நேற்றுக் காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்னைப் போட்டியிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் வருமாறு அவர் தெரிவித்தார். இருப்பினும் நான் சொன்னேன், தேர்தலில் போட்டியிட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்டே நாடாளுமன்றம் வருவேன் என்று. மக்கள் என்னை தெரிவு செய்யாவிட்டால் நான் அரசியலை விட்டே ஒதுங்கி விடுவேன்.

வடமாகாண சபைத் தேர்தலில் நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனோ அல்லது தனித்தோ போட்டியிடுவது என்று முடிவெடுக்கவில்லை. எப்படியிருப்பினும் நாங்கள் ஆட்சியமைத்தால் நான் தான் முதலமைச்சர்.

அரசு செப்ரம்பர் மாதம் வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் உறுதியாக இருக்கின்றது. வடமாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நீங்கள் ஆச்சரியமான கருத்துக்களை கேட்க வேண்டி வரும். இனப் பிரச்சினைக்கான தீர்வுக்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைப்பதென்றும் இதில் பங்கெடுக்கும் கட்சிகளை மாத்திரம் கொண்டு அதனை நடத்துவதென்றும், ஜனாதிபதி தலைமையில் நேற்று (நேற்று முன்தினம்) நடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றார் டக்ளஸ். (த-5)



# மரண அறிவித்தல்




திருமதி குழந்தைவேல் பரிமளாதேவி (மணியார்)
(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி குழந்தைவேல் பரிமளாதேவி 05.06.2013 நேற்று புதன்கிழமை காலை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தம்பு குழந்தைவேலின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமகுருசாமி (ஓவசியர்), சவுந்தரம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான தம்பு மாணிக்கவல்லி தம்பதியரின் அன்பு மருமகளும் சிவபாலன் சுதா (ஆசிரியை கனடா), சுபேந்திரன் (கணக்காளர் அவுஸ்திரேலியா), ஜெயந்திரன் (உதவி ஆசிரியர் தினக்குரல்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவபாலன் (பொறியியலாளர் கனடா), காயத்திரி (டாக்டர் அவுஸ்திரேலியா), வனஜா (விரிவுரையாளர், IDM City Campus Wellawatta) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரவீணா, சங்கவி, அஸ்வின், பிரவீன், ஆருஷன், அபிஷனா ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும் திருமதி கந்தவனம் ராஜேஸ்வரி, காலஞ்சென்ற கணேசானந்தன், செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கந்தவனம் (படவரைஞர்), காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம் வள்ளிநாயகி, காலஞ்சென்ற குமாரவேல், ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக வெள்ளவத்தை அன்னாரது இல்லத்தில் இன்று வியாழக்கிழமை வைக்கப்பட்டு பின்னர் அன்னாரது பிறப்பிடமான வட்டுக்கோட்டை இல்லத்தில் 7ஆம், 8ஆம் திகதிகளில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 09.06.2013 ஞாயிறு காலை இறுதிக்கிரியைகள் நடைபெற்று 10.00 மணியளவில் பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகிறோம்.

தகவல்:
பிள்ளைகள்
42, பொஸ்வெல் பிளேஸ்,
வெள்ளவத்தை.

# மரண அறிவித்தல்



## நாகரத்தினம் மதிகரன் (மதன்)

சங்கானையைப் பிறப்பிடமாவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் மதிகரன் (மதன்) 24.05.2013 அன்று விபத்துக்குள்ளாகி 04.06.2013 இல் மரணமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் சுன்னாகம் கொட்டியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். (சி/9619)

# தெரிவுக்குழுவை கூட்டுமாறு ஜனாதிபதி பணிப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்திருக்கிறார்.

அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் ஆளுங்கட்சித் தலைவர்களுடன் முக்கிய கூட்டமொன்றை நடத்திய ஜனாதிபதி, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு தமிழ்க்கூட்டமைப்பு வரும்வரை காத்திராமல் அதனைக் கூட்டுமாறு சிரேஷ்ட அமைச்சர்களுக்குப் பணிப்புரை விடுத்தார்.

13ஆவது திருத்தத்திலுள்ள முக்கிய அம்சங்களான காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டபோது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைக் கூட்டுமாறு தெரிவித்ததுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ வராவிட்டாலும் ஏனைய கட்சிகள் இதனை ஆராயலாமென்றும் ஆலோசனை தெரிவித்துள்ளார். (த-சி)

# கொக்குத்தொடுவாயில் குடியமர்ந்த சிங்களவர்களுக்கு கடும் எதிர்ப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து சிங்கள மக்கள் அங்கிருந்து வெளியேறச் சம்மதித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொக்குத்தொடுவாய் கோட்டைக்கேணிப் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன் சிங்களக் குடும்பங்கள் அத்துமீறிக் குடியமர்ந்துள்ளன.

இவர்கள் அந்தப் பகுதியில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர். இதனால் அந்தப் பகுதி மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் நேற்று மாலை ஒன்று திரண்டு சிங்கள மக்கள் குடியேறியுள்ள பகுதிக்குச் சென்றனர். தங்கள் கடல் எல்லைக்குள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று தெரிவித்த அந்தப் பகுதி மக்கள் சிங்கள மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு வற்புறுத்தினர்.

இதனையடுத்து சிங்கள மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல சம்மதித்துள்ளனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சேருவல பிரதேச சபை உறுப்பினர் [illegible] (த-5)

# '13' ஐ பாதுகாப்பது இந்தியாவின் பொறுப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிலான 6 பேர் கொண்ட குழுவினர் நேற்றுக் குருநகரிலுள்ள வடகடல் நிறுவனத்துக்குச் சென்றனர். அதன் பின்னர் 'ரில்கோ' விடுதியில் படையினராலும், ஈ.பி.டி.பி. கட்சியினாலும் ஏற்பாடு செய்யப்பட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகள் சந்திப்பில் அவர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் சமுகப் பிரதிநிதிகள் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் வடபகுதி மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்திய மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் வந்து மீன்பிடிப்பதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கையில் தற்போது முக்கியமாகவுள்ள பிரச்சினை, வெற்றி கொண்டவர்கள் போரில் தோற்றோரைப் பாரபட்சமாக நடத்துகின்றனர். நீங்கள் இங்கு வந்துள்ள சூழ்நிலையில் மட்டக்களப்பில் பாதுகாப்புப் படைகளின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் ஒரே இரவில் 4 இந்து ஆலயங்கள் இடித்து அழிக்கப்பட்டுள்ளன.

நாங்கள் பௌத்த மதத்தை எதிர்க்கவில்லை. ஆனால் பௌத்தர்கள் இல்லாத இடங்களில் அவர்கள் புத்தர் சிலை வைக்கின்றனர். இராணுவத்தினர் தமிழ் மக்களின் உறுதிக் காணிகளை அபகரிக்கின்றனர் என்று சுட்டிக்காட்டினர்.

இதன் பின்னர் மேற்படி பாரதிய ஜனதாக் கட்சிக் குழுவினர் அரியாலைக்குச் சென்று இந்திய வீட்டுத் திட்டத்தைப் பார்வையிட்டனர். (த-5)

# வாக்காளர் பதிவு சட்டவரைவு அரசமைப்புக்கு உட்பட்டதே

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


அந்த முடிவு சபாநாயகருக்கு அறிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த வாக்காளர்களைப் பதிவதற்கான விசேட ஏற்பாடுகள் சட்டவரைவு தொடர்பாக உயர்நீதிமன்றம் எடுத்துள்ள முடிவுகுறித்து நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் படி 1983 மே முதலாம் திகதிக்கும் 2009 மே 18 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் வேறு எந்த ஒரு தேர்தல் தொகுதியிலும் வாக்காளர்களாகப் பதிவு பெறாதிருப்பின் தம்மைப் பதிவு செய்து கொள்ள முடியும். (து-ப)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## செல்லையா அன்னலட்சுமி



தோற்றம் : 22.10.1934
மறைவு: 07.05.2013

இன்று (06/06/2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

111/10 ஆனைக்கோட்டை ரோட்
கொக்குவில் மேற்கு. (38041)

தகவல்:
S.சந்திரநாதன் (மகன்)
(சாந்தன் கொமினிக்கேசன், கொக்குவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத் தொடர்

# ஜொனியன்ஸ் அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஜுன் 6

ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'ஜொலிஸ்ரார் வெற்றி' கிண்ண கிரிக்கெட் தொடரில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 26.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அதில் காண்டீபன் 118 ஓட்டங்களையும், துவாரகசீலன் 41 ஓட்டங்களையும், லவேந்திரா 23 ஓட்டங்களையும், ரெட்ணம் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழக அணி சார்பில் நிலாஜனன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், நிசாந் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், கரன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 47 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

270 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. அணி 25.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 122 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

நிலாஜனன் 36 ஓட்டங்களையும், சுபா 23 ஓட்டங்களையும் அணிசார்பாக அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பில் சிறிதரன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், அகிலன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், லவேந்திரா 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ற-23)

### 15 வயதுப் பிரிவு சதுரங்கம்

# யாழ்.இந்து சம்பியன்



வலி.வடக்கு, ஜுன் 6

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாகாண கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டிகளில், 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வட மாகாண சம்பியனாகத் தெரிவாகியது.

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டியின் முடிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 27 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், ஹாட்லிக் கல்லூரி 24 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், சென்.ஜோன்ஸ் கல்லூரி 19 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (ற-86)

### சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளன அதிகாரி யாழ்.வருகை

யாழ்ப்பாணம், ஜுன் 6

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம், ஜேர்மன் உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் ஜேர்மன் அரசு ஆகியவற்றின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட உதைந்தாட்ட பயிற்சி நிலையத்தைப் பார்வையிடுவதற்காக, சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆசிய அபிவிருத்தி அதிகாரி டேவிற்·போஷா எதிர்வரும் 9ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

அரியாலையில் அமைக்கப்பட்டுள்ள பயிற்சி மையம், யாழ்.உதைபந்தாட்ட லீக்குக் கென அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்வரவுள்ளடேவிற் போஷாவுடன், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ரஞ்சித் டெற்றிக்கோ, செயலாளர் உபாலி கெவகே ஆகியோரும் வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-23)



வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் 6 ஆவது பெருவிளையாட்டுப் போட்டிகளின் முதற்கட்டப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அதில் 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண்,பெண்களுக்கான கராத்தே போட்டிகள் கடந்த 4ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்றன. (ற-23)



வடமாகாணபாடசாலைகளுக்கு இடையிலான 6ஆவது பெருவிளையாட்டுப் போட்டியில், கடந்த 4ஆம் திகதி யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான கரத்தே போட்டிகளில், 2 ஆம் இடத்தைப் பெற்ற நாச்சிக் குடா அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையை சேர்ந்த எ.கெறிஸ்சோன் தட்டிச் சென்றார். கெரிஸ்சோன் மற்றும் கிளி நொச்சிமாவட்டஉடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் விஷ்ணுமற்றும் பொறுப்பாசிரியர்கள். (ற-23)

### இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜுன் 6

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பத்திநாதன் அருளானந்தம் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகமும்மோதவுள்ளன.(ற-23)

### '20/20' போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜுன் 6

மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படவுள்ள '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் பங்கேற்க விரும்பும் விளையாட்டுக் கழக அணிகள் நாளை 7 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளன. (ற-422)

### 19 வயது ஆண்களுக்கான மேசைப்பந்தாட்டம்

# யாழ். மத்திய கல்லூரி சம்பியன்



வலி.வடக்கு, ஜுன் 6

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாகாண கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டமேசைப் பந்தாட்டப் போட்டிகளில், 19 வயதுப்பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சம்பியனாகத் தெரிவாகியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக நடைபெற்ற ஐந்து செற்களைக் கொண்ட [illegible] [illegible] திய கல்லூரி அணி கைப்பற்றியது.

முதற்சுற்றில் மத்திய கல்லூரி அணி வீரர் எஸ்.சஜீபனும், யூனியன் கல்லூரி அணி வீரர் எஸ்.விதாகரனும் மோதினர். 11:8, 11:8, 11:6 என்ற புள்ளிகள் கணக்கில் மத்திய கல்லூரி அணி வீரர் சஜீபன் வெற்றிபெற்றார்.

இரண்டாம் செற்றில் மத்திய கல்லூரி அணி வீரர் எம்.ஆகாசும், யூனியன் கல்லூரியைச் சேர்ந்த என்.கனிஸ்ரனும் மோதினர். அதில் 11:7, 14:12, 11:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆகாஸ் வெற்றிபெற்றார்.

மூன்றாம் சுற்றில் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜே.ஸ்ராலினும், யூனியன் கல்லூரியைச் சேர்ந்த ரி.சஜீவனும் மோதினர். விறுவிறுப்பாக நடந்த ஆட்டத்தில் 3:1 என்ற ரீதியில் வெற்றிபெற்றார் ஸ்ராலின்.

ஆட்ட நிறைவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 3:1 என்ற செற் கணக்கில் மாகாண சம்பியனாகத் தெரிவாகியது. (ற-86)



### பளுதூக்கும் போட்டிகள் இன்று

யாழ்ப்பாணம், ஜுன் 6

வடமாகாண கல்வித் திணைக்கத்தால் நடத்தப்படும் மாகாணக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பளுதூக்கும் போட்டிகளில், 17 மற்றும் 20 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான பளுதூக்கும் போட்டிகள் இன்று வடமராட்சி வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.


17 வயது ஆண்கள் பிரிவில் வவு.வீரபுரம் மணிவாசகர் ம.வியும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் கலந்து கொள்கின்றன.

பெண்களுக்கான பளுதூக்கும் போட்டிகளில் 17 வயதுப் பிரிவில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மற்றும் முள்ளியவளை விபுலானந்தாக் கல்லூரி என்பன முதற்தடவையாகக் கலந்து கொள்ளவுள்ளன.

அதேவேளை, 20 வயது பெண்கள் பிரிவில் முள்ளியவளை விபுலானந்தாக் கல்லூரி மட்டுமே கலந்து கொள்ளவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிறுதியில் ஷரபோவா



பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் தொடரில் உலகின் இரண்டாம் தர வீராங்கனையும், நடப்புச் சம்பியனுமாக மரியா ஷரபோவோ காலிறுதிக்கு முன்னேறினார்.

மரியா ஷரபோவா (ரஷ்யா) 4 ஆவது சுற்று ஆட்டத்தில் அமெரிக்காவை சேர்ந்த ஸ்டெப்ஹென்சை எதிர்கொண்டார்.

அதில் ஷரபோவா 6:4, 6:3 என்ற நேர் செற் கணக்கில் எளிதில் வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

அவர் காலிறுதியில் ஜெலீனா ஜான்கோவிக்கை (செர்பியா) சந்திக்கிறார். 18ஆம் நிலை வீராங்கனையான அவர் 4ஆவது சுற்று ஆட்டத்தில் 6:0, 6:2 என்ற கணக்கில் ஹாம்டனை வென்று காலிறுதிக்கு முன்னெறியிருந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் 12ஆம் நிலை வீராங்கனையான கிர்லென்கோ (ரஷ்யா) 7:5, 6:4 என்ற கணக்கில் அமெரிக்காவின் பெதானியை வீழ்த்தினார். அவர் காலிறுதியில் 3ஆம் நிலை வீராங்கனையான அசரென்காவை சந்திக்கிறார். (ற)

# அஷ்ரப்புல்லுக்கு இடைக்காலத் தடை

பங்களாதேஷ் அணியின் வீரரும், முன்னாள் அணித் தலைவருமான மொஹமட் அஷ்ரபுல் போட்டி நிர்ணயத்தில் ஈடுபட்டமையை ஒப்புக் கொண்டுள்ளார். இதன்படி, விசாரணைகள் முடிவடையும் வரை அவருக்கு இடைக் காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு இடம்பெற்ற பங்களாதேஷ் பிறீமியர் தொடரின் போது போட்டி நிர்ணயத்தில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்பட்டு மொஹமட் அஷ்ரபுல் மீது சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவு விசாரணை மேற்கொண்டு வருகின்றது.



இந்நிலையில், சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவிடம் மொஹமட் அஷ்ரபுல் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டுள்ளார் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

குற்றத்தை அஷ்ரபுல் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், அவர் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றும் தகுதியை இழந்துள்ளதாகத் தெரிவித்துள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, அதன் காரணமாக விசாரணைகள் முடிவடையும் வரை மொஹமட் அஷ்ரபுல்லைத் தடை செய்வதாக அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் அணி சார்பாக 61 டெஸ்ட் போட்டிகளிலும், 177 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், 23 '20/20' சர்வதேசப் போட்டிகளிலும் பங்குபற்றியுள்ள அஷ்ரபுல், அவற்றில் 13 டெஸ்ட் போட்டிகளிலும், 38 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், 11 '20/20' சர்வதேசப் போட்டிகளிலும் அணித் தலைவராகக் கடமையாற்றியுள்ளார். (ற)

# சாக்ஷி அருகே அமர்ந்தது நான் செய்த தவறு



சென்னை சூப்பர் கிங்ஸ் தலைவர் டோனியின் மனைவி சாக்ஷியுடன் நான் அருகில் அமர்ந்திருந்ததுதான் என் வாழ்வில் செய்த மிகப் பெரிய தவறு என்று கருதுகிறேன் என்று தெரிவித்துள்ளார் சூதாட்ட வழக்கில் கைதாகியுள்ள விண்டு தரா சிங்.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் சூதாட்டத்தில் ஈடுபட்டமைக்காக விண்டூ தாரா சிங் கடந்த வாரம் கைது செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் பிணையில் விடுதலையான அவர் பத்திரிகையாளரிடம் கருத்துத் தெரிவித்தார்.

அப்போது அவர் தெரிவித்தது வருமாறு;

''சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் குருநாத் மெய்யப்பன் எனது நண்பர் மட்டுமே. இதே போல் பாகிஸ்தானை சேர்ந்த நடுவர் அசாத் ரவூப்பும் எனது நண்பர் மட்டும் தான்.

நான் இவர்கள் யாருடனுமோ சூதாட்டத்தில் ஈடுபட்டது கிடையாது.

இந்திய கிரிக்கெட் அணியின் அணித்தலைவரும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவருமான டோனியின் மனைவி சாக்ஷியுடன் நான் அருகில் அமர்ந்திருந்ததுதான் என் வாழ்வில் செய்த மிகப் பெரிய தவறு என்று கருது கிறேன். டோனியின் மனைவி சாக்ஷிக்காக நான் வருத்தப்படுகிறேன்'' என்று கூறியுள்ளார். (ற)

# சம்பியன்ஸ் தொடரில் சாதிப்பேன் - இஷாந்த்

இங்கிலாந்தில் நிலவும் சூழ்நிலையை பயன்படுத்தி சம்பியன்ஸ் கிண்ண தொடரில் சாதிக்க முயற்சிப்பேன் என்று இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா தெரிவித்துள்ளார்.

சம்பியன்ஸ் கிரிக்கெட் (மினி உலகக் கிண்ணம்) தொடர் இன்று இங்கிலாந்தில் ஆரம்பமாகின்றது. இது குறித்து இஷாந்த் சர்மா கூறுகையில்,



''இங்கிலாந்தில் உள்ள சூழ்நிலை சாதகமாக உள்ளது போன்று தெரிகிறது. அதே நேரம் துடுப்பாட்டக்காரர்களுக்கும், பந்துவீச்சாளர்களுக்கும் சவாலாகத் தான் இருக்கும்.

வேகப்பந்து வீச்சாளர்களைப் பொறுத்தவரை அதிக ஓட்டங்களை விட்டுக்கொடுப்பது குறித்து கவலைப்படக் கூடாது. சரியாக பந்து வீசுகிறமோ என்பதுதான் முக்கியம். மேலும் இந்திய அணியில் தற்போதுள்ள புவனேஷ்வர் குமார், வினாய் குமார் மற்றும் நான் உட்பட எல்லோரும் ஒரே வயதுடையவர்கள்.

அதேநேரம் அவர்களை விட எனக்கு அனுபவம் அதிகம். இதற்காக, வேகப்பந்து வீச்சுக்கு நான் தான் தலைவர் என்று சொல்ல மாட்டேன். எனக்கு கொடுக்கப்பட்ட பணியை மட்டும் செய்வேன். அவர்களும் சமீபத்தில் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தி வருகின்றனர்.

மற்றொரு வீரர் இர்பான் பதானுக்கு அதிக அனுபவம் உள்ளது. இங்குள்ள சூழ்நிலையை நன்கு பயன்படுத்திக் கொள்வார்'' என்று தெரிவித்தார் அவர். (ற)

# சமனிலையில் முடிந்தது ஆட்டம்



இங்கிலாந்து, பிரேசில் அணிகள் மோதிய சர்வதேச நட்பு கால்பந்து போட்டி சமநிலையில் முடிந்தது.

பிரேசிலில் உள்ள ரியோ டி ஜெனிரோவில் நடந்த சர்வதேச நட்பு கால்பந்து போட்டியில், பிரேசில், இங்கிலாந்து அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

பின் இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட பிரேசில் அணிக்கு பிரட் (57ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு இங்கிலாந்தின் அலெக்ஸ் (67) பதிலடி கொடுத்தார். தொடர்ந்து ரூனே (79) மற்றொரு கோல் அடிக்க இங்கிலாந்து முன்னிலை பெற்றது. இதற்கு பால் (82) ஒரு கோல் அடித்து கைகொடுக்க பிரேசில் அணி தோல்வியில் இருந்து தப்பியது.

முடிவில், போட்டி 2:2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. (ற)

# சூதாட்ட பின்னணியில் பாகிஸ்தான்?

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நடந்த சூதாட்டம் தொடர்பாக கிரிக்கெட் வீரர்கள் ஸ்ரீசாந்த், அங்கீட் சவான், அஜீத் சண்டிலா உட்பட 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் நடத்தப்பட்டு வரும் விசாரணை மூலம் சூதாட்ட விவகாரத்தில் தினமும் புதிய தகவல்கள் வெளியானபடி உள்ளன.

ஐ.பி.எல். போட்டிகளின் போது ஆட்டநிர்ணயம் நடந்ததில் தாவூத் இப்ராகிம், சோட்டா ஷகீல் உள்ளிட்ட பல நிழல் உலக தாதாக்கள் பின்னணியில் இருந்து செயற்பட்டுள்ளனர் என்பதை டெல்லி பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த நிழல் உலக தாதாக்களுக்கும், கிரிக்கெட் வீரர்கள் ஸ்ரீசாந்த், அங்கீட் சவான், அஜீத் சண்டிலா ஆகியோருக்கும் தொடர்பு இருப்பதற்கான வலுவான ஆதாரங்கள் தங்களிடம் இருக்கின்றது என்றும் டெல்லி பொலிஸார் கூறியுள்ளனர்.

அதையடுத்து 3 கிரிக்கெட் வீரர்கள் உட்பட 23 பேர் மீது மராட்டிய திட்டமிட்ட குற்றங்கள் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டால், அதிகபட்சமாக ஆயுள் தண்டனையும் ரூ. 15 லட்சம் அபராதமும் விதிக்கப்பட வாய்ப்புள்ளது.

ஆட்ட நிர்ணயம் தொடர்பாக கைதான சூதாட்ட தரகர்கள் அனைவரும் ஐ.பி.எல். போட்டி நடைபெற்ற நாள்களில் துபாய், கராச்சி, அபுதாபி, கிபோ நகரங்களில் உள்ளவர்களிடம் அடிக்கடி தொடர்பு கொண்டு நீண்ட நேரம் பேசியுள்ளனர். சூதாட்ட பண பரிமாற்றம் பற்றியே அவர்கள் பேசினார்கள் என்று டெல்லி பொலிஸார் கூறுகின்றனர்.

தற்போது பண பரிமாற்றம் எப்படி நடந்தது என்பதை கண்டுபிடிக்கும் முயற்சிகளில் பொலிஸார் ஈடுபட்டனர். அந்த விசாரணைகளின் போது பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. அமைப்பும், நிழல் உலக தாதாக்களும் சேர்ந்து சூதாட்ட தரகர்களுக்கு கள்ள நோட்டுக்களை கொடுத்து இருப்பது தெரிய வந்தது.

பாகிஸ்தானில் அச்சடிக்கப்பட்ட அந்த கள்ள நோட்டுக்கள் ஆங்காங்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் காத்மாண்டு வழியாக இந்தியாவுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. பின்னர் அந்த கள்ள நோட்டுக்கள் நாடெங்கும் உள்ள முக்கிய தரகர்களிடம் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிரிக்கெட் சூதாட்டத்தில் லட்சக்கணக்கான பணத்தை வெற்றி பெறுபவர்களுக்கு தரகர்கள் கள்ள நோட்டுக்களை கொடுத்தனர். இப்படி நாடெங்கும் உள்ள தரகர்கள் மூலம் கள்ள நோட்டுக்கள் புழக்கத்துக்கு விடப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

கிரிக்கெட் சூதாட்ட தரகர்கள் அனைவரும் புத்தம் புது கள்ள ரூபாய் நோட்டுக்களை பயன்படுத்தி இருப்பது தீவிர விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்த கள்ள ரூபாய் நோட்டுக்கள் அச்சு அசல் பணம் போலவே உள்ளன. நிபுணர்களால் மட்டுமே அந்த கள்ள நோட்டுக்களை கண்டுபிடிக்கும் வகையில் அச்சிடப்பட்டிருந்தன.

சில தரகர்களின் வீடுகளில் சோதனையின் போது ஏராளமான பணம் பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. அதில் கள்ள ரூபாய் நோட்டுக்கள் உள்ளதா? என்று ஆய்வு நடந்து வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவசரமாக நாடு திரும்பினார் ஹக்கீம்

பலஸ்தீனத்தில் நடைபெறும் சர்வதேச இஸ்லாமிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றிருந்த நீதியமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை காரணமாக அவசரமாக நாடு திரும்பினார்.

இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் மாகாணசபைகள் தொடர்பான அரசமைப்புத் திருத்தம் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளதால் அதில் பங்குபற்றுவது மிகவும் அவசியமென அமைச்சர் ஹக்கீம் தீர்மானித்துள்ளதாலேயே உடனடியாக நாடு திரும்புவதற்கான முடிவை அவர் மேற்கொண்டார்.

## ஈரானிடம் எரிபொருளைப் பெற சில நாடுகளுக்கு அமெ. சலுகை

நியூயோர்க், ஜூன் 06

ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதியைக் கணிசமான அளவில் குறைத்தமைக்காக இலங்கை உள்ளிட்ட 09 நாடுகளுக்கான சலுகையை ஆறு மாத காலத்துக்கு நீடிப்பதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

சீனா, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, தென்கொரியா, துருக்கி மற்றும் தாய்வான் உள்ளிட்ட 09 நாடுகளிலுள்ள வங்கிகளுக்கும் இதில் விலக்களிப்பட்டுள்ளது.

ஈரானிடமிருந்து எரிபொருள் இறக்குமதி செய்வதை வரையறுக்குமாறு அமெரிக்கா கோரியிருந்தது. இவ்வாறு இறக்குமதிகளை வரையறுக்கும் நாடுகளுக்கு அமெரிக்கா சில சலுகைகளை வழங்கி வருகின்றது.

அந்த வகையிலேயே, இந்தியா, இலங்கை, சீனா உள்ளிட்ட சில நாடுகளுக்குத் தொடர்ந்தும் எரிபொருள் இறக்குமதி செய்ய அனுமதியளித்துள்ளது. ஈரான் அணுவாயுதங்களை தயாரிக்கும் முனைப்பில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்து அமெரிக்கா பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஈரானுடனான வர்த்தக உறவுகளைத் துண்டித்துக்கொள்ளுமாறு அமெரிக்கா உலக நாடுகளை வலியுறுத்தி வருகின்றது. இவ்வாறான நிலையில் ஈரானிடமிருந்து பெருமளவு எரிபொருள் கொள்வனவு செய்த நாடுகளுக்கு அமெரிக்கா, கால அவகாசம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

தற்போது பெருமளவான மாணவர்கள் சைபிரசிற்குப் படையெடுக்கின்றனர்.

ஏன்?

O/L மட்டும் போதும்

குறைந்த கட்டணத்தில் போகலாம்

IELTS போன்ற உங்களிற்கு ஒவ்வாத நிபந்தனைகள் இல்லை

பகுதிநேரமாக 20 மணிக்கு மேல் சம்பாதிக்க சட்டரீதியான அனுமதி உண்டு.

இதுவரை 44 பேர் எமது ஆலோசனையில் பறந்துள்ளனர்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

இல.175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090

(38033)

பொருளியற் கல்லூரியின் கண்ணீர் அஞ்சலி



நா.மதிகரன் (மதன்)

24.05.2013 அன்று விபத்திற்குள்ளாகி 04.06.2013 அன்று மரணமான எங்கள் அன்புக்குரிய மதன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இயக்குநர் ஆசிரியர்கள், பணியாளர்கள்.

பொருளியற் கல்லூரி

யாழ். நகர் - இணுவில். (சி/9610)

BARATHY சித்தன்கேணி

புதிய வரவுகள் - 2013

★ O\L - பனரச பேப்பர் - 2013
★ வெற்றிச் சிகரம் - 2013 - II
★ MASTER GUIDE PUBLICATION

ENGLISH MEDIUM BOOKS

GRADE 6 to 11 வரை

MATHS, SCIENCE, CIVIC, GEOGRAPHY.

(சி/9599) (23-6-7)

அன்னை புத்தகசாலை

யாழ்ப்பாணம். 222 9881

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021.222.8093

61, Kachchery-Nallur Road, Jaffna

(ருக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

மணல் மண் வேண்டுமா?

★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?

★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?

★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.

4½ டிரக்டர் 20,500/-

(38019) (10.6)

தொடர்பு:- ராம் 072 63 78 546

Shaam Private Hospital

ஷாம் தனியார் மருத்துவமனை

T.P.:- 021 720 0178, 021 720 1028 தம்பசிட்டி, பருத்தித்துறை.

நான்காம் அகவையில் இனிதே காலடி எடுத்து வைக்கும் எமது மருத்துவமனையில்........

★ வெளி நோயாளர் பிரிவு
★ உள்ளக மருத்துவ விடுதி வசதி
★ மருந்தகம்
★ இரவு நேர வைத்திய சேவை
★ ஆய்வுகூட பரிசோதனைகள்
★ SCANNING
★ ECG

விசேட வைத்திய நிபுணர்கள்

★ பொது வைத்திய நிபுணர்கள்
★ சத்திர சிகிச்சை நிபுணர்கள்
★ மகப்பேறும் பெண் நோயியலும் வைத்திய நிபுணர்
★ கண் சத்திர சிகிச்சை நிபுணர்
★ தோல் வைத்திய நிபுணர்கள்
★ இருதய நோய் வைத்திய நிபுணர்
★ குழந்தை வைத்திய நிபுணர்



ஷாம் தனியார் மருத்துவமனையின் புதிய கிளை நெல்லியடி நகரில்....

இடம்:-கல்லூரி வீதி, வதிரிச் சந்திக்கு அருகில், நெல்லியடி. T.P.021 320 7250

நெல்லியடி நகரில் எதிர்வரும் 12.06.2013 காலை 9.20 முதல் 10.30 மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில் சிவஸ்ரீ மகாகணபதி சிவானந்தராஜா குருக்கள் (J.P.) அவர்களின் அருள் ஆசியுடன் திறந்துவைக்கப்படவுள்ளது.

பிரதம விருந்தினர் Dr.S.ரவிராஜ்
(சத்திர சிகிச்சை நிபுணர், யாழ். போதனாவைத்தியசாலை)

கௌரவ விருந்தினர் Mr.K.பாலசுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர்)

வெளிநோயாளர் பிரிவு
காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை
மற்றும் ECG, இரத்த, சல ஆய்வுகூட பரிசோதனைகள்
சகல வசதிகளுடனும் இயங்கும்

நிர்வாகம்.
ஷாம் தனியார் மருத்துவமனை.

(37961)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.